

சச்சினோடு நடிக்கணும்

# கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 04.04.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



மனங்கவர் மேங்கூஸ்!

லலித் மோடி லாபி!

ஸ்டார் அஃப் தி சீரீஸ் - வாசகர் போட்டி

சென்னைக் காதலன் ஹேடன்!

ஐ.பி.எல். ஸ்பெஷல்

விசிலடித்த தோனி.. வருந்தும் மாதவன்!

# "உலக நன்மைக்காக"

## இந்தியாவிலேயே முதன் முறையாக அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்கும் வகையில்

## "15 லட்சம் ருத்ராக்ஷங்கள்" கொண்ட பந்தலின் கீழ்

1. ஹோமங்களிலேயே தலையாய ஹோமமாக கருதப்படுவது மகாருத்ரஹோமம்
2. இது 150க்கும் மேற்பட்ட வேத விற்பன்னர்கள் கூடி 3 நாட்கள் (6 வேளை நடத்தும் மாபெரும் ஹோமம்)
3. இது அனைத்து தரப்பு மக்களும் கலந்து நடத்தும் வகையில் (சங்கல்பம்) எங்களது ஆருத்ரா சேவா சாரிடபிள் டிரஸ்ட் மூலம் நடைபெற இருக்கிறது.
4. இந்த மஹா ருத்ர ஹோமத்தைப் பற்றி யஜுர் வேதம் குறிப்பிடுகையில் சமகம் (ஒரு மனிதனின் தன்னுடைய தேவைகளாக எதை நினைக்கிறானோ) அதை அனைத்தையும் கொடுக்க வல்லது என கூறுகிறது.
5. ருத்ராக்ஷமானது "முத்து, பவழம், ஸ்படிகம், தாமரை போன்ற மாலைகளை கொண்டு உச்சரிக்கும் மந்திரங்கள் பல மடங்கு பலன்களை அளித்தாலும் அதை விட கோடி மடங்கான பலனை அளிக்க வல்லது என நடராச சதகம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது.
6. இந்த ஹோமம் 15 லட்சத்திற்கு மேற்பட்ட ருத்ராட்சங்கள் கொண்ட பிரமாண்ட பந்தலின் கீழ் இந்தியாவிலேயே முதன் முறையாக நடத்த திட்டமிட்டுள்ளது.
7. இவ்வகையில் நடத்தப்படும் இந்த ஹோமம் இதில் பங்குபெறும் 150 வேத விற்பன்னர்களால் கிட்டத்தட்ட 4 ஆயிரம் முறை உச்சரிக்கப்படும் ருத்ர ஜபமானது 15 லட்சம் ருத்ராக்ஷங்கள் மூலம் கணக்கிலடங்கா மடங்கு பலனை தரும் என்பது உறுதி.
8. இதில் கலந்து கொள்வதன் மூலம் திருமணத்தடை, கல்வி, வேலைவாய்ப்பு, நல்வாழ்க்கை, கடன் பிணி நீங்க, மன அமைதி போன்ற மனிதனின் பலவிதமான நியாயமான தேவைகள் இறையருளால் நிறைவேறும் என்பது நிச்சயம்.
9. இதில் பல்வேறு ஆதீனங்களும், ஆன்மிகவாதிகளும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்கள் அனைவரையும் ஒரு சேர தரிசிக்கும் சந்தர்ப்பமாக இந்த ஹோமம் அமையும்.
10. பல வருடங்களாக தொடர்ந்து செய்யும் ஹோமம் மூலம் பெறப்படும் பலன்களை இந்த 3 நாட்கள் ருத்ராக்ஷ பந்தலின் கீழ் நடைபெறும் ஹோமம் தருவதால், தாங்கள் இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.



மிக பிரம்மாண்டமான

# மஹாருத்ர ஹோமம்

(சென்னையில்)

**நாள்: மே 14, 15, 16 (அட்சய திருதியை)**

**150 வேத விற்பன்னர்களால் 3 நாட்கள் நடைபெறும் ஹோமத்தில் பங்குபெற அரிய வாய்ப்பு...!**

சிறப்பு பங்களிப்பை அளிக்க உழவாரப் பணி, திருப்பணி குழுவினரையும் வரவேற்கிறோம்...

மேலும் விபரங்களுக்கு

**ஆருத்ரா சேவா சாரிடபிள் டிரஸ்ட்®** - சென்னை - 20.

போன்: 044-4550 4330, 91763 62022, 95000 40195, 98401 05060



அடுத்த வாரம்
கல்கி
வழங்கும்
கோடைக்கால கொண்டாட்டம்!
கலக்கல் கலைடாஸ்கோப்!
கோடை நிலவாய்க் குளிர்ச்சி!
மனசுக்கும் உடலுக்கும் மாஸ்டர் ப்ளான்!
அதிரடியாய் 6 வார ஆரவாரம்
நீங்க சொன்னா... நாங்க கேட்போம்!
உங்க பங்களிப்பு என்ன? கோடைகால யோசனைதான் என்ன? யோசனை ஏற்கப்பட்டால் அதுக்கும் பரிசுங்க!
சொல்லுங்க: இ-மெயிலிலும், தபாலிலும்.
இ-மெயில்: kalki@kalkiweekly.com
முகவரி: கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-32.
கூடுதல் விவரங்கள் சித்திரைச் சிறப்பிதழில்...
ஊரையும் உறவையும் தித்திப்பாக்கும்
திருவிழா ஸ்பெஷல்!
ஏப்ரல் 18
பழக்க, வியக்க,
பாய்ச்சலுடன் முன்னேற...
வாசகர்கள் வடிவமைக்கும்
சித்திரைச் சிறப்பிதழ்
கல்கி ஸ்பெஷலாய்...

# ஜாலிலோ ஜிம்கானா...

திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை எப்படியோ அப்படி அமைந்துள்ளது ஸ்ரீலலிதாவில் சுதா சேஷய்யன் அவர்கள் அம்பாளின் திருநாமங்களுக்கு அளிக்கும் விளக்கங்கள். - **பி.ஆர். மயிலப்பன், ஈரோடு** ● **ப**ணமா... இனமா? பென்னாகாரம் ரவுண்ட் அப்பான கல்கியின் இடைத்தேர்தல் ட்ரெய்லர், 'மெயின் பிலிமின் க்ளைமாக்ஸ் எப்படியிருக்குமோ?' என்ற எதிர்பார்ப்பைத் தூண்டி விட்டதே! - **க.சுந்தர், நெய்வேலி** ● **அ**மெரிக்க காஃபி பற்றிய கட்டுரையைப் படித்து ஆள் அம்பேல் ஆகிவிட்டேன். 20 விதம் - 160 விதமுறையா? இதற்காகவே 'அட் எனி காஸ்ட்' கடல் கடந்து செல்ல வேண்டும் ஓர் நாள். - **உமாமோகன்தாஸ், திண்டுக்கல்** ● **ல**ஷாசேகர் எழுதிய டேஸ்டி டூர் படித்ததும் 'உயிருக்காக உணவில்லை; உணவுக்காகவே உயிர் வாழலாம்' எனத் தோன்றியது. - **என்.கௌரி, ஹோசூர்** ● **எ**த்தனை ஜாலி வார்த்தைகள் உள்ளன என்பதை ஜாலியாக எண்ண வைத்து விட்டீர்கள்! ஜாலிலோ ஜிம்கானா! - **பி.கோவிந்தசாமி, ஊத்தங்கரை** ● **''கோ**யிலைப் போன்ற சட்டமன்ற வளாகத்தை அமைத்துவிட்டு, ஜனநாயக நல்மரபுகள் என்ற தெய்வத்தைக் கொலுவிருக்கச் செய்யாமல், கருவறையைக் காலியாக வைத்திருப்பதில் அர்த்தமில்லை'' என்ற கூற்று உண்மையே! - **கு.ப. இரகுநாதன், பூவிருந்தவல்லி**

## வாசகர்களே!

**www.kalkionline.comஇல் உங்கள் புதுப்புனல் கருத்துகளைப் பொங்கப் பொங்கப் பதிவுசெய்யலாமே. பதிவாகும் சிறந்ததொரு கடிதத்துக்குக் கிழக்கு பதிப்பகம் வழங்கும் ரூ.250/- மதிப்புள்ள புத்தகங்கள் பரிசு!**

● **'இ**ரும்புக்கோட்டை முரட்டு சிங்கம்' குறித்த சிம்புதேவனின் முன்னோட்டம் ரசிக மனங்களை, காந்தம் போல கவர்ந்து கொண்டது! - **எம்.சம்பத், வேலாயுதம் பாளையம்** ● **டே**ஸ்டி டூர் பகுதியில் ஸ்வீட் ஆகிய லேடி கினி (அ) மால்புவா செய்முறை தித்தித்தது! தயாரித்து உண்ண வேண்டும். - **இந்திரன், நாகர்**



**கல்கி இணைய இதழில் சிறந்த கடிதம் எழுதி கிழக்குப் பதிப்பகத்தின் ரூ.250/- மதிப்புள்ள நூல்களைப் பரிசாகப் பெறுபவர் சென்னையைச் சேர்ந்த என். சபாபதி**

---

கோவில் ● தராகவின் பதிலில் ஐ.பி.எல்.போட்டி தேவைதானா என்று கேட்டுவிட்டு அடுத்தவாரம் ஐ.பி.எல். ஸ்பெஷல் என்பது உங்களுக்கு முரணாகத் தோன்றவில்லையா? - **கே.என்.சுப்பிரமணியன், சென்னை** ● 'இல்லாமற்போன எவராலும் பிரபஞ்சம் இருண்டு விடுவதில்லை' என்கிற வரிகளோடு வந்த ப்ரணாவின் கவிதை இதம்! - **வீ.சிவசங்கர் கள்ளக்குறிச்சி** ● காலாவதியான மருந்துகளை விற்பனை செய்பவர்களைக் கண்டு பிடித்து நாம் அவர்களை அடிப்பதைவிட இந்திய தண்டனை சட்டம் (IPC) பகுதியில் என்ன தண்டனை வழங்க வேண்டும் என தராக கூறியது நியாயம்.- **எம்.கே. அருள்ராஜா, அரியலூர்** ● ஏதேனும் புத்தாடை அணியும்போது எவ்வளவு பேரானந்தம் பொங்கி வழியுமோ அவ்வளவு ஆனந்தம் என் உள்ளத்தில் வழிந்தது. கல்கியால் நெய்யப்பட்டிருந்த புதிய பகுதிகளைக் கண்டதும்! - **சி.கலைவாணி, வேலூர்** ● பென்னாகரம் 'இடைத்தேர்தல் ட்ரெய்லர்' படித்தேன். தேர்தல் கேலிக்கூத்துக்கள், கட்சிகளில் உட்குத்து வேலைகள், தொகுதியின் நிலைமை ஆகியவற்றை (இது ஜாலி ஸ்பெஷல் என்பதால்) ஜாலியாக விளக்கி விட்டீர்கள்.- **எஸ்.ராமசாமி, ஈரோடு**

## பரிசுக் கடிதம்

**கிழக்குப் பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள நூல்கள் பரிசு பெறும் கடிதம்:**

'கோயில், கொடியவர்களின் கூடாரமாகி விடக் கூடாது' என்பது கலைஞரின் பராசக்தி பட வசனம். சட்டமன்றமும் ஒரு கோயில் போன்றது. அங்கே ஜனநாயக நெறிமுறைகள் எனும் தெய்வம் வீற்றிருக்கிற கருவறை இருக்கவேண்டும் என்றும் அது பண்பற்ற செயல்களின் புகலிடம் ஆகிவிடக் கூடாது என்றும் உணர்த்திய தலையங்கம் நியாயமானது!

**- த.சத்தியநாராயணன், அயன்புரம்**


# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
**லக்ஷ்மி நடராஜன்**

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
**கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா**

வடிவமைப்பு :
**எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்**

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

**ஆசிரியர் குழு :**
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

**விளம்பரப் பிரிவு :**
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

**சந்தா பிரிவு :**
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

**விற்பனை பிரிவு :**
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
**www.kalkionline.com**

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
**www.sangapalagai.com**

**சந்தா விவரம் (ஒரு வருடம்) :**
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

# விசில், வீடியோ, வரலாறு!

"இன்னது செய்யவேண்டும்: இப்படி எடுக்க வேண்டும்' என்று திட்டவட்டமான ஐடியா எதுவுமில்லை; விசில் - இதை மையமாக வைத்து எடுக்க வேண்டும்' என்பதுதான் எங்கள் முதல் ப்ளான். அது மிகச் சரியாக ஒர்க் அவுட் ஆகி, இன்று சூப்பர் டூப்பர் ஹிட் ஆகிவிட்டது'' என்கிறார் ஆரம்பம் முதலே சென்னை சூப்பர் கிங் சம்பந்தமான விளம்பரங்களை எடுத்துவரும் 'சோக்கா' என்கிற சொக்கலிங்கம். லயோலா காலேஜில் விஸ்காம் படித்தவர். பத்துப் பன்னிரண்டு வருடங்கள் விளம்பரத்துறையில் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிவிட்டு, அதன் பிறகு சொந்தமாக 'சால்ட் கிரியேடிவ்ஸ்' என்ற கம்பெனி ஆரம்பித்தவர்.

"சென்ற வருடம், ஐ.பி.எல். போட்டிகளை தென் ஆப்ரிக்காவுக்கு ஹைஜாக் பண்ணிக் கொண்டு போய்விட்டதால், இங்கே பெரிய அளவில் விளம்பரத்துக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. இருந்தாலும் , விசில் என்ற ஐடியாவோடு



✱ தோனி

ஜாலியாக எங்கள் சாதாரண 'ஹாண்டி கேம்' ரக வீடியோ கேமராவை எடுத்துக்கொண்டு, சென்னை முழுக்கச் சுற்றி, கிரிக்கெட்டர்களை உற்சாகப்படுத்தும் வகையில் ரசிகர்களை விசில் அடிக்க வைத்து அதைப் படம் பிடித்தோம். ஒரு நிமிடம் வருவதுபோல க்ளிப்பிங்கைத் தயாரித்து சென்னை சூப்பர் கிங் இணையதளத்தில் போட்டுவைத்தோம். அதற்குக் கன்னாபின்னாவென்று ரெஸ்பான்ஸ். பல ரசிகர்கள், தாங்கள் விசில் அடிக்கும் வீடியோவை எடுத்து, 'உங்களுடைய விசில் பிரசாரத்தில் நாங்களும் சந்தோஷமாகப் பங்குகொள்கிறோம்' என்று அனுப்பி வைத்தார்கள்.

அது மட்டுமில்லை. 'சேனல் வீ'க்காரர்கள், எங்கள் விசில் வீடியோவைப் பார்த்துவிட்டு, 'இந்த வீடியோ வைப்ரன்ட்டாக இருக்கிறது; இதை எடுத்தவர்கள் உடனடியாக சேனல் வீயுடன் தொடர்புகொள்ளவும். நாங்கள் எங்கள் சேனலில் அந்த வீடியோவை ஒளிபரப்ப ஆர்வமாக இருக்கிறோம்' என்று தகவல் தெரிவித்தார்கள். உடனே நாங்கள் அவர்களுடன் தொடர்புகொண்டு, விசில் வீடியோவை அனுப்பி வைத்தோம். அதன் பிறகு அது சூப்பர் டூப்பர் ஹிட் ஆனது. ஐ.பி.எல். நிர்வாகமே அந்த விசில் வீடியோவை, ஐ. பி. எல். விளம்பரத்துக்குப் பயன்படுத்திக்கொண்டார்கள்" என்று வரலாறு பதிவுசெய்தார் சோக்கா.

**தோனி அடித்த விசிலில் அவர் தங்கியிருந்த பார்க் ஷெராட்டன் ஹோட்டலே கிடுகிடுத்தது.**

'இந்த வருஷம் 'விசில் போடு' இதுதான் சென்னை சூப்பர் கிங் அணிக்கு 'தீம்' என்று முடிவு செய்து, அதிரடியாக ஏதாவது செய்ய கேமராவோடு தயாரானோம். சென்னை அணியின் கேப்டன் தோனி தொடங்கி, சில ப்ளேயர்களை விசில் அடிக்க வைத்துப் படம் பிடிக்க முடிவு செய்தோம்.






* பாலா மணியன்

சென்னை வந்த தோனியிடம் விஷயத்தைச் சொன்னதும், 'பாஸ்! இப்படி விசில் அடிச்சாப் போதுமா?' என்று ஒரு விசில் அடித்தார் பாருங்கள்! அவர்கள் தங்கி இருந்த பார்க் ஷெராட்டன் ஹோட்டலே கிடுகிடுத்தது! தொடர்ந்து ஹெய்டன், ரெய்னா, பாலாஜி, பதானி, பத்ரி... என்று மற்ற சில கிரிக்கெட்டர்களை விசில் அடிக்க வைத்தோம். பதானியிடம் விசில் அடிக்கச் சொன்னபோது, 'என் மொபைல் ஃபோனில் ரிங்டோன் போன வருஷத்து விசில் போடுதான் பாஸ்!' என்று சொல்லிச் சிரித்துவிட்டு ஃப்ரெஷ்ஷாக விசில் அடித்தார். உபரியாக சின்னதாக ஒரு டியூன் போட்டு, அதற்கேற்ப கிரிக்கெட்டர்களை டான்ஸ் ஆடவைத்துவிட்டது ஒரு கலக்கலான அனுபவம்தான்'' என்கிறார் சால்ட் கிரியேடிவ்ஸ் பாலா மணியன். ○

● பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

*? "அரசு துறவிகளைக் கண்காணித்தால் நாங்கள் அமைச்சர்களைக் கண்காணிப் போம்" என ராமகோபாலன் கூறியிருப்பது பற்றி...?*

! அமைச்சர்களைக் கண்காணிப்பதில் தவறு ஏதும் இல்லை. எதிர்க்கட்சிகளின் பல பணிகளுள் அதுவும் ஒன்றுதான். ஆனால், துறவிகளை அரசு கண்காணிப்பது தவறு என்பதுபோல் ராமகோபாலன் பேசு வதை ஏற்பதற்கில்லை. காலாவதியான போலி மருந்துகளைவிடக் கொடியவர்தாம் போலித் துறவிகள்.

● சி.என். ரமாதேவி,
சென்னை - 70

*? மாநகராட்சிப் பள்ளிகள் இனி சென்னைப் பள்ளிகள் என அழைக்கப் படுவதால், கல்வி கற்பிக்கும் முறையில் மாற்றம் ஏற்படும் என நம்பலாமா?*

! பெயர் மாற்றத்தினால் கற்பிக்கும் முறை மாறப் போவதில்லை. அரசு கல்வித் திட்டத்தை யும், கற்பிக்கும் முறை யையும் புதுப்பித்து அர்த்தமுள்ளதாக்குவதற்குப் பல முயற்சிகள் எடுத்து வருகிறது என்பதை மறுக்க முடியாது. ஆனால் அவை வெற்றி பெறவேண்டுமானால், முதலில் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி முறையும், தேர்வு முறையும் புரட்சிகரமான மாற்றங்களுக்கு உட்பட வேண்டும். ஊழலின்றியும் நடைபெற வேண்டும். இல்லாவிட்டால் பெயர் மாற் றமோ பாடத்திட்ட மாற்றமோ வேஸ்ட்தான்!

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21

*? 'சரத் பொன்சேகா ஒரு முட்டாள்; அவருக்கு மன்னிப்புக் கிடையாது' என்று ராஜபக்ஷ கூறியிருப்பது பற்றி..?*

● திரிக்கப்படும் நோக்கம்!





● ... முரண்!



● மன்னிக்காத..

! முட்டாள்கள் நிச்சயம் மன்னிக்கப்பட வேண்டியவர்கள்; காரணம், அவர்கள் அறியாமையால் பிழை செய்பவர்கள். ஆக, ராஜபக்ஷ தமது ஒரே வாக்கியத்தில் முன்னுக்குப் பின் முரண் படுகிறார்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

*? '63.8 கோடி இந்தியர்களுக்குத்*

நீங்கள் கேட்டவை - தராசு

# மக்கள் பணத்தில் இடைத்தேர்தல் அவசியமா?

**திறந்தவெளிதான் கழிப்பறை' என்ற யூனிசெஃப்பின் அறிவிப்பு பற்றி..?**

! அது மட்டுமல்ல. இந்த விஷயத்தில் இந்தியாதான் உலகிலேயே நெ.1 என்றும் சான்றிதழ் வழங்குகிறது. எத்தனை வளர்ச்சி விகிதக் கணக்குகளை அரசு அடுக்கினாலும், இந்த அவலத்தின் விளைவான பின்னடைவு, அத்தனை முன்னேற்றத்தையும் ரத்து செய்துவிடும். காரணம், பொருளாதார வளத்துக்கு அஸ்திவாரமான மனிதவளத்தின் பெரும்பகுதியை நோயில் தள்ளி சீர்குலைக்கும்.

**● எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி**

**? விமானங்களைக் கடத்துவோருக்கு மரண தண்டனை வழங்குவது என்று மத்திய அமைச்சரவை தீர்மானித்துள்ளதே?**

! விமானக் கடத்தலைத் தவிர்க்க உளவுத்துறைதான் உதவ முடியும். மரண தண்டனை விதிப்பதால் மட்டும் விமானக் கடத்தலை ஒழித்துவிட முடியாது. ஏனெனில், சாவுக்குத் துணிந்துதான் விமானம் கடத்துகிறார்கள். ஆனால், சட்ட முன்' வடிவு நியாயமானது. காரணம், விமானம் கடத்துவோர் தங்கள் உயிரை மட்டுமின்றி, பல நூறு உயிர்களையும் பலிகொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்.

**● ஏ.மகேஸ்வரி, மதுரை**

**? ''முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராக காங்கிரஸ் செய்யும் சதியே பெண்கள் தொகுதி ஒதுக்கீடு மசோதா. இது நாட்டின் ஜனநாயக முறையைப் பாழ்படுத்திவிடும்'' என்று முலாயம் சிங் கூறியுள்ளது பற்றி..?**

! இந்த மசோதாவின் நோக்கத்தை முற்றிலுமாகத் திரித்துப் பேசியிருக்கிறார் முலாயம் சிங் யாதவ். 'முஸ்லிம் பெண்கள் தேர்தலில் நிற்க அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆகவே, அனைத்து மகளிர் ஒதுக்கீடு தொகுதிகளும் முஸ்லிம் அல்லாத பெண்களுக்கே ஒதுக்கப்படும்; இது அநீதி' என்று அவர் கருதுவாரேயானால், அது முற்றிலும் தவறான வாதம். முஸ்லிம் பெண்கள் அரசியலில் ஈடுபட்டு முன்னேற, இந்தத் தொகுதி ஒதுக்கீடு உதவும் என்பதே சரியான எதிர்வாதம்.

**✱ வரிக்குப் பதில் வருமானம்!**




**● கே.எஸ்.கோவர்த்தனன், சென்னை-42**

**? இதுவரை பள்ளியிலிருந்து பட்டப்**

**படிப்பு வரை இலவசக் கல்வி அளித்து வந்த தமிழக அரசு இனி பட்ட மேற்படிப்புக்கும் (எம்.ஏ.) அதை நீடிக்க முடிவெடுத்திருப்பது அவசியமா? உயர் கல்விக்கு அவரவரே கட்டணம் செலுத்திக் கொள்ளக்கூடாதா?**

! பள்ளிப் படிப்பை மட்டுமே அரசு இலவசமாக வழங்கினால் போதுமானது. கல்லூரியில் சேர்ந்து, உயர் கல்வி படிக்க விரும்புவோருக்கு, உதவித் தொகை, கடன் வசதி போன்றவை நியாயமாகக் கிடைக்க வழி செய்யலாம். வேலை செய்து சம்பாதித்தபடியே பகுதி நேரமாகக் கல்லூரியில் படிக்கவும் திட்டத்தை அமுல்படுத்தலாம். இதற்கேற்ப, பள்ளிப்படிப்பின் போதே உழைப்பார்வம் ஊட்டி, சில துறைகளில் பயிற்சியும் தரலாம்.



★ எதிர்ப்பும் எதிர்பார்ப்பும்!



★ கண்காணிப்புக் கணக்கு!

**● எஸ்.ருக்மிணி, சேலம்**

**? ''தி.மு.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தொடர்ந்து நான்காவது ஆண்டாக வரியில்லாத பட்ஜெட் தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது'' என்று நிதியமைச்சர் சொல்கிறாரே?**

! பற்றாக்குறை பயங்கரமாக அச்சுறுத்துவதைப் பற்றி, நிதியமைச்சர்கள் கவலைப்பட்ட காலம் மலையேறிவிட்டது. மேலும், டாஸ்மாக் வருமானமும் அதற்கான வளர்ச்சிக் குறியீடும் இருக்க, வரி எதற்கு?

**● த.ஞானசெல்வன், மும்பை ★**

**? மிருகங்களுக்குக் கனவு வருமா?**

! வரும் என்று அமெரிக்க எம்.ஐ.டி. விஞ்ஞானிகள் நிரூபித்திருக்கிறார்கள். அவை நம்மைப் பற்றி மகா மட்டமான கனவுகள் கண்டால் வியப்பதற்கு இல்லை!

**● வி.ஜி.சத்தியநாராயணன், சென்னை**

**? மக்கள் பணத்தில் இடைத் தேர்தல் அவசியமா? ஒரு சட்டசபை உறுப்பினர் இல்லாவிட்டால் என்ன கெட்டு விடும்?**

! அப்பகுதி மக்களின் நலனை எடுத்துச் சொல்லும் பிரதிநிதி இல்லாமல் போவது, அம்மக்களுக்குச் செய்யப்படும் அநீதி ஆகிவிடும். அந்தப் பிரதிநிதி தம் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுகிறாரா என்பது வேறு விஷயம். சிறப்பாகச் செயல்படக்கூடியவரைத் தேர்ந்தெடுப்பது மக்கள் உரிமை + கடமை.

**● ஜி.சுந்தரராஜன், சென்னை - 42**

**? யோகா குரு பாபா ராம்தேவ் புதிய அரசியல் கட்சி ஆரம்பிப்பதாக அறிவித்துள்ளதை காங்கிரஸ், பா.ஜ.க.வினர் எதிர்த்துள்ளனரே?**

! பாபா ராம்தேவுக்கு அரசியல் கட்சி தொடங்க உரிமை உண்டு. யாரும் தடுக்க முடியாது. மதத்தின் பெயரால் அவர் வோட்டுக் கேட்டால், காங்கிரஸ் ஆட்சேபிக்கலாம். பி.ஜே.பி.யால் அதுவும் முடியாது. பாபா ராம்தேவ் அகில இந்திய ரீதியில் எந்த அளவுக்கு மக்கள் ஆதரவு பெறுவார் என்பதே சிந்தனைக்குரியது.

❒ ரூ.150 பரிசு பெறுபவர் :
**சி.என்.ரமாதேவி, சென்னை - 70**

★ ரூ.75 பரிசு பெறுபவர் :
**த.ஞானசெல்வன், மும்பை**







# மோடி மஸ்தான் வேலை!

மந்திரம் போல் காரியம் நடத்துவித்தால் 'என்ன மோடி மஸ்தான் வேலைப்பா!' என்று வியப்போம். இன்று, மோடி என்ற பெயருடன் பொது வாழ்வில் உள்ள இருவர் நம் நாட்டில் சர்ச்சைகளுக்கு மத்தியிலும் சாதனைக் கொடியை ஏற்றிப் பறக்க விட்டிருக்கிறார்கள். ஒருவர் குஜராத் முதல்வர். மற்றவர் லலித் மோடி.



லலித் மோடி

உத்தரபிரதேசத்தில் புகழ் பெற்ற நிறுவனம், மோடி என்டர்பிரைசஸ். லலித் மோடியின் தாத்தாவான ராஜ் பகதூரால் 1933ல் தொடங்கப்பட்டது. உரங்கள்,- புகையிலை, டீ, பானங்கள், மார்க்கெட்டிங், கல்வி... எனப் பல துறைகளில் உள்ள அந்த நிறுவனத்தின் மதிப்பு 4000 கோடி. ஆரம்பத்தில் பள்ளிக்குச் சரியாகச் செல்லாத மோடியை அமெரிக்காவுக்கு அனுப்பிப் படிக்க வைத்தார்கள். வடக்கு கரோலினாவில் உள்ள டியூக் பல்கலைக்கழகத்தில் பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன் படித்த மோடி, அமெரிக்காவில் உள்ள டிஸ்னியில் வேலைக்குச் சேர்ந்தார். டிஸ்னிக்குச் சொந்தமான ஈ.எஸ்.பி.என். சேனலை, இந்தியாவுக்குக் கொண்டு வந்து கிரிக்கெட் ஆட்டங்களை ஒளிபரப்ப வழி வகுத்தார். இந்திய கிரிக்கெட்டோடு அவர் நெருக்கமானது அப்போது தான்.

ஐ.பி.எல். ஸ்பெஷல்

தொண்ணூறுகளில்... ப்ரொஃபஷனல் கிரிக்கெட் லீக் என்றொரு போட்டியை இந்தியாவில் தொடங்க நினைத்தார் மோடி. ஆனால், இந்திய கிரிக்கெட் வாரியத்திலிருந்த பலரின் சூழ்ச்சிகளால், அவரால் அதைச் செய்ய முடியாமல் போனது. இதன்பின் 'ராஜஸ்தான் கிரிக்கெட் அமைப்புத் தலைவர் ஆனார். 'ராஜஸ்தான் கிரிக்கெட் அமைப்பு மிகவும் இறுக்கமானது. அங்கு நான் மோடி என்கிற பெயரைப் பயன்படுத்தாமல் உள்ளே நுழைந்தேன்' என்கிறார் லலித் மோடி. அங்கிருந்து நேராக இந்திய கிரிக்கெட் வாரியத்துக்குள் (2005) நுழைந்தார். இந்திய கிரிக்கெட் வாரியத்தில் நடந்த டால்மியா வெர்ஸஸ் சரத் பவார் போட்டியில் பவாருக்கு ஒத்துழைப்புக் கொடுத்து, தேர்தல் மூலமாக டால்மியாவை வெளியேற்றினார். டால்மியா ஓர் அசைக்கமுடியாத சக்தி என்கிற நிலையை மோடி வந்துதான் மாற்றமுடிந்தது.

மோடி, கிரிக்கெட் வாரியத்தின் துணைத் தலைவரான பிறகு வாரியத்தின் சம்பாத்தியம் ஏழு மடங்கு அதிகமானது. 'தொலைக்காட்சி நிறுவனங்களும் இடைத்தரகர்களும் கிரிக்கெட் வாரியத்தை விடவும் அதிகம் சம்பாதித்தார்கள்.

அதைத்தான் நான் வந்து மாற்றினேன். கடந்த முப்பது வருடங்களாக இங்கிலாந்தும் ஆஸ்திரேலியாவும்தான் அதிக பணம் சம்பாதித்தன. இந்தியாவில்தானே கிரிக்கெட் ரசிகர்கள் அதிகம்? நியாயமாகப் பார்த்தால் நாம் தானே மிக அதிகமாகச் சம்பாதிக்கணும்? இந்த யோசனைதான் பல காரியங்களைச் சாதித்துக் கொடுத்தது' என்கிறார் மோடி. கிரிக்கெட் ஆட்டங்களின் தொலைக்காட்சி உரிமம் தொடர்பாக அவர் முன் வைக்கிற தொகை பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இன்றைக்கும் உரிமம், ஏலம் போன்றவற்றில் மோடி சொல்கிற தொகை எல்லோரையும் கொஞ்சம் அசைத்துப் பார்க்கும். 2006ல் இந்திய கிரிக்கெட் வாரியத்தின் வருமானம் 600 கோடி. ஆனால், அடுத்த ஒரே வருடத்தில் அது இரண்டு மடங்கானது. 2006லிருந்து ஸ்பான்ஸர் மூலமாக கிரிக்கெட் வாரியத்துக்குத் திகட்டும் அளவுக்குக் கோடிகள் கொட்டிக்கொண்டிருக்கின்றன. அத்தனையும் மோடியின் விரல் அசைவில் நடக்கிற காரியங்கள்.

இரண்டாவது ஐ.பி.எல்-ன் போது கடுமையான சோதனைகள் ஏற்பட்டன. பொதுத்தேர்தலினால் இந்தியாவில் நடத்தமுடியாத சூழல். மோடி இறுதி வரை முயன்றும் சூழல் சாதகமாக அமையவில்லை. உடனே போட்டியை தென்ஆப்பிரிக்காவுக்குத் திருப்பினார். முதல் ஐ.பி.எல். போலவே இரண்டாவது ஐ.பி.எல்-லும் பெரிய வெற்றி.

இப்போது ஐ.பி.எல்-க்கு இந்தியாவில் மட்டுமில்லாமல் உலகமெங்கும் ரசிகர்கள்.

**இதோ எஸ்.எஸ். பிள்ளை!**




• எஸ்.எஸ். பிள்ளை

கல்கி (21.3.10) இதழில் எஸ்.எஸ்.பிள்ளை பற்றிய பெட்டிச் செய்தியில் இடம் பெற்றிருக்கும் படம் அவருடையது இல்லை. அது தியாகி அருணாசலம் பிள்ளையின் படம்.

- காந்தி, சென்னை



# 'பல்'லேலக்கா!





டாக்டர் யஷ்வந்த்

"உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் பற்களையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்வது. ஆரோக்கியமற்ற பற்கள் பல நோய்களின் ஆரம்பப் புள்ளி" என்கிறார் அடையாறு பரசு டென்டல் கேர் மருத்துவமனையின் மருத்துவர் யஷ்வந்த்.

"பல் ஆரோக்கியம் சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை அனைவருக்கும் முக்கியம். குறிப்பாகப் பெண்களுக்கு வாழ்க்கையில் ஒவ்வொரு பருவத்தின்போதும், பற்களில் வேறுபாடு தெரிய ஆரம்பிக்கும். ஒரு பெண் பூப்படையும்போது ஈறுகளில் திடீரென வீக்கம் மற்றும் mouth ulcer என சொல்லக்கூடிய பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

கர்ப்ப காலத்தில் பல் ஆரோக்கியத்தில் கர்ப்பிணிகளுக்கு சற்று அதிக அக்கறை தேவை. இந்தச் சமயத்தில், சில பெண்களுக்கு ஈறுகளில், Pregnancy tumours என சொல்லக்கூடிய கட்டிகள் வரலாம். Morning sickness என சொல்லக்கூடிய, கர்ப்ப காலத்தில் வாந்தி அதிகம் எடுக்கும் பெண்களுக்குப் வாய் பகுதியில் அரிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பு அதிகரிக்கும். இதைத் தவிர்ப்பதற்காக, பேக்கிங் சோடா மற்றும் தண்ணீரைக் கலந்து, அதைப் பற்களில் இருபது நொடிகள் தேய்த்துவிட்டுப் பின் வாயைக் கொப்பளிக்கணும்" என்கிறார் யஷ்வந்த்.

''கருவுற்றிருக்கும் தாயிடமிருந்து கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 270 மில்லி கிராம் என்ற வீதத்தில் கால்ஷியம் செல்கிறது. தினம் 1,500 மில்லி கிராம் முதல் 2,000 மில்லி கிராம் அளவு வரை கர்ப்பிணிப் பெண் கால்ஷியம் எடுத்துக்கொண்டால், குறைப் பிரசவத்தைத் தடுக்கலாம். கர்ப்ப காலம் தொடங்கி, குழந்தைக்குத் தாய்ப் பால் ஊட்டும் காலம் வரை கால்ஷியம் சத்து நிறைந்த உணவை உட்கொள்ளவேண்டும்'' என பளிச் டிப்ஸூம் தருகிறார் பரக கிளினிக் மருத்துவர் யஷ்வந்த்.

**- நளினி சம்பத்குமார்**

### கருகரு ரகசியம்!

**வ**ழுக்கைத் தலையுடன் வலம் வந்து கொண்டிருந்த அதிரடி ஆட்டக்காரர் சேவாக்கின் தலையில் இப்போது கருகரு வென முடி. மனைவியின் பேச்சைக் கேட்டு துபாய் சென்று சிகிச்சை மேற்கொண்டார். குவிகின்றன விளம்பர வாய்ப்புகள்!

- நிலாரசிகன்






**கல்கி**





**2010 ஏப்ரல் 4**
**விரோதி பங்குனி 21**
**மலர் : 68**
**இதழ் : 36**



தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா — *பாரதியார்*


## உச்சகட்ட அதிர்ச்சி!

குஷ்பு தெரிவித்த கருத்து பற்றிய வழக்கு உச்சநீதிமன்றம் வரை சென்றது அதீதம். ஆனால் அந்த அதீதத்தைத் தூண்டியது இன்னொரு அதீதமே. திருமணத்துக்கு முன் சேர்ந்து வாழ்வது தவறல்ல என்ற குஷ்புவின் கருத்தை எதிர்த்து, இருபது கிரிமினல் வழக்குகள், பல்வேறு நீதிமன்றங்களில் பதிவாகின. வழக்கு தொடர சட்டத்தில் இடமில்லை என்று கீழ் நீதிமன்றங்களே தள்ளுபடி செய்திருக்கலாம்! அவை அவ்வாறு செய்யாததால், அத்தனை வழக்குகளையும் தள்ளுபடி செய்யக்கோரி குஷ்பு உச்சநீதிமன்றத்துக்கு மனுசெய்ய வேண்டியதாகிவிட்டது!

தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ள போதிலும் உச்சநீதிமன்றம் சில கேள்விகள் எழுப்பி சில அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறது. அது கூறியிருப்பது போல், குஷ்புவுக்குக் கருத்துச் சுதந்திரம் உண்டு தான். ஆனால், சமூக அமைப்பின் ஊடுபாவுகளைச் சோதனைக்குள் ளாக்கும் தனிப்பட்ட கருத்துகளைப் பொதுவிடங்களில் தெரிவிக்கிற போது, எதிர்ப்புகள் எழத்தான் செய்யும். சட்டரீதியான கருத்துச் சுதந்திரத்தை, சமூகத்தின் மேன்மைக்குப் பயன்படுத்துவதற்குப் பதில், சமூகத்தின் கட்டமைப்பைக் குலைக்கும்விதமாகப் பயன்படுத்து வது ஆரோக்கியம் அல்ல.

தலைமை நீதிபதியை உள்ளடக்கிய மூவர் அடங்கிய பெஞ்ச், குஷ்பு வெளியிட்ட கருத்து எவ்வாறு சட்டத்துக்குப் புறம்பானதாகும் என்று கேள்வி எழுப்பியதில் ஆட்சேபிக்கவே இடமில்லை. ஆனால்,






'வழக்குப் பதிவுசெய்தவர்களும் வழக்கறிஞர்களும் குஷ்புவின் பேச்சால் எவ்வகையில் பாதிக்கப்பட்டனர்? எத்தனை வீட்டுப் பெண் குழந்தைகள் வீட்டை விட்டு வெளியேறி திருமணமின்றி உறவு கொண்டனர்?' என்றெல்லாம் கேட்டிருப்பது உச்சநீதிமன்றத்தின் கௌரவத்துக்கு ஏற்றதாக இல்லை.

சமூக சீர்கேடுகள் இரவோடு இரவாக நிகழ்ந்து விடுவதில்லை. ஆதர்சங்கள் தவறாக வழிகாட்டும்போது, அவை மெள்ள மெள்ள வேரூன்றுகின்றன என்பது நாம் அனுபவத்தால் கண்டுவரும் உண்மை. இவ்வாறிருக்க, உச்சநீதிமன்றத்தின் விசாரணை வாதங்கள் கவலையளிக்கின்றன. இந்த வழக்கில் தனது நிலைப்பாடுக்கு வலுசேர்க்க, உச்சநீதிமன்றம் புராணத்திலிருந்து ராதா-கிருஷ்ணா உறவை உதாரணம் காட்டுவதோ அதிர்ச்சி தருகிறது. ராதா பாத்திரம் பழைய புராணங்களில் (பாகவதம்) பகிரங்கமாக இடம்பெறவில்லை. ஜீவாத்ம - பரமாத்ம ஐக்கியத்தின் குறியீடாக பிற்காலத்தில் வெளிப்பட்ட கருத்துருவாக்கமே ராதா - கிருஷ்ணா நேச உறவு. இதனைச் சராசரி மானுட இச்சையுடன் ஒப்பிடுவது நீதியல்ல.

சட்டத்தின் துணை கொண்டு வாழ்க்கை தர்மங்களையும் நல்மரபுகளையும் நிலைநாட்ட முடிந்தால் மிக நல்லது. ஆனால், பல சமயங்களில் தனிமனித சுதந்திரமும் சட்டத்தின் ஓட்டைகளும்தான் நீதியை நிர்ணயிக்கின்றன. நமது சட்டத்தின் அமைப்பே இதற்குக் கைகொடுக்கிறது. அத்தகைய தருணங்களில், நீதிமன்றம் பயன்படுத்தும் சொற்களும் வெளியிடும் கருத்துகளும் தீர்ப்புகளைக் காட்டிலும் வலுவானவை. 'உச்சநீதிமன்றமே சொல்லிவிட்டது; திருமணமின்றிச் சேர்ந்து வாழ்வதில் தப்பில்லை' என்று ஒரே நொடியில் வசதிக்காகத் திரித்துப் பொருள் கொள்ளக்கூடிய நிலைமைக்கு இடங்கொடுத்திருப்பது மிகப் பெரிய துரதிர்ஷ்டம். இந்த உரிமத்தை உச்சநீதிமன்றம் ஆசிகூறி அளிக்கவில்லை என்பது இறுதித் தீர்ப்பிலாவது பதிவானால் நல்லது. சமூகத்தின் தார்மிக நெறிகள் சட்டத்துக்கு இணையாக முக்கியத்துவம் வாய்ந்தவை. ○

## வாசகர் வாய்ஸ்

# வரலாறான வ.உ.சி.!

கல்கி (21.3.2010) இதழில் (திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல் - II) வ.உ.சிதம்பரம் பிள்ளை, தம் சொத்துகளை இழந்து, கடைசி காலத்தில் மண்ணெண்ணெய் கடை வைத்துப் பிழைத்தார் என்ற வேதனைச் செய்தியை வெளியிட்டீர்கள்.

அதே சமயத்தில், வ.உ.சி.யும் எனது தாத்தா தியாகி என். தண்டபாணியும் கூட்டாக, சென்னை பிராட்வேயில் லோன் ஸ்குவேர் (Lone Square) எதிரில் அரிசிக்கடை வைத்து வியாபாரமும் செய்தனர்.



ஒரு சில மாதங்களில் அரிசி வியாபாரமும் நஷ்டத்தில் முடிந்தது. தியாகிகளுக்கும் மக்களுக்கும் கடனுக்கு அரிசி விற்றது தான் காரணம். இந்தச் செய்தியை எனது தாத்தா என்.தண்டபாணி பிள்ளை எங்களிடம் அடிக்கடி கூறுவார்கள். இந்தக் கால கட்டத்தில், பிடாரியார் கோயில் தெருவில் உள்ள தாத்தாவின் இல்லத்தில், வ.உ.சி. தம் குடும்பத்துடன் தங்கியதாகவும் கூறுவார்கள். (இந்த வீடு, சென்னை பாரதி மகளிர் கல்லூரிக்குப் பின்புறம் உள்ளது.)

இன்னொரு சமயம், வ.உ.சி அவர்கள், தியாகி என்.தண்டபாணி பிள்ளைக்கு, தமது மகள் திருமண அழைப்பிதழை அனுப்பிவிட்டு, திருமணத்துக்கு எந்தப் பரிசுப் பொருளும் அனுப்ப வேண்டாம், அதற்குப் பதிலாக, பணமாக அனுப்பினால் மகள் திருமண செலவுக்கு உதவும் என்றும் கடிதம் எழுதியதாக எனது தாத்தா என். தண்டபாணி பிள்ளை கூறினார்கள்.

- டாக்டர் எஸ்.கீதாலக்ஷ்மி,
சென்னை - 102

விடுதலை வீரர் வ.உ.சி.யின் பேரன்களில் ஒருவன் நான். கல்கி திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல் - II இதழில் 'வாழ்கிறார் வ.உ.சி.' கட்டுரைச் செய்தி நெஞ்சைத் தொட்டது.

ஆண்டுதோறும் வ.உ.சி அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் -5 மற்றும் நினைவு நாள் நவம்பர் 18 ஆகிய நாட்களில், நாங்கள் குடும்பத்துடன் கோவை மத்திய சிறைக்குச் சென்று வ.உ.சி இழுத்த செக்குக்கு வணக்கம் செலுத்திவிட்டு வருவோம். விரைவில் மத்திய சிறையை மருதமலைக்கு மாற்றிவிட்டு அந்த இடத்தில் தாவரவியல் பூங்கா அமைக்கப் போகிறார்கள். எனவே, கடைசி முறையாக அந்தச் செக்கை வ.உ.சி இழுத்த இடத்திலேயே வணங்கி விட்டு வர (19 பிப்.2010 அன்று) கோவை மத்திய சிறைக்குச் சென்றிருந்தேன்.

அப்போது அங்கிருந்த அதிகாரியிடம் பேசியபோது ''இங்குள்ள சிறை வேறிடத்துக்குப் போகிறது. ஆனால், 'வ.உ.சி. இழுத்த செக்கு மட்டும் தாவரவியல் பூங்காவிலேயே, நினைவுச் சின்னமாய் இருக்கட்டும்; இடம் பெயர்க்க வேண்டாம்' என்பது முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியின் உத்தரவு'' என்று கூறினார்கள். போற்ற வேண்டிய முடிவு.

- ப.ஆழ்வாரப்பன், அன்னூர்

# சச்சினோட நடிக்கணும்!



"ஐ.பி.எல். மேட்ச் பார்க்கறதுக்கு நேரமே இல்லை. ஷூட்டிங், டப்பிங்னு ஓடிக்கிட்டேயிருக்கேன் (நிஜமாவா?) நியூஸ் பேப்பர் பார்த்துத்தான் ஐ.பி.எல். விஷயங்களைத் தெரிஞ்சுக்கிறேன். நான் ராஜமுந்திரி பொண்ணா இருந்தாலும் சென்னை சூப்பர் கிங்தான் என்னோட ஃபேவரிட். தமிழ் ரசிகர்களை ஐஸ் வைக்க இப்படிச் சொல்லலை. சென்னை டீமோட பர்ஃபாமென்ஸ் அப்படி" - இது அஞ்சலியின் எக்ஸ்பர்ட் காமென்ட்ஸ்!

**உங்களுக்குப் பிடித்த கிரிக்கெட் வீரர்?**

"சச்சின்தான். அவர் ஹீரோவாக நடிச்சா, நான் ஹீரோயினியாக நடிக்க ரெடி. பட் கதையும், என் கேரக்டரும் நன்றாக இருக்கணும்."

**நீங்கள் அப்படி ஒன்றும் அழகில்லையாமே?**

"நான் அழகா... இல்லை..?என்றதை உங்களை மாதிரி மீடியாவும், ரசிகர்களும்தான் சொல்லணும். 'அவன் அப்படி ஒன்றும் அழகில்லை'ன்ற ஸாங் 'அங்காடி தெருவி'ல் 'கனி'ங்கற என்னோட கேரக்டருக்காகவே எழுதினது. என்னை ஸ்கிரீனில் பார்க்கறவங்க யதார்த்தமான

அழகுன்னு சொல்றாங்க. இதுபோதும் எனக்கு. முகம் நிறைய மேக்-அப் போட்டு, ஆஸ்திரேலியா லொகேஷன்ல டான்ஸ் ஆடினாத்தான் ஹீரோயின் அழகுன்றது இல்லை.''

**'அங்காடி தெரு'வில் ஹீரோவோடு ரொம்ப நெருக்கமா நடிக்கற மாதிரி இருக்கே...?**

''கதையோட பார்த்தா நெருக்கமா இருக்கறது தெரியாது. மற்றபடி கதைக்கு தேவைப்படும் க்ளாமர் எனக்கு ஓகே.''



**'மகிழ்ச்சி' படத்தின் மகிழ்ச்சியான தருணங்கள்...?**

'' 'மகிழ்ச்சி' படத்தை கௌதமன் இயக்குறார். லைவ்வா நடிப்பும், டய லாக்கும் இருக்கணும்ன்னு எதிர் பார்க்கக்கூடியவர். எல்லாத்தையும் விட, பெரிய மகிழ்ச்சி பாலசந்தரும், பாரதிராஜாவும் இணைஞ்சு நடிக்கற 'ரெட்டச் சுழி' படத்துல நான் ஹீரோயினா நடிக்கறதுதான். என் மேல நம்பிக்கை வைச்ச டைரக்டர் தாமிராவுக்குத்தான் நன்றி சொல்லணும்.''

**உங்களுக்குப் பிடித்த ஹீரோ...?**

''தெலுங்கில் சிரஞ்சீவி. தமிழில் எல்லோருமே...''

(விவரந்தான்)

**- ராகவ்குமார்**



* கங்குலி

ஐ.பி.எல். திருவிழா தொடங்கினாலும் தொடங்கியது - எந்த அணி கோப்பையைக் கைப்பற்றும், இன்றைய மேட்சில் எந்த அணி டாஸில் வெல்லும், எத்தனை பேர் எவ்வளவு ரன் குவிப்பார்கள்... என எல்லாவற்றுக்கும் ஜோசியம் பார்த்துப் பலன் தெரிந்து கொள்வதில், கிரிக்கெட் ஆர்வலர்கள், அஸ்ட்ராலஜி பக்கம் ரொம்பவே சாய்ந்து வருகிறார்கள்.

இதோ உங்கள் பார்வைக்கு, இணையதளங்களில் தென்பட்ட சில ஐ.பி.எல். அஸ்ட்ராலஜி ப்ரெடிக்ஷன்ஸ். நம்புவதும், நம்பாமல் இருப்பதும் உங்கள் சமர்த்து.

டாப் த்ரீ இடங்களைப் பிடிக்கப் போவது 'கொல்கத்தா நைட் ரைடர்ஸ்', 'சென்னை சூப்பர் கிங்ஸ்', மற்றும் 'டெல்லி டேர் டெவில்ஸ்'தானாம். நியூமராலஜி, மற்றும் நிறமாலஜி ஜோசியர்கள் காரணங்களை அடுக்கிக் கொண்டே போகின்றனர். கொல்கத்தா நைட் ரைடர்ஸின்




* தோனி



# ஜோசியம் பார்க்கலியோ ஜோசியம்!

யூனிஃபார்ம் நிறத்தைப் பாருங்கள். சனீஸ்வர பகவானுக்குப் பிடித்தமான பர்ப்பிள் நிற யூனிஃபார்ம் அணிந்திருக்கிறார்கள். அந்த அணியின் காப்டனான சௌரவ் கங்குலியின் பிறந்த தேதி ஜூலை எட்டு. அதுவும் சனீஸ்வரனுக்குச் சாதகமான எண். எனவே, அந்த அணிக்கு வெற்றி வாய்ப்பு எப்படி வேண்டுமானாலும் கிட்டும். சென்னை சூப்பர் கிங்ஸுக்குச் சாதகமாக இருப்பதும், அவர்களது மஞ்சள் நிற யூனிஃபார்ம் தானாம். சூரியனுக்கும், சிங்கத்துக்கும் பிடித்த (?!) மஞ்சள் நிறத்தை அணிந்திருப்பதால், இவர்கள்தான் நிச்சயம் கிரிக்கெட்டில் கிங் என ஆரவாரிக்கிறார்கள்!

நீலநிற யூனிஃபார்மோடு விளையாடும் டெல்லி டேர்




டெவில்ஸ். சுக்ரனுக்குச் (?!) சாதகமான நிறத்தை அணிந்திருப்பதால் அதிர்ஷ்டக் காற்று பலமாக இவர்கள் மீது வீசி, அடிக்கும் பந்துகளும் பலமான பவுண்ட்ரிகளைத் தாண்டி ரன்களாகக் குவியும் என்பது கணமான கணிப்பாம்.

**வா**ஸ்துபடி பாட்ஸ்மேன் கிழக்குப் பக்கம் திரும்பி நின்றாலும், அவர்கள் விளையாடும் மைதானம் தென் மேற்கு திசையில் இருந்தாலும், பாட்ஸ்மேனுக்கு சாதகமாம். வடகிழக்குத் திசையில் இருந்தால் திக்குமுக்காட வைக்குமாம். பந்து வீசறவர் வாய்ல போட்டிருக்கற சாயம் வெள்ளையாய் இருந்தால் எதிராளிக்கு சந்திரதோஷம் பிடிச்சுக்குமே. ஜலதோஷம் பிடிச்சா பரவாயில்லை. ஆனா, சந்திர தோஷம் பிடிச்சா டக்குன்னு டக்அவுட் ஆவார். இப்படி ஏகத்துக்கும் ஏதேதோ கால்குலேஷன்கள் பல இணையதளங்களில் போட்டி போட்டுக்கொண்டு உலகைச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றன.



✱ கம்பீர்

**பை**க்கை அவசரமாகப் பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு சாவி எடுக்காமல்... மீண்டும் ஓடிப்போய் சாவியைப் பிடுங்கிக்கொண்டு மேடை நோக்கி அவசரமாக விரைந்தான் சூர்யா. மைக்கில் யாரோ தேன்மொழியைப் பற்றிப் பேசியது காற்றலைகளில் எதிரொலித்தது. பைத்தியம் பிடிப்பது போன்ற நிலையுடன் அவளைப் பார்க்கக் கூட்டத்தை விலக்கியபடி மேடையை நோக்கி விரைந்தான்.

மேடையில் மந்திரியிடமிருந்து பரிசை வாங்கிய தேன்மொழி, இறங்கும்போதுதான் சூர்யா வருவதைப் பார்த்தாள். சட்டென மனம் புயல் வேகத்தில் சுழன்றது. பின்னாலிருந்த வினோத்தைப் பார்த்து தன் கையைப் பிடிக்குமாறு நீட்டினாள். வினோத் அவள் கையைப் பற்றுவதற்கு முன் அவள் கையே விரைந்து அக்காரியத்தைச் செய்தது.

மேடையருகில் வந்த சூர்யாவின் உள்ளுக்குள் இடியொன்று ஆழமாய் இறங்கியது. அவனைப்



பார்த்தும் பார்க்காதவளாக முடியைக் கோதிவிட்டபடி மேடையிலிருந்து இறங்கும் தேன்மொழியின் அலட்சியம், திடுமென அவன் மனத்துள் பெரும் சுனாமிகளை எழுப்பியது. இன்னும் நெருங்கியவனுக்குப் பின் மண்டை சுரீர் என்றது. அவள் கைகள் அவசரமாக ஒருவனது கைகளைப் பற்றி இழுத்தபடி மேடையை விட்டிறங்குவதைப் பார்த்தபின் சட்டென கால்கள் தளரத் துவங்கின. தன்னை தயார்ப்படுத்திக்கொண்டவனாக, ஒரு வேளை அவர்களுக்குள்ளான நட்பு அத்தகையதாக இருக்கலாம் என, அவனுக்கு அவனே ஒரு சமாதானத்தைத் தேடிக்கொண்டு மேலும் நெருங்க, இப்போது இருவர் பார்வையும் தவிர்க்க முடியாத புள்ளியில் சங்கமித்துக்கொண்டன.



இது யார்? தன் மேல் காதல் கொண்டும்... ஒரே நாளில் சுபாவமே மாறும் அளவுக்குத் தேன்மொழிக்குள் என்ன நடந்தது? குழம்பினான். மேடையை விட்டு இறங்கும்போது, அவள் பார்வை சட்டெனத் தன் மேல் விழுந்து விலகியதை அவன் உணர்ந்தான். ஆனால், அவனோ அதற்காக எந்தப் பிரதியுணர்வும் இல்லாமல், மேடையை விட்டுக் கீழே இறங்குவதைப் பார்த்தபின் அவன் உடல் இன்னமும் பலகீனமாது.

அவனால் ஏற்கவே முடியவில்லை.

தேன்மொழி மிக நல்ல பெண்ணாயிற்றே. அவள் சட்டென இப்படி மாறியதற்கு என்ன காரணம்? இப்படி யோசித்துக்கொண்டே அவன் நெருங்கியபோதுதான், அவள் கைகள் இன்னோர் ஆணின் கைகளை இறுக்கமாகப் பிடித்திருப்பதைப் பார்த்தான். ஒருகணம்தான்... ஒரே ஒரு கணம்தான். இருவரின் இதயத்துள்ளும் எரிமலைகள் இடம் மாறின.

தேன்மொழி, சூர்யாவைப் பார்த்தகணமே அவன் சட்டையை எக்கிப் பிடித்து 'எதற்காகடா என்னை இப்படி ஏமாற்றினாய் ராஸ்கல்...' கேட்க நினைத்தவளுக்கு மூளை ஸ்பீட் பிரேக்கரைப் போட்டது. ம்ம்ஹ்ஹ்ஹூம் இவனை இப்படியே விட்டுவிடக் கூடாது. எதற்காகக் கிடைத்த பர்சை ஒளித்துக்கொண்டான். எதற்காகத் தன்னிடம் இத்தனை நாளாக நடித்தான் என்பதையெல்லாம் தெரிந்துகொண்டு அதன் பிறகுதான் போலீஸில் மாட்டிவிட வேண்டும். இப்படியாக நினைக்கும்போதே அவள் கை அனிச்சையாகக் கூலிங் கிளாஸை எடுத்து மாட்டிக்கொண்டது. காரில் ஏறப்போனவளை சூர்யாவின் குரல் நிறுத்தியது.

**அஜயன் பாலா**

"தேன்மொழி நான் சூர்யா... உங்...கூட கொஞ்சம் பேசணும்."

தேன்மொழி அவனைப் பார்த்தாள். ஆத்திரத்தையெல்லாம் கட்டுக்குள் கொண்டு வந்தாள்.

"கார் பின்னாடி ஃபாலோ பண்றீங்களா... இங்கதான் செயின்ட் தாமஸ் மவுண்ட் தெரியுமில்ல" சொல்லி முடிக்கும் முன்பே கதவைச் சாத்திக்கொண்டாள்.

சூர்யாவுக்கு எல்லாமே இப்போது கிளியராகிவிட்டது. அவள் கூலிங்கிளாஸை ஆட்காட்டி விரலால் அசைத்தபடியான பேச்சு, புதியதாக ஓர் ஆணுடன் காண்பிக்கும் அவள் நெருக்கம்... இவை அனைத்துமே அவனுள் பல விஷயங்களைச் சொல்லின. அவள் தன் மேல் கோபத்தில் இருக்கிறாள். இல்லை... வெறுக்கத் துவங்கிவிட்டாள். காரணம் ஒருவேளை தான் மறைத்த விஷயங்கள் அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும். தன்னை மோசடிப் பேர்வழி என கணக்குப் போட்டிருப்பாள்.

இனி தேன்மொழி தனக்கில்லை... மனத்தில் மிகப் பெரிய பொத்தல்... அந்த பொத்தல் வழியாக உயிர் உடலைவிட்டு வெளியே போய்விடும் போல இருந்தது.

கார் மெயின்ரோடில் ஏற, இவனது பைக்கும் கசாப்பு கடைக்காரனின் பின்பான ஆட்டுக்குட்டியாகப் பின் தொடர்ந்தது. வேகமாக எதிர்ப்படும் வாகனங்கள் அவனது பதட்டத்தை அதிகப்படுத்தின. துவக்கத்திலிருந்தே தன் வாழ்க்கை தன்னிடம் இல்லை என்பதை இக்கணத்தில் உணர்ந்தான். தன் அசலான அப்பா, அம்மா யார் என்ற கேள்விகள் அவன் முன் எழுந்தது. தான் செய்த குற்றம் என்ன? ஏன் இப்படி அலைக்கழிய வேண்டும். மனம் குற்றவுணர்ச்சியில் பரிதவித்தது. முத்துசேகரை தன் வகுப்பு தோழனாகப் பெற்றது குற்றமா? அல்லது அவன் அம்மாவின் பாசத்துக்குத் தான் அடிமையானது குற்றமா? முத்துசேகர் தேன்மொழிக்காக இறந்த போது அவன் அம்மாவின் அழுகை தாளாமல் 'தேன்மொழியை உங்கள் கால்களில் விழ வைக்கிறேன்' என வாக்குத் தந்தது குற்றமா? இல்லாவிட்டால் அந்த வாக்கை மீறித் தேன்மொழியின் மேல் காதல் கொண்டது குற்றமா? இதில் ஏதோ ஒரு பிழை இருக்கிறது.



சிறுவன் யுவராஜ் பல போட்டிகளில் வென்ற கோப்பைகளுடன் தன் அப்பாவிடம் ஓடுகிறான். மகிழ்ச்சியில் தன்னை அப்பா அள்ளிக்கொள்வார் என்கிற அவனது நினைப்பில் மண் விழுந்தது. அப்பா கோபத்துடன் கேட்டார், 'இத்தனை கோப்பைகளில்

அதற்கு தான் மட்டும் பொறுப்பல்லவே? சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும்தான் காரணம். இல்லாவிட்டால் இப்படித் தேன்மொழி - முத்துலட்சுமி எனும் இரு துருவங்களுக்கு இடையில் தான் மாட்ட வேண்டிய அவசியம் என்ன? இது சாபம்தான். ஒருவர் மேல் வைக்கும்

அளவற்ற அன்பும் சாபம்தான். எல்லோருக்கும் இருப்பதுபோல எனக்காக என்னை மட்டுமே நேசிக்கக்கூடியவளாய் மட்டும் ஒருத்தி இருந்திருந்தால், ஒருவேளை இந்த அன்புக்கெல்லாம் ஏங்கியிருக்க வேண்டிய அவசியம் இருக்காதோ என்னவோ... மனம் யோசனையில் இருந்ததேயொழிய முன்னால் சென்ற லாரியிலிருந்து டீசல் எண்ணெய் தார் சாலையில் கீழே கொட்டிச் செல்வதை இவனும் கவனிக்கவில்லை. பைக்கின் சக்கரம் வேகமாக எண்ணெயில் வழுக்க...

பின்னால் ஏதோ பெருத்த சத்தம் கேட்டு வேகமாகச் சென்று கொண்டிருந்த காரை வினோத் ஓரங் கட்டினான். தேன்மொழியும் அவசரமாய் இறங்கினாள். சாலையில் சென்ற வாகனங்கள் ஆங்காங்கு நிறுத்தப்பட, ஆட்கள் விபத்து நடந்த இடத்தை நோக்கி ஓடினார்கள். தேன்மொழி அங்கிருந்தே பார்த்துவிட்டாள். நடுரோட்டில் பைக்கினடியிலிருந்த சூர்யாவின் உடல் முழுக்கச் சிவப்பாக மாறிக் கொண்டிருந்தது. அவ்வளவுதான், கண்கள் இருட்டத் துவங்க அப்படியே காரின்மேல் சாய்ந்து சரிய...

> ஒன்றாவது கிரிக்கெட்டில் வாங்கியதா? நீ ஜெயிக்க வேண்டிய இடம் கிரிக்கெட்.' அவரது அறிவுரையை ஏற்று கிரிக்கெட்டில் மட்டுமே கவனம் செலுத்தி உலகின் தலைசிறந்த ஆட்டக்காரரில் ஒருவரானார் யுவராஜ் சிங்.
>
> - **நிலாரசிகன்**

''மேடம், மேடம்'' அவளை நோக்கிய பதற்றத்துடன் வினோத் ஓடிவந்தான். தேன்மொழிக்குள் அந்தக்குரல் எங்கோ தொலைவில் ஒலித்தது.

**ஒரு வருடத்துக்குப் பிறகு...**

பெசன்ட் நகர் நாலாவது குறுக்குத் தெருவிலிருந்த ஒற்றைத் தென்னை மர வீடு. தெருவில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த பையன்கள் சற்று ஆட்டத்தை நிறுத்தி, கார் ஒதுங்க வழிவிட்டனர். சிவப்பு நிற ஸ்விஃப்ட்டை ஓரமாக நிறுத்திவிட்டு, ஒரு வயதான தம்பதியினர் கையில் பரிசுப் பொருளுடன் இறங்கினர்.

அவர்கள் வேறு யாருமில்லை. சூர்யாவின் வளர்ப்புத் தந்தை டாக்டர் ராமச்சந்திரனும் அவரது மனைவி கமலாவும்தான்.

வாசலுக்கு வந்த அருணாச்சலம் அவர்களைப் பார்த்ததும் வேட்டியை இறுகக் கட்டிக்கொண்டு ''வாங்க... வாங்க...'' என வாய் 'நிறைய்ய' பல்லைக் காட்டி வரவேற்றார்.

''என்ன எல்லோரும் வந்தாச்சா... வாசல்ல செருப்பே அதிகமா காணோம்.''

''யாரும் இல்லை. மொத்தம் மூணு வி.ஐ.பி. அதுல நீங்க ரெண்டு பேர் வந்தாச்சு. அப்புறம் யார் வரணும்.''

''சரி...சரி... அது யார் மூணாவது வி.ஐ.பி.''

''முதல்ல வீட்டுக்குள்ள வாங்க... வாங்கம்மா...''

கமலா, அருணாச்சலத்திடம் கையில் கொண்டு வந்திருந்த கூடையைக் கொடுத்து ''தேன்மொழிகிட்ட கொடுங்கோ'' என்றாள்.

அவர்கள் உள்ளே, நுழைந்ததும் ஹாலுக்குள் கையில் குழந்தையுடன் வந்த முத்துலட்சுமி அம்மாள் அவர்களைப் பார்த்து ''வாங்க...வாங்க'' என வரவேற்றாள்.

''ஓகோ... தெரிஞ்சுபோச்சு இவங்கதானா அந்த வி.ஐ.பி'' எனக் கூறி முத்துலட்சுமியைப் பார்த்து கைகுவித்த ஜானகி, அவர் இடுப்பிலிருந்த குழந்தையை வாங்கிக்கொண்டார்.

சத்தம் கேட்டு சமையலறையிலிருந்து


வெளியே வந்த தேன்மொழி, டாக்டர் ராமச்சந்திரனைப் பார்த்து, "ஏன் அங்கிள் இவ் வளவு லேட்டு. குழந்தைக் குப் பேர் வைக்கிற ஆள் இப்படி லேட்டா வந்தா எப் படி? ஏன் மாமி நீங்களாச்சும் கொஞ்சம் சிக்கிரம் கிளம்பியிருக் கலாம்!"

"இவரு டை அடிச்சு முடியற துக்குள்ள உலகமே விடிஞ்சமாதிரிதான்."

"ஏம்மா இப்படியா அப்பா ரகசியத்தை இப்படி ஒபன்ல போட்டு உடைக்கிறது?" சட்டையை மாட்டிக்கொண்டே மாடி யிலிருந்து இறங்கிய சூர்யா அனைவரை யும் வரவேற்றான்.

கூடத்தில் வாழை இலை விரிக் கப்பட்டு அதன் முன் நெல்மணி கள் நிரவப்பட்டு இருந்தன. அதன்முன் குத்து விளக்கு ஏற்றப்பட்

**தேன்மொழி அந்தப் பெயரைச் சொன்னதும் முத்துலட்சுமியின் கண்களில் நீர் வழிந்தது.**



டுப் பிரகாசமாக ஜொலிக்க அனை வரும் அதனைச் சூழ்ந்தனர்.

"அப்பா, இங்க வாங்க... குழந்தை யோட பெயர நீங்கதான் இந்த நெல்லுல எழுதணும்" சூர்யா ராமச்சந்திரனை நெல்பரப்பியிருந்த வாழை இலை முன் அமரும்படி அழைத்தான்.

"சரிப்பா... பேரைச் சொல்லு ஒரு தடவை தப்பு இல்லாம எழுதிப் பாத்துக் கிறேன்"

"தம்பி நான் சொன்னமாதிரி அஜித் துன்னே வைப்பா நல்லா இருக்கும்." முத்துலட்சுமி அம்மாள் சூர்யாவைப் பார்த்துச் சொன்னதும் வாசலிலிருந்து பதில் குரல் கேட்டது. அது தாமதமாகக் காதலி யுடன் நுழைந்த வினோத்தினுடையது.

"நோ...நோ... விஜய்தான் சூட்டபிள் நேம். அந்தப் பேர்தான் நீங்க வைக்கணும்."

"வாப்பா வா ஏன் இன்னும் சிம்பு, ஆர்யா, ஜீவா, விஷால், விக்ரம்னு...' எனக் கூறிய அருணாச்சலம் பாதியில் நிறுத்த...

"ஏம்பா சூர்யாவை விட்டுட்டீங்க. சூர்யா சன் ஆப் சூர்யா... அட்டகாசமா இல்லை..." என்றபடி வினோத் அமர்ந்து தன் காதலியையும் தரையில் அமரச் சொன் னான்.

"பேரைப் பத்தி உங்களுக்குக் கவ லையே வேணாம். நானும் இவரும் நேத்து நைட்டே அட்டகாசமானப் பேரை முடிவு பண்ணிட்டோம்" என்றவள் சூர்யாவின் தோளில் தலை யைச் சாய்த்தாள்.

"ஏய்... நீயே அதை உன் வாயால் சொல்லிடேன். எல்லாருக்கும் தெரியட்டும்" சூர்யா அவளிடம் கூற, அனைவரும் இப்போது தேன்மொழி சொல்லப் போகும் பெயருக்காக ஆவ லுடன் காத்திருந்தனர்.

தேன்மொழி அந்தப் பெயரைச் சொன்னதும், முத்துலட்சுமியின் கண்களிலி ருந்து வழிந்த நீர் குழந்தையின் உடலில் பட்டு நெல்மணிகளில் சிதறியது.

அந்தப் பச்சிளம் குழந்தைக்குத் தன் தாய் தந்தை காதலித்த கதையும், அதற்குக் காரணமாக இருந்த ஒருவனின் கதையும், அந்த ஒருவனுடைய தாயின் கண்ணீர்தான் இது என்பதும் இப்போதைக்குத் தெரியாது. பிஞ்சுக் கைகளால் அந்தக் கண்ணீரை அது துடைத்துக்கொண்டது. டாக்டர் ராமச்சந் திரன் வாழை இலையில் பரப்பிய நெல் மணிகளில் **முத்துசேகர்** என அழகாக எழு திக்கொண்டிருந்தார்.

(முற்றும்)

# நிறவெறி?...

❑ முதல் ஐ.பி.எல்-லில் சியர் லீடர்ஸ் அறிமுகப் படுத்தப்பட்டபோது, ஹைதராபாத் அணிக்காக ஆடிய அப்ரிடி, 'அவர்களும் அவர்களுடைய உடையும் மிகவும் தொந்தரவாக இருக்கின்றன. அவர்களை அப்புறப்படுத்துங்கள்' என்றார். இதனிடையே, கறுப்பழகிகளான இரண்டு பெண்கள், மொஹலி மைதானத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதாகவும் செய்திகள் வந்தன. அந்த இரு பெண்களும் புகார் அளிக்காததால் பிரச்னை அப்படியே மறைந்தும் போனது.

❑ முதல் ஐபிஎல்-லில் பாகிஸ்தான் வீரர்களுக்கு இடமிருந்தது. ஆனால், 2009, 2010 ஐ.பி.எல்-லில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பாகிஸ்தான் வீரர்களை ஏலத்தில் எடுக்கக்கூட யாரும் இல்லை. இதைக் கண்டித்து, பாகிஸ்தானில் கிரிக்கெட் ரசிகர்கள் தெருவில் திரண்டு, லலித் மோடியின் உருவ பொம்மை எரித்தனர்.

❑ ஃபேக் ஐ.பி.எல். ப்ளேயர் வலைத்தளம் மூலமாக கொல்கத்தா அணியில் நிறவெறி பிரச்னை இருப்பது தெரியவந்தது. ஆஸ்திரேலியப் பயிற்சியாளர் ஜான் புச்சனன், இந்திய வீரர்களைக் கேவலமாக நடத்துவதாகச் செய்திகள் வந்தன. இதை இந்திய அணியின் முன்னாள் வீரரான ஜடேஜாவும், என்.டி. டீ.வி. பேட்டியில் உறுதி செய்தார். ஆனால், லலித் மோடியும் ஷாருக்கானும் இதைத் திட்டவட்டமாக மறுத்தார்கள்.



* அப்ரிடி

❑ 'முடிந்த அளவு ஐ.பி.எல். வழியாகப் பணத்தைக் கறக்க முடிவு செய்த லலித் மோடி, ஒவ்வோர் ஆட்டத்திலும் பத்தாவது ஓவர் முடிந்த பிறகு ஏழரை நிமிட இடைவெளி அளிக்கப்படும் என்கிற புதிய திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால், இதற்கு வீரர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. 'ஆட்டத்தின் போக்கை மாற்றுகிறது' என்று டெண்டுல்கரும் வார்னேவும் எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள். இந்த வருடம், 'அந்த ஏழரை இடைவெளி' காணாமல் போய் இரண்டு தவணை ஐந்து நிமிடமாகக் குறைந்துவிட்டது.



* ஜான் புச்சனன்



* ஜடேஜா



ஐ.பி.எல். ஸ்பெஷல்






* ஹேடன்...

'**செ**ன்னை சூப்பர் கிங்ஸ்' என்னை நட்சத்திரத் தூதராக நியமிக்கவில்லையே என்று டிவிட்டரில் வருத்தப்படுகிறார் மாதவன்.

**செ**ன்னையில் பயிற்சி அகாடமி ஒன்று தொடங்க இருக்கிறார் மேத்யூ ஹேடன். காரணம் கேட்டால், 'சென்னையில்தான் நான் ஸ்பின் ஆடக் கற்றுக்கொண்டேன். அதற்குப் பிரதி பலனாக சென்னைக்கு நான் ஏதாவது செய்யவேண்டும்' என்கிறார் காதலோடு!

**ஐ.**பி.எல். அணிகளிலேயே அதிக விளம்பரதாரர்களும் மதிப்பும் கொண்ட அணி, சென்னை சூப்பர் கிங்ஸ்தான். அதன் மதிப்பு - 224 கோடிகள்.

**ஏ**லத்தில் பொலார்டை விலைக்கு வாங்க மிகவும் முயற்சி செய்தது சென்னை சூப்பர் கிங்ஸ். ஆனால், டை


# வருத்தப்படும் வாரி அணைக்கும்

பிரேக்கரில் 12 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது மும்பை இந்தியன்ஸ்.


**பொ**துவாக ஆட்டம் நடக்கும்போது, கேமரா டாப் ஆங்கிளில் ஊரைச் சுற்றிக் காண்பிக்கும்.

## கிசுகிசு கண்ணா கிசுகிசு!

2008 ஐ.பி.எல். நடந்தபோது திரையங்குகளின் வசூல் பாதிக்கப்பட்டதாகப் பேச்சு எழுந்தது. ஆனால் இந்த முறை அவ்வளவு பெரிய பாதிப்பு இல்லை என்கிறார்கள் தியேட்டர் நிர்வாகிகள். குறிப்பாக 'விண்ணைத்தாண்டி வருவாயா'வின் வசூல் கொஞ்சம்கூட குறையவில்லையாம்.



* சிம்பு



* மாதவன்...



* பொலார்ட்...

# மாதவன்... ஹேடன்..!

சென்னை சூப்பர் கிங்ஸ் க்ளப் என்றொரு குழுவை ஆரம்பித்திருக்கிறது இந்தியா சிமெண்ட்ஸ். இதில் உறுப்பினரானால் முதலில் வாங்கும் டிக்கெட்டுக்கு மட்டும் இலவசமாக இன்னொரு டிக்கெட் வழங்கப்படுகிறது. சேப்பாக்கத்தில் இந்த குழுவினருக்குத் தனி காலரி. மற்றும் பயிற்சி ஆட்டங்களை நேரில் பார்க்கவும் வசதி உண்டு. கட்டணம் ரூபாய் 1000.

ஆனால், இதுவரை சென்னையின் புதிய அடையாளமான சட்டசபைக் கட்டடத்தை டீ.வி.யில் காண்பிக்கவேயில்லை. இத்தனைக்கும் அது சேப்பாக்கத்திலிருந்து கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறது.

நமது நாட்டில் மனிதர்களின் நடத்தையில் (பிஹேவியர்) பிரச்னைகள் இருந்தால் மட்டுமே, மனநல மருத்துவரை அணுக வேண்டும் என்ற எண்ணம் மெத்தப் படித்தவர்கள் மற்றும் பெரும்பாலான மருத்துவ நிபுணர்களுக்கேகூட இருந்து வருகிறது. நடத்தையில் ஏற்படும் பிரச்னைகள் பாதிக்கப்பட்டவரை விட பராமரிப்பவரைத்தான் (care givers) பெரும் மனஉளைச்சலுக்கு ஆளாக்குகிறது!

ஆனால், எண்ணங்கள் (thoughts), உணர்ச்சிகள் (emotions), மனோநிலை (mood) மற்றும் புறத்தூண்டல்களை அல்லது தூண்டப்படாமலே புலன்களை வந்தடையும் பிரத்யேக உணர்வுகள் (Perceptions) ஆகியவற்றில் ஏற்படும் பிரச்னைகள், பாதிக்கப்பட்ட மனிதருக்கு மட்டுமே வலியை உண்டாக்கக்கூடியவை. இந்த வலி (Mind pain) பிரத்யேகமானது மட்டுமல்லாது, நாம் அன்றாடம் அனுபவிக்கும் பல தரப்பட்ட உடல் வலிகளை விட மிகக் கொடுமையானது.

பாதிக்கப்பட்டவரின் மனோநிலையில் இருந்து பார்த்தால் மட்டுமே அல்லது பார்ப்பதற்குப் படித்திருந்தால் மட்டுமே அவருக்கு உதவவும் சிகிச்சையளிக்கவும் முடியும்.

நடத்தையில் பிரச்னைகள் (behaviour problems) இருந்தால் மட்டுமே, சிகிச்சை கொடுக்க, நம் நாட்டில் மனநல மருத்துவர்களே கூடப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள் என்பது என் எண்ணம். மற்ற பிரச்னைகளுக்குச் சிகிச்சையளிக்கப் பயிற்சியும் அனுபவமும் தேவை. அப்படிப் பயிற்சியும், அனுபவமும் இருந்தால் கூட, ஒருநாளைக்கு அதிகபட்சமாக மூன்று முதல் ஐந்து பேருக்கு மட்டுமே சிகிச்சையளிக்க முடியும். 'பிரபல' மனநல மருத்துவர்கள், சில மணி நேரங்களில் எத்தனை நோயாளிகளை டிஸ்போஸ் செய்கிறார்கள் என்பது அவர்களை ஆலோசித்திருக்கும் அனைவருக்கும் தெரியும்.

**டாக்டர். பி. ஆனந்தன்**

வயதும், அனுபவமும், பிரபலமும், கூட்டமும் இருந்தால் 'பெரிய ஆள்' என்று நினைத்துவிடும் மந்தை மனப்பான்மை நமது மக்களுக்கு அதிகம்! அந்த 'பெரிய டாக்டரிடம்' சென்று சரியாகாதபட்சத்தில், 'இனி எல்லாம் அவன் செயல்' என்ற மனோநிலையில் 'மந்திரவாதி'களிடமும், போலி டாக்டர்களிடமும் சென்று வாழ்க்கையைத் தொலைத்துவிடுகிறார்கள்.

மனநோய்களுக்கு மட்டும் என்றில்லை. சர்க்கரை வியாதி, இதய நோய்கள் மற்றும் எல்லா வியாதிகளுக்கும், பெரிய கார்ப்பரேட் மருத்துவமனைகள் பல ஆயிரங்களைப் பிடுங்கிக்கொண்டு கொடுக்கும் சேவையைவிட, சிறந்த சேவையை, நம் வீட்டுக்குப் பக்கத்தில் சிறிய கிளினிக் நடத்திவரும் மருத்துவர்கூட பெரும்பாலான நேரங்களில் தந்து விடுவார்கள். விதிவிலக்கும் உண்டு.

அந்தவகையில் பொதுவான மனநலப் பிரச்னைகளுக்கு (Common mental illnesses) அதாவது மேலே சொன்ன மன வலியை உணர்ந்து சிகிச்சையளிக்கும் பயிற்சியையும், அனுபவத்தையும் பெற முறையான, விஞ்ஞானபூர்வமான பயிற்சி தேவை. பொத்தாம் பொதுவாகச் சொல்லப்படும் அறிவுரைகள் பிரச்னையைத் தீவிரப்படுத்தும்.

எந்தவொரு மனநல பாதிப்பும் பிரத்யேகமானது அன்று. அதே மாதிரியான பாதிப்பு உலகம் முழுக்க இருக்கும் லட்சக்கணக்கான மனிதர்களுக்கும் இருக்கிறது.


மாண்புமிகு
மனம் - 12
மனசுக்குள்
மல்யுத்தம்!

டைஃபாய்டு என்ற நோய் ஒரு இந்தியனுக்கு வந்தால் என்ன அறிகுறிகள் இருக்குமோ, அதேதான் அமெரிக்கனுக்கு வந்தாலும் இருக்கும். ஆனால், மனநோய்கள் கலாசாரம், நாகரிகம், சமூகப் பொருளாதார நிலை, வயது, பாலினம் ஆகிய காரணிகளால், மனிதருக்கு மனிதர், வெளிப்பாடு முறைகளில் (Manifestations) மாறுபடும்.

உதாரணமாக, மனச்சோர்வு மூன்று வயதுக் குழந்தைக்குக்கூட வரலாம். ஆனால், அந்தக் குழந்தைக்கு அது தற்கொலை எண்ணமாக வெளிப்பட வாய்ப்



## மனச்சோர்வு மூன்று வயது குழந்தைக்குக் கூட வரலாம்!

பில்லை. மாறாக, 'எப்போதும் அழுது கொண்டே இருக்கிறான்; சரியாகச் சாப்பிட மாட்டேங்கறான்; உடல் வளர்ச்சி வயசுக்கேற்ப இல்லை (failure to thrive)' என வெளிப்படும். அதுவே ஐந்து அல்லது ஆறு வயதுச் சிறுவனுக்கு அதீத குறும்பு, பரபரப்பு, கவனமின்மை, துறுதுறுப்பு என வெளிப்படலாம்.

'பன்னிரண்டு வயசுல, 'முதல் மார்க் வாங்குனவன் இப்ப சில சப்ஜெக்ட்ல ஃபெயிலாயிடுறான்' (declining scholastic performance), 'எரிச்சலடைகிறான்', 'அதிகம் கோபப்படுகிறான்', என்றெல்லாம் வெளிப்படலாம்.

பதினாறு வயதைத் தாண்டும்போது செக்ஸ் சம்பந்தமான குழப்பமாக வெளிப்படலாம். இந்தக் குழப்பத்தைத்தான் 'வாலிப வயோதிக அன்பர்களே!' என விளம்பரம் செய்து, அந்தக் குழப்பத்தை அதிகமாக்கி, போலிகள் அவனைத் தீவிர மனநோயாளியாக்கி விடுகின்றனர்.

இளைஞனாகும்போது போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி தற்கொலை செய்து கொள்ளவும் வாய்ப்புள்ளது. வயதான காலத்தில் வலிகளாக உடல் உபாதைகள் வெளிப்படும்.

மனச்சோர்வு தீவிரமாகி, குழப்பமாகும் போது, மற்றவர்கள் தனக்குக் கெடுதல் செய்வதாகச் சந்தேகம் ஏற்படும். இந்தச் சந்தேகம் செய்வினை, சூனியம், ஏவல் செய்துவிட்டதாக வெளிப்படலாம். அதுவே ஓர் உயர்தட்டு அமெரிக்கனுக்கு சாட்டிலைட் மூலமாக, தன் நடவடிக்கைகள் மற்றவர்களுக்கு அம்பலப்படுத்தப் படுவதாக வெளிப்படலாம்.

நம் நாட்டில் ''ஆம்பளையா இருந்துட்டு அழுவுறியே?'' ''பொம்பளையா இருந்துட்டு இப்படிச் சிரிக்கலாமா?'' எனச் சொல்லப்படுவதால்...

மனநலம் பாதிக்கப்பட்ட ஆண் மதுவை நாடவும், பெண்கள் கண்மூடித்தனமாகப் போலிச் சாமியார்களை நாடவும் செய்கின்றனர்.

ஆணோ பெண்ணோ, பிரச்னை தீர்வுக்காக மீண்டும் மீண்டும் ஒரு சாமியார் அல்லது சாமியாராகக் கருதப்படுபவரை நாடுபவர்கள் மனப்பதற்ற சுபாவமும் (anxious traits), ஆல்கஹாலை நாடுபவர்கள் உணர்ச்சிவயப்பட்ட சுபாவமும் (emotionally unstable traits) கொண்டவர்களாக இருக்க வாய்ப்பு அதிகம்.

**(விவாதிப்போம்)**



# ஆலயங்களின் சக்தி!

ஆலயங்களில் ரிஷிகளின் தபஸை டெபாஸிட் மாதிரிப் போட்டு வைத்திருந்து, அதிலிருந்து நாம் எடுத்துக்கொள்வது நிஜம். மூர்த்திகளிலிருந்து தெய்வாநுக்ரஹம் கிடைப்பது நிஜம். மந்த்ர பூர்வமான ஆராதனைகளால் நமக்கு ஆலயத்திலிருந்து ஆத்மார்த்தமான நன்மை நிறைய உண்டாவதும் நிஜம். இத்தனையும் இருந்தாலும், ஆலய வழிபாடு தனிப்பட நம்மை உருப்பட வைத்துக்கொள்வதற்கு அங்கம்தானேயன்றி, community salvation - காக (ஒரு சமூகம் முழுதும் மோக்ஷம் பெறுவதற்காக) அல்ல.

கோயிலில் பல பேர் சேர்ந்து பூஜைகள், உத்சவங்கள், கும்பாபிஷேகங்கள் செய்து, பொன்னையும் பொருளையும், கந்தம், புஷ்பம், நைவேத்யம், மேளதாளம் எல்லாவற்றையும் அர்ப்பணம் பண்ணுகிறோமென்றால் இதற்குப் பர்பஸே (நோக்கமே) வேறு. இப்படிப்பட்ட கூட்டுப்பணி தான் மதத்தின் முடிவு என்ற அபிப்பிராயத்தில் இதைச் செய்யவில்லை. ஆனால், community thanks giving - ஆகவே, இதைச் செய்கிறோம். ஈஸ்வரனிடமிருந்து சமூகம் முழுதும் பலவிதமான அநுக்ரஹங்கள் பெறுகிறதல்லவா? அதற்காக சமூகம் முழுவதும் சேர்ந்து அவனுக்கு நன்றி தெரிவிப்பதற்கு அடையாளமாக, நன்றிக்கும் அன்புக்கும் ஸ்தூலமான அடையாளமாக, அவன் நமக்குக் கொடுத்ததிலிருந்தே திரும்ப அவனுக்கு வஸ்திரம், நைவேத்யம், வாகனம்... என்றெல்லாம் அர்ப்பணிப்பதுதான் நம்முடைய கூட்டு ஆலயப்பணியின் பர்பஸ்.

'ஸால்வேஷ'னுக்கு (விடுதலைக்கு) இதோடு நின்றுவிட்டால் போதாது. ஈஸ்வரனின் பரம க்ருபையில் கோயிலைச் சுற்றிச்சுற்றி வந்தும், அந்த மூர்த்திகளில் அப்படியே உள்ளம் சொக்கி பக்தி பண்ணியுமே மோக்ஷ ஸாம்ராஜ்யத்துக்கும் போனவர்கள் உண்டுதான். ஆனாலும் இங்கேயும்கூட அது அவர்கள் இண்டிவிஜுவலாக(தம்மளவில் மட்டும்) செய்துகொண்டதுதானே! பொதுவில் ஆலயத்திலிருந்து பெறுகிற சக்தியைத் தனி வாழ்க்கையின் அநுஷ்டானமான சுத்தத்தால் விருத்தி செய்துகொள்வதாகவே நம் மதம் இருக்கிறது. அவனவன் இப்படிச் சுத்தமாக அநுஷ்டானம் பண்ணித் தன்னைத்தானே கடைத்தேற்றிக் கொள்வதற்கான சக்தியையும் கோயிலுக்குப் போய்ப் போய் வேண்டி வேண்டியே பெறலாம்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி**
**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி**
**சங்கராச்சார்ய சுவாமிகள்**

# விடைபெறும் யௌவனம்!

இரண்டு நண்பர்களும் உணவை முடித்துக்கொண்டனர். பிறகு, உணவு விடுதியின் ஜன்னல் வழியாக மனிதர்களின் நடமாட்டத்தைக் கண்டனர். பாரிஸ் நகரில், இனிய கோடைக்கால அந்திப் பொழுதுகளில், மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர விரும்புகின்றனர். எங்கே போவது என்று தெரியாதபோதும் எங்கேயாவது போகவேண்டும் என்று அவர்களுக்கு ஏற்படும் அந்த எண்ணம் இவ்விரு நண்பர்களுக்கும் ஏற்பட்டது. இலைகள் உதிர்ந்து கிடக்கும் நதிக்கரைகளில், நிலவொளியையும், மின்மினிப் பூச்சிகளையும், வானம்பாடிகளையும் காணச்செல்லவேண்டும் போலிருந்தது.

''ஆ...எனக்கு வயதாகிக்கொண்டிருக்கிறது'' என்றான் ஹென்றி சைமன், ஒரு பெருமூச்சை உதிர்த்தபடி. ''இது சோகமானது. இதுபோன்ற மாலைகளில் என் உடலுக்குள் பேய் புகுந்துவிட்டது போல உள்ளது. வெறும் வருத்தங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. வாழ்க்கை எத்தனை வேகமாக ஓடிவிடுகிறது!''

அவன் சற்று குண்டாக இருந்தான். தலையிலும் வழுக்கை விழுந்துவிட்டது. வயசு என்னவோ நாற்பத்தி ஐந்துதான். மற்றவர் - பீட்டர் கார்னியர். அவனுக்கு இன்னும் ஓரிரு வயது அதிகம். ஆயினும் மெலிந்து காணப்பட்டுத் துடிப்புடன் இருந்தான். அவன் சொன்னான். ''நண்பனே, என்னைப் பொருத்தவரை சிறிது கூட உலகைச் சட்டையே பண்ணாமல், நான் முதுமையை அடைந்துள்ளேன். நான் ஜாலியான ஆளாக வாழ்ந்தேன். வீராப்புடன் இருந்தேன். ஒவ்வொரு நாளும் கண்ணாடியைப் பார்க்கும்போது, வயது தனது வருகையைத் தெரிவிக்கிறதை அவன் கவனிப்பதில்லை. அது அத்தனை மெதுவாக அடி மேல் அடி வைத்து அவனைத் தழுவுகிறது. அதன் பரிணாமம் கண்ணுக்குப் புலப்படுவதே இல்லை. ஆறு மாதமாக நம்மை நாமே பார்க்காமல் இருந்தால் சட்டென வித்தியாசம் தெரியலாம். ஆனால், அது எத்தகைய அடியாக விழும் தெரியுமா?''

''அதிலும் இந்தப் பெண்கள்... அவர்களை நினைத்தால் பரிதாபகரமாக இருக்கிறது. பாவப்பட்ட பிறவிகள். அவர்களின் அத்தனை மகிழ்ச்சி, அதிகாரம், வாழ்க்கை யாவுமே அவர்களுடைய அழகில்தான் உள்ளது. அந்த இளமையும் அழகும் பத்தாண்டுகள்கூட நீடிப்பதில்லை.''

''வயதாவது குறித்த சந்தேகமே ஏற்படாமல் நான் முதுமை பெற்றேன். ஆயினும், ஐம்பது வயதை எட்டிவிட்ட போதும் என்னை நான் இளமையானவனாக எண்ணிக்கொண்டிருந்தேன். நானும் மற்றவர்களைப் போலக் காதல் வசப்பட்டிருக்கிறேன். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு

## ஃபிரெஞ்ச் மூலம் : மாப்பசான்

முன்பு அவளை நான் ஒரு கடற்கரையில் சந்தித்தேன். அது ஒரு காலை நேரம். அங்கு சிறிய குன்றுகளும் பாறைகளும் இருந்த தால், உடை மாற்ற வசதியாக இருப்பதாகக் கருதிப் பெண்களின் கூட்டம் ஒன்று குளிக்க வரும். தண்ணீரையும், குளிப்பவர் களையும் பார்த்தபடி அமர்ந்திருந்தேன்.





அவர்கள் குளிப்பதற்கேற்றபடி துண்டைக் கட்டி நீரில் குதித்தபோது, அலைகள் அந்த ஆடைகளைப் புரட்டிப் போட்டுச் சென்றன. அதிகாலையின் குளிர் அவர்களுக்கு நடுக்கத்தை ஏற்படுத்துகிறது. சிலருக்கு மட்டுமே அதைத் தாங்கும் சக்தி உள்ளது. ஆனால், உப்பு நீர் உடல் சதையைப் பாதுகாக்கும் என்பதால் குளிரையும் பொருட்படுத்தாமல் வருகின்றனர்.

முதன் முதலாக இந்தப் பெண்ணைப் பார்த்தபோது, நான் பரவசம் அடைந்தேன். சிலருடைய முகங்களுக்குத் தனியே ஒரு வசீகரம் உண்டு. ஒரு பார்வையிலேயே அவை நம்மை வீழ்த்திவிடும். நான் காதலிப்பதற்கு ஏற்ற பெண்ணைக் கண்டு, பிறவிப்பயன் அடைந்தவனைப் போல எண்ணிக்கொண்டேன். முன்பு எப்போதும் இல்லாத வகையில் அவளால் நான் வென்றெடுக்கப்பட்டேன். அவள் என் இதயத்தைப் புரட்டிப் போட்டாள். மிகப் பெரியதொரு தண்டனையாகவும், இம்சையாகவும் அதே வேளையில் நம்ப முடியாத பெரும் மகிழ்ச்சியாகவும் அவளுடைய வருகை இருந்தது. அவளுடைய பார்வை, கூந்தல் கழுத்தில் புரண்டு காற்றில் கலைந்த அழகு, அவளுடைய சிறியச் சிறிய நுட்பமான அசைவுகள் என்னை அவள் மீது பித்துக்கொள்ளச் செய்தன. தன் பார்வையாலும், தோற்றத்தாலும் அவள் என்னை உரிமை கொண்டுவிட்டாள். அவளுடைய கையுறைகள்,

**என் பழைய தோழியின் கையை முத்தமிட்டு விடைபெற்றேன். சொல்வதற்கு ஏதுமில்லை. நான் நொடிந்து போயிருந்தேன்.**

ஆடைகளைக் கூட நான் நீண்ட நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் ஒரு அழகான தொப்பியும் வைத்திருந்தாள். அத்தனை அழகான தொப்பி வேறு யாரிடமும் இல்லை.

ஆனால், அவள் மணமானவள். அவளுடைய கணவன் வார இறுதியில் சனிக்கிழமை வந்து திங்கட்கிழமை சென்று விடுவான். அவனைக் கண்டு நான் பொறாமை அடையவில்லை.

எது எப்படியோ நான் அவளை நேசித்தேன். அவள் மிகவும் அழகாகவும், பொலிவுடனும், இளமையுடனும் இருந்தாள். எப்போதும் புத்தம் புதியவளாகக் காட்சியளித்தாள். இவளைப் போல அழகையும், மேன்மையையும் நான் வேறு யாரிடமும் கண்டதில்லை. அத்தனை பூரணப் பொலிவும், பேரழகுமாக அவள் இருந்தாள். அவள் உதடுகளின் முறுவலில் அத்தனை கவர்ச்சி இருந்தது. அவளுடைய கழுத்தும், காது மடல்களும், நாம் மூக்கு என்று அழைக்கிறோமே அந்தச் சிறிய உறுப்பிலும் அவளுடைய அழகு நடமாடியது.

இந்தச் சம்பவம் நடந்து மூன்று மாதங்களாகிவிட்டன. நான் அமெரிக்கா செல்ல

நேர்ந்தது. அப்போது எனது உள்ளம் ஏமாற்றத்தாலும், காயங்களாலும் நிரம்பியது. அவளுடைய நினைவு என்னுள்ளே அழியாத எண்ணமாய் நிலைபெற்றிருந்தது. சில ஆண்டுகள் கழிந்துவிட்டன. தூரத்தில் எங்கேயோ இருந்தாலும், அவள் எனக்கு மிக அருகில் வசிப்பதைப் போலவே நீங்காமல் நிறைந்திருந்தாள். அவளை நான் மறக்கவே இல்லை. அவளுடைய இனிமையான தோற்றம் எனது விழிகளின் முன்பு நடமாடியது. வாழ்வில் நான் சந்தித்த மிகவும் அழகிய ஓர் அற்புதமாக, அவள் என்னைக் கவர்ந்த மிகச் சிறந்த அழகியாக நினைவில் தங்கி விட்டாள். பன்னிரண்டு ஆண்டுகள் ஒரு மனிதனின் வாழ்வில் மிகச் சிறிய பகுதி. அது கழிவதை அவன் அறிவதே இல்லை. ஒவ்வொரு ஆண்டாக ஓடி மறைந்து விடுகிறது. மெதுவாகவோ, வேகமாகவோ அவை சீக்கிரம் முடிந்து விடுகின்றன. திரும்பிப் பார்ப்பதற்குள் அவை மாயமாகி மறைந்துவிடுகின்றன. காலம் நகர்ந்து விடுகிறது. அது அவனை வயதானவன் என மாற்றியிருக்கிறது.

கடந்த ஆண்டு வசந்த காலத்தில் என் நண்பர்களின் விருந்து நிகழ்ச்சிக்குப் போயிருந்தேன். ரயில் நகரத் தொடங்கியபோது, எனது பெட்டிக்குள் ஒரு பெண்மணி நான்கு பெண் குழந்தைகளுடன் வந்து அவசரமாக ஏறினாள். அவள் முகத்தைப் பார்த்தும் பாராதவன் போல, நான் செய்தித்தாளை எடுத்து விரித்துப் படிக்கலானேன். ரயில் ஓடிக் கொண்டிருந்தது. என் அருகில் அமர்ந்திருந்த அவள் கேட்டாள், ''ஸார்... நீங்கள்தானே கார்னியர்?''

''ஆமாம் மேடம்.''

அவள் சிரிக்கலானாள். அது ஒரு தைரியமான பெண்ணின் சிரிப்பைப் போல இருந்தாலும் அதில் சோகம் இருந்தது.

''என்னைத் தெரியவில்லையா?'' என்றாள்.

நான் பதில் சொல்லத் தயங்கினேன். எங்கேயோ எப்போதோ இந்த முகத்தைப் பார்த்திருக்கிறேன். எங்கே?

அவள் சிரித்தபடி சொன்னாள். ''நான் தான் ஜூலி''. அப்படியொரு அதிர்ச்சியை நான் அதுவரை பெற்றதில்லை. ஒரு கணப் பொழுதில் எனக்கு எல்லாமே முடிவுக்கு வந்துவிட்டது போல் இருந்தது. என் கண்களின் முன்னால் ஒரு மூடுதிரை கிழிந்து கொண்டிருக்க, மிகவும் பயமுறுத்துகிற, காயப்படுத்துகிற ஒன்றைக் காண நேர்ந்தவன் போல நான் மிரட்சியுடன் இருந்தேன்.



**''மன்னா... இரண்டு மகாராணிகளில் ஒருவரை எதிரி கடத்திட்டுப் போறான்...''**

**''படுபாவி... பாதி சுமையைத்தானே குறைச்சிருக்கான்...''**

**– எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்**

"இது அவள்தானா? அந்தப் பெண் தானா இவள்? எத்தனை சாதாரணமான, சராசரிப் பெண் போல இப்போது காட்சியளிக்கிறாள்? அவளுக்கு நான்கு பெண் குழந்தைகளும் பிறந்துள்ளன. அவர்கள் அவளுடைய இடத்தைப் பிடிக்குமளவு நெடுநெடு என வளர்ந்திருந்தனர். பெரும் பொலிவுடன் நேற்றுத்தான் அவளைப் பார்த்தது போல் இருக்கிறது. இன்று என்ன ஆகிவிட்டது அவளுக்கு? இப்படி ஒருத்தி மாறுவது சாத்தியம்தானா? ஒரு பெரும் துயரம் எனது இதயத்தைத் தாக்கியது.



இயற்கைக்கு எதிரான கொதிப்பும் உருவானது. இத்தனை அழிவும் அகோரமும் கொண்ட இயற்கையின் மீது கோபம் கோபமாக வந்தது.

அவளை நான் பார்த்தேன். அவள் கையைப் பிடித்துக்கொண்டேன். என் கண்களில் கண்ணீர் நிரம்பியது. அவளுடைய இளமைக்காக நான் அழுதேன். அவளுடைய நலிவுக்காக நான் அழுதேன்.

"நான் மாறிவிட்டிருக்கிறேன் இல்லையா? இத்தனை நீண்ட இடைவெளியில் வேறு எதை எதிர்பார்க்க முடியும்? நான் இப்போது ஒரு தாயாகி விட்டேன். ஒரு சிறந்த தாய்! மற்ற எல்லாவற்றுக்கும் குட்பை. எல்லாம் முடிஞ்சது. நாம் சந்திக்கும்போது, உங்களுக்கே கூட அடையாளம் தெரியாதபடி மாறியிருப்பேன் என்று நான் எண்ணிப் பார்த்ததில்லை. நீங்களும்தான் மாறிவிட்டீர்கள். நீங்கள்தானா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள எனக்குச் சிறிது அவகாசம் தேவைப்பட்டது. நினைத்துப் பாருங்கள். பன்னிரண்டு ஆண்டுகள்! என் மூத்த மகளுக்கே இப்போது வயது பத்து."

நான் அந்தக் குழந்தையைப் பார்த்தேன். அவளுடைய தாயின் இளமைக் கால வசீகரத்தின் ஓர் தடயம் அவளிடமும் இருந்தது. ஆனால், இன்னும் உருவம் கொள்ளாமல், வடிவம் பெறாமல் ஆனாலும்

**அவள், "நான்தான் ஜூலி" என்றாள். அப்படியொரு அதிர்ச்சியை நான் அதுவரை பெற்றதில்லை!**

கைக்கு மிக அருகில். வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கும் இந்த ரயிலைப் போன்றது என்று நான் எண்ணிக்கொண்டேன். எங்கள் ஊர் வந்துவிட்டது. என் பழைய தோழியின் கையை முத்தமிட்டு விடைபெற்றேன். சொல்வதற்கு எனக்கு ஏதுமில்லை. நான் நொடிந்து போயிருந்தேன்.

அன்று மாலை. என் அறைக்குள் தனியாக இருந்தபோது, கண்ணாடி முன் நின்று என்னை நானே நீண்ட நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன். இளமையில் நரைபடியாத என் மீசையும், தலைமுடியும் எப்படி இருந்தன என்று நினைவுபடுத்திக் கொண்டேன். இப்போது நான் முதுமை பெற்று இருந்தேன்.

குட்பை! ●


Now on Sale
TRAVEL
Special
GOKULAM
THE Magazine for Children
April 2010 Rs.10/- Only

**ஜாலி ஸ்டோரீஸ்**

*(டி.வி.யில் ஐ.பி.எல். கிரிக்கெட் மாட்ச்சை சோ பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருடைய நண்பர் வருகிறார்)*

**நண்பர்:** என்ன ஸார் இது? முன்னெல்லாம் மாங்குமாங்குன்னு அஞ்சு நாள் ஆடினாங்க. அப்புறம் ஒன் - டேன்னாங்க. இப்போ டிவன்ட்டி-டிவன்ட்டிங்கறாங்க. கிரிக்கெட் கட்டெறும்பாத் தேயறதே. என்ன ஸார் இது?

**சோ:** ஸா...ர், இன்னும் கொஞ்ச நாளிலே டென்-டென்னு குறைஞ்சு, அப்புறம் டாஸிலே யாரு ஜெயிக்கறாங்களோ அவங்கதான் வின்னுன்னு ஆனாலும் ஆயிடலாம். துவாபர யுகத்திலே மகாபாரத யுத்தம் பதினெட்டு நாள் நடந்தது. ஆனா இப்போ யுத்தம்னு ஒண்ணு வந்தா நியூக்ளியர் அஸ்திரத்தாலே சில நொடியிலே லோகத்தோட கதை முடிஞ்சுடும்.

**நண்பர்:** என்ன ஸார் இது? பந்துக்குப் பந்து வளவளன்னு கமென்ட்ரி சொல்றாங்களே... இது தேவையா? நாமதான் பாக்கறமே?

**சோ:** ஸார், அப்படிச் சொல்லமுடியாது. மகாபாரதத்திலேயே இதைப்பத்திச் சொல்லியிருக்கு. குருக்ஷேத்திரத்திலே கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த யுத்தத்தைக் கண் பார்வை இல்லாத திருதராஷ்டிரனுக்கு ஞானதிருஷ்டியிலே சஞ்சயன் பார்த்துச் சொல்லலையா? அது மாதிரிதான். கிரிக்கெட் புரியாதவர்களுக்கு உபயோகமாக இருக்கும் இல்லையா?

**நண்பர்:** இப்போ இஷாந்த் போட்டது நோ பால்தானே? நோ பால்னா என்ன? கிழிச்ச கோட்டைக் கொஞ்சம் தாண்டிடறது. அதுக்குத்தான் தண்டனையா எதிரி ஸைடுக்கு எக்ஸ்ட்ராவா ஒரு ரன் குடுத்துட்டாங்களே. அதுக்கு மேலே எதுக்கு ஸார் ஃப்ரீ ஹிட். இது என்னா நியாயம் ஸார்?

**சோ:** ஸார், வரம்பை மீறினா, அப்படிச் செஞ்சவருக்கும், அவர் குடும்பத்துக்கும் சங்கடம் வரும்கிற நீதியை இது உணர்த்துகிறதுன்னு சொல்லலாம். ராமாயணத்தை எடுத்துண்டா, லட்சுமணன் கீறின கோட்டை சீதை தாண்டினா. அதனாலே பெனல்ட்டியா எதிரி ஸைடு




# சோவும் 'எங்கே

## ஜே.எஸ்.ராகவன்

# ஐபிஎல்?'லும்...

ராவணனுக்கு ஃப்ரீ ஹிட் கிடைச்சதில்லையா. அது மாதிரிதான்.

**நண்பர்:** அட! பக்கத்திலேயே அடிச்சுட்டு தோனி இப்படியா ஓடறது? கங்குலி குறிபாத்து அடிச்சார். அவுட்டு இல்லேன்னு தெரியறது? பின்னே எதுக்கு ஸார் அந்த அம்பயர் டிவி மாதிரி காத்திலே படம் போட்டுக் காமிக்கிறார்? இதெல்லாம் எதுக்கு? தேவையா ஸார்?

**சோ:** ஸார், மா பலேஷு கதாசனான்னு கீதையிலே சொல்லியிருக்கு. நாம நம்ம கடமையைச் செய்யணும். பலனை எதிர் பார்க்கக்கூடாது. அதுக்காக கடமையைச் செய்யாமலேயும் இருக்கக்கூடாது. பாட்ஸ் மென் ரீச் ஆகறதுக்கு முன்னாடி ஸ்டம்ப்பைப் பார்த்து அடிக்கவேண்டியது ஃபீல்டரோட கடமை. அதுக்கு உடனே பலன் பக்கத்திலே இருக்கிற அம்பயர் மூலமா கிடைச்சாலும் கிடைக்கலாம். இல்லாட்டி அந்தர்யாமியாக இருக்கிற தேர்டு அம்பயர் மூலமா கொஞ்ச நேரம் கழிச்சுக் கிடைச்சாலும் கிடைக்கலாம். இது கிரிக்கெட் தர்மம்.

**நண்பர்:** அதென்ன ஸார் பவுண்டரி, சிக்ஸர் அடிச்சா கோஷ்டியா சில பொண்ணுங்க கையிலே வேப்பிலைக் கொத்து மாதிரி எதையோ குலுக்கிண்டு தய்யா தக்கான்னு சாமி ஆடறாங்க? எதுக்கு ஸார் இது?

**சோ:** ஸார்... இதைப் பத்தி பகவத் கீதை, ராமாயணம், மகா பாரதம், தர்ம சாஸ்திரம், பிரம்ம சூத்திரம், சுக்கிர நீதி, திருமந்திரம், யாக்ஞவல்கியர்னு எதிலேயிருந்தும் என்னாலே மேற்கோள்காட்ட முடியாதுன்னு ஒத்துக்கறேன். என்னைத் தயவுபண்ணி விட்டுடுங்க. நாட்டியம் பிடிக்கலேன்னா கிருஷ்ணா ராமான்னு கண்ணை இறுக்க மூடிக்கங்க. ஆட்டம் நின்னப்புறம் கிரிக்கெட்டைப் பாருங்க; அவ்வளவுதான்!

('சோ' வார்த்தைகளால் ஆடும் ஐ.பி.எல். 60ம் பக்கத்தில்)



**மேஷம்:**

மனநிறைவளிக்கும் சுபச் செய்திகள் கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் பொங்கும். நண்பர், உறவினர் வகையில் நற்பலன்கள் கிட்டும். உடல் ஆரோக்கியம் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக சச்சின் அடித்த டபுள் செஞ்சுரி மாதிரி அட்டகாசமாய் இருக்கும். புத்திர பாக்கியம் கிட்டும்!

**ரிஷபம்:**

வண்டி வாகனங்களில் செல்லும் போது கவனத்துடன் இருக்கவில்லையெனில், சிக்ஸருக்கு அடித்த பந்து 'காட்ச்' பிடிக்கப்பட்ட கதையைப் போல ஆகி விடும்! உடல் ஆரோக்கியத்திலும் அப்படித்தான். குடும்பத்தில் வீண் பிடிவாதம், வெட்டி வாக்குவாதம் இவற்றைத் தவிர்த்து சுமுகமாக நடந்து கொள்ளுங்கள்.

**மிதுனம்:**

நீண்ட தூரப் பயணம், சுப காரியங்கள் கைகூடும். பவுண்டரிக்கு வைத்த இலக்கு சிக்ஸராகக் கிடைத்த மாதிரி வருவாய் எதிர்பார்த்ததைவிட அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும். அசையாச் சொத்துச் சேர்க்கைக்கும் யோகமுண்டு. உத்தியோகத்தில் உயர்வுக்கு வழியுண்டு!

**கடகம்:**

அடித்த பந்து 'காட்ச்' ஆகி விடுமோ என்ற நிலையில், பிடிக்க முயன்ற விக்கெட் கீப்பர் அதை விட்டுவிட, தப்பித்த பாட்ஸ்மேன் போல மனப்பயங்களிலிருந்து விடுதலை பெறுவீர்கள். வாகன சுகம் கிட்டும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. சுப காரியப் பேச்சுவார்த்தைகள் கைகூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பணியில் மேன்மை காண்பீர்கள்.

**28.03.2010 முதல் 03.04.2010 வரை**



**சிம்மம்:**

எல்.பி.டபிள்யூ கொடுத்த அம்பயரின் முடிவு, வீடியோ ரீப்ளயில் நாட் அவுட் எனத் தெரிந்து பிழைத்த பாட்ஸ்மேனைப் போல, எதிர்ப்புகளை முறியடித்து ஏறுமுகம் காண்பீர்கள். தக்கதருணத்தில் உதவிகள் கிடைக்கும். கடன் பிரச்னைகள் தீரும். பொன், பொருள் சேர்க்கையும் உண்டு.

**கன்னி:**

முதல் பந்திலேயே ரன் அவுட் ஆனதைப் போல முயற்சிகளில் தோல்வி ஏற்படும். அலுவலகத்திலும், வெளி வட்டாரத்திலும் மறைமுகத் தொல்லைகள், எதிர்ப்புகள் அதிகரிக்கும். பணிகளில் குறை

# நடக்குமென்பார்; நடக்கும்



ஏற்பட்டு மேலதிகாரிகளின் அதிருப்தியைச் சம்பாதிக்க நேரிடும்.

**துலாம்:**

ஆறு பால்களிலும் பவுண்டரி எடுத்த மாதிரி அனைத்து முயற்சிகளிலும் மகிழ்ச்சிகரமான வெற்றியைக் காணலாம். வீட்டிலும், அலுவலகத்திலும், வெளி வட்டாரத்திலும் இனிமையான திருப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:**

கோ பாட்ஸ்மேன் ஒத்துழைப்பில்லை என்றால் நிலைத்து ஆட முடியாதுங்க. குடும்பத்தினரை அனுசரித்துப் போகவில்லையென்றால் நிம்மதியாய் இருக்கமுடியாதுங்க. இது மட்டும்தான் நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய ரெட் அலர்ட். மற்றபடி அனுகூலப் பலன்கள் அமோகம்.

## தஞ்சை பரத்வாஜ்

**தனுசு:**

திறமையான பாட்ஸ்மேனை விக்கட் கீப்பிங்குக்கு நிறுத்தினாற்போல வேலையில் விரும்பாத இடமாற்றமும் வீடு மாற்றமும் ஏற்படும். ஆரோக்கியம் பாதிக்கும். நீண்ட தூரப் பயணம் உண்டு. பாலைவனச் சோலையாய் இடையிடையே சில நற்பலன்களுக்கும் வாய்ப்புண்டு. செய்தொழிலில் லாபம் கிட்டும்.

**மகரம்:**

நாடிப் போன ஐ.பி.எல். டிக்கெட் வீடு தேடி வந்தது போல யோகப் பலன்கள் கைகூடும். பொருளாதாரத்தில் உயர்வு ஏற்படும். பணியில் பதவி உயர்வும், வீடு, மனை விவகாரங்களில் ஆதாயமும் கிட்டும். நூதனப் பொருட்கள் சேரும். உறவினர், வெளி வட்டாரத்தினரால் நன்மைகள் பெருகும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:**

உள்ளூர்க் கோப்பைக்கு ஏங்கிய கிரிக்கெட் குழுவுக்கு உலகக் கோப்பையே கிடைத்தது மாதிரி, சுப காரியங்கள் மகிழ்ச்சிகரமாய் கைகூடும். உடல் நிலையில் நீண்ட நாட்களாய் இருந்துவந்த உபாதைகள் மறையும். புதுச் சொத்துச் சேர்க்கை ஏற்படும். இடமாற்றத்துக்கும் இடமுண்டு!

**மீனம்:**

டீமில் இடம் கிடைத்தால் போதும் என்ற நிலை மாறி கேப்டன்ஷிப்பே கைக்கு வந்ததைப்போல, நல்ல பொறுப்புகள் உங்களை நாடி வரும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. கடன் பிரச்னைகள் தீரும். புதிய தொழில் முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் ஆனந்தராக ஆலாபனை தொடரும். ○

## 12



குவைத்தின் அறுநூறுக்கும் மேற்பட்ட பெட்ரோலியக் கிணறுகளுக்கு இராக்கின் ராணுவப் படை தீ வைத்தது. அந்தத் தீ அணைய எட்டு மாதங்களுக்கு மேல் பிடித்தது.

# பொருளாதார பலசாலி!

குவைத் பற்றி அறிவதில் நாம் கொஞ்சம் அதிகப்படி ஈடுபாடு காட்டினால் தப்பில்லை. காரணம் அங்கு வசிக்கும் வெளிநாட்டவர்களில் மிக அதிகமானவர்கள் இந்தியர்கள்தான் - சுமார் ஆறு லட்சம் பேர். அடுத்தது எகிப்தியர்கள்.

குவைத்வாசிகளில் மூன்றில் ஒருவர் தான் தேர்தலில் வாக்களிக்க முடியும் என்கிற அளவுக்கு அதன் குடிமக்களின் எண்ணிக்கை சுருங்கியுள்ளது (அல்லது பிற நாட்டிலிருந்து வந்து தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது).

தெற்கில் சௌதி அரேபியா, வடக்கில் இராக் - இவைதான் குவைத்தின் எல்லை நாடுகள். மற்ற திசைகளில் கடல். பாரசீக வளைகுடாவின் வடமேற்குக் கரையில் அமைந்துள்ள குவைத்தின் பெயர்க் காரணமே கூட நீர் தொடர்பானதுதான். 'கவுட்' என்றால் அரேபிய மொழியில் 'நீரின் நடுவே அமைக்கப்பட்ட கோட்டை' என்று அர்த்தம்.

நான்காம் நூற்றாண்டில் பண்டைய கிரேக்கக் காலனியாக குவைத் விளங்கியது மிகப் பழங்கதை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒட்டாமன் சாம்ராஜ்யத்தின் கீழ் அடங்கியிருந்தது குவைத். (மேற்காசியா, தென்கிழக்கு ஐரோப்பா, வட ஆப்ரிக்கா என்று பல கண்டங்களிலும் அப்போது பரந்து விரிந்திருந்தது இந்த துருக்கியர்கள் சாம்ராஜ்யம்). முதலாம் உலகப் போரின் முடிவில் பிரிட்டனின்



குவைத்



பாதுகாப்பில் வந்தது. 1961ல் சுதந்திரம் பெற்றது.

1930களில் பெருமளவில் பெட்ரோலியக் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் குவைத்தின் பொருளாதாரம் விறுவிறு வென்று மேலேறத் தொடங்கியது.

ஒரு போரின் தொடக்கம், அதன் உச்சம், அந்தப் போரின் முடிவு - இவற்றில் எது மிகவும் பயங்கரமானது? இப்படி ஒரு கேள்வியைக் கேட்டால், குவைத் மக்கள் எதிர்பாராத ஒரு பதிலைத் தரலாம் - போரின் முடிவு என்று. ஏன்?

சதாமின் பார்வை தனது நாட்டை ஒட்டிய சின்ன தேசமான குவைத்மீது படிந்தது. 'இராக்கின் மக்கள்தொகையில் பன்னிரண்டில் ஒரு பங்குதான். ஆனால் சம அளவு பெட்ரோலிய வளம். 'என்ன ஒரு அநியாயம்'.

தவிர எட்டு வருடங்கள் இரானோடு நடைபெற்றிருந்த போரின் காரணமாக இராக்கின் பொருளாதாரம் சரிந்திருக்க, குவைத் மட்டும் செல்வச் செழிப்பில் நிமிர்ந்து நின்றது.

'தான் மட்டும் இரானுடன் போர் புரிந்திருக்காவிட்டால், இரான் இந்நேரம் குவைத்துக்குப் பல தொல்லைகள் கொடுத்திருக்கும். எனவே, குவைத் தனக்கு நன்றிக்கடன் பட்ட நாடு' என எண்ணிய சதாம், குவைத் அந்த நன்றிக்கடனை எப்படித் தீர்க்க வேண்டும் என்பதையும் தீர்மானித்தார்.

'போருக்காக உங்களிடமிருந்து இராக்

**ஜி.எஸ்.எஸ்.**


கோப்ரா டவர்

# வாமன தேசங்கள்



குவைத்தைப் பார்த்து, "உன் பெட்ரோலிய உற்பத்தியைக் குறைத்துக் கொள்" என்றார் சதாம்.

வாங்கிய கடனை ரத்து செய்யவேண்டும்' என்றார்.

கொஞ்சநஞ்சமில்லை. சுமார் முப்பது பில்லியன் டாலர் தொகையை ரத்து செய்வதா? மறுத்தது குவைத்.

'சரி குறைந்தது உன் பெட்ரோலிய உற்பத்தியையாவது குறைத்துக்கொள். உலக அளவில் பெட்ரோல் விலை ஏறும். எங்களுக்கும் லாபம் பெருகும்' என்றார். இதற்கும் மறுத்துவிட்டது குவைத்.

போதாக்குறைக்கு குவைத்துக்கும் இராக்குக்குமிடையே உள்ள எல்லைக்கோடு, இராக்கைக் கடலிலிருந்து மொத்தமாகப் பிரித்திருந்தது. இதுவேறு சதாமின் கோபத்தை ஏற்கனவே அதிகப்படுத்தியிருந்தது.

'ஒருகாலத்தில் குவைத் இராக்கின் பகுதியாகவே இருந்தது. பிரிட்டிஷ்காரர்கள்தானே இந் நாடுகளைப் பிரித்தார்கள். எனவே, குவைத்தை ஆக்கிரமித்தால் என்ன?'. 1990 ஆகஸ்ட் 2 அன்று குவைத்தை ஆக்ரமித்தது இராக். ஐ.நா.குழுவின் எச்சரிக்கையை மதிக்க மறுத்தார் சதாம்.

உலக நாடுகள் மற்றும் ஐ.நா.வின் கடும் கண்டனத்தைத் தொடர்ந்து ஒருவழியாக 1991ல் இராக் படை குவைத்திலிருந்து பின்வாங்கியது. ஆனால், போகிற போக்கில் அவர்கள் செய்தது பெரும் அராஜகம். குவைத்திலுள்ள அறுநூறுக்கும் மேற்பட்ட பெட்ரோலியக் கிணறுகளுக்குத் (பெட்ரோல் ஏரிகள்!) தீவைத்தனர்.

மிகத் தீவிரமாக தீயணைப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டும் கூடத் தொடர்ந்து எட்டு மாதங்கள் எரிந்து தணிந்தன அந்தக் கிணறுகள். மிகவும் ஆபத்தான நச்சுக்காற்று சுமார் 1000 கிலோமீட்டர் தொலைவுவரை கூட அடித்தது.

புகை மண்டலத்தினால் குவைத்தின் கணிசமான பகுதிகள் வாழவே தகுதியற்றதாக மாறின.

* வசிப்பவர்களில் 57 சதவீதம் பேர் அரேபியர்கள். 39 சதவீதம் ஆசியர்கள் * ஒன்பது தீவுகள். அவற்றில் 'ஃபைலகா'வில் மட்டுமே மக்கள் வசிக்கிறார்கள். * 'பர்கன்' எனும் குவைத்தின் மிகப் பெரிய பெட்ரோலியக் கிணற்றில் ஏழாயிரம் கோடி பேரல் பெட்ரோலியம் உள்ளது! * உலகின் ஐந்தாவது பணக்கார நாடு. * குவைத்தின் தலைநகரை நினைவு வைத்துக் கொள்வது எளிது - குவைத் சிடி * ஃபால்கன் பறவையை குவைத்தின் பல பகுதிகளில் சகஜமாகப் பார்க்கலாம். நாட்டின் தபால்தலைகள் மற்றும் நாணயங்களில் கூட ஃபால்கன் இடம் பெறுகிறது. * மிகச் சிறிய நாடுகள் பட்டியலில் இடம் - 76 * ஆங்கிலம் அதிக அளவில் பேசப்பட்டாலும் அதிகாரப்பூர்வ மொழி அராபிக்தான். * பல பகுதிகளில் நெடுஞ்சாலைகள். ரயில் போக்குவரத்து கிடையாது. எனினும் ரயில் விட திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

## கோடிக்கோடி பேரல்களில்...

மணல்புயல்கள் பயங்கரமாக வீசியதால் மணலும் புகை தூசும் இரண்டறக் கலந்தன. மனித உயிர்கள் நேரடியாகக் காவு வாங்கப்படவில்லை என்றாலும் இதனால் உடல்நலமிழந்தவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

இன்றைய குவைத்தின் சமூக நிலை எப்படி?

உலகமே ஒரு கிராமமாகச் சுருங்கி வருகிறது. குவைத்தும் கொஞ்சமாக மாறி வருகிறது. என்றாலும் பலவித கட்டுப்பாடுகள் இன்றளவும் உண்டு. அவை பலவித கோணங்களில் வெளிப்பட்டு வருகிறது. இதோ சில உதாரணங்கள்.

இஸ்லாம்தான் தேசத்தின் மதம். எனினும் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் நிறையப் பேர் வசிக்கிறார்கள். ஆனால், மாதாகோயில், கோயில் போன்றவற்றைக் குவைத்தில் காணமுடியாது. தடை! வீடுகளுக்குள் பிற மத வழிபாடுகளைச் செய்ய அனுமதி உண்டு.

மற்ற அரபு நாடுகளோடு ஒப்பிடும்போது குவைத்தில் பத்திரிகை சுதந்திரம் உண்டு. ஆனால் கடவுளைப் பழித்து எழுதினாலோ ஆட்சி செய்யும் அரசக் குடும்பத்தைப் பற்றி விமர்சித்தாலோ கடும் அபராதம் உண்டு. இந்த அபராத விதியை மட்டும் தளர்த்தியிருக்கிறார்கள்.

பெண்களுக்கு 2005ல்தான் வாக்களிக்கும் உரிமை கிடைத்தது. 2008 பாராளுமன்றத் தேர்தலில் 27 பெண்கள் (மொத்தம் 275 எம்.பி.க்கள்) போட்டியிட்டும் ஒருவரும் ஜெயிக்கவில்லை. அதற்கு அடுத்த ஆண்டே நடைபெற்ற தேர்தலில் நான்கு பெண்கள் வென்றனர்.

மற்றபடி பொருளாதார அளவில் குவைத் பலசாலிதான். டிசம்பர் 2007ல் குவைத் தினார்தான் உலகின் மிக அதிக மதிப்புள்ள நாணயமாக வரையறுக்கப்பட்டது.

(அடுத்த இதழில்: **வரிச் சலுகைகள் மூலம் வளம் கொழித்த நாடு**)




சிக்ஸர் அடிக்கல...
மவனே சிவலோகம்தான்
6
OUT
அடுத்த ஐ.பி.எல்.
நம்ம உலகத்துலதான்
ஒழுங்கா ஃபீல்டிங்
பண்ணு, இல்லை...
ஒரே போடு.
ஏய்... அடிக்காத...
அடிக்காத...
இந்த விளையாட்டுக்கு
நான் வரலை...
ஓவியம்: பிள்ளை
கமெண்ட்ஸ்: கமலி



இப்போ பாலபிஷேகம்...
ஒழுங்கா விளையாடல...
'Ball' அபிஷேகம்தான்!
சிரிப்பு ஸ்டேடியம்!
ஐ.பி.எல். ஸ்பெஷல்
7
இப்படித்தான்
ச்சு விளையாடணும்
தலைக்குப் பின்னால
கண்ணிருந்தா
ஃபீல்டிங்குக்கும்
உதவுமில்லே...
சென்னை கிங்ஸ்
ஜெயிக்கணும்னுதான்
கூழ் ஊத்தறேன்...
அடிச்சாதான் தோனி...
கடிச்சான்தான் நாயி...
குட் கேட்ச்...



* கபில்தேவ்

# ஐ.சி.எல்.

ஐரோப்பிய நாடுகளில் கால்பந்து லீக் போட்டிகள் மிகப் பிரபலம். மான்சஸ்டர் யூனைட்டட், பார்சிலோனா, ரியல் மாட்ரிட், அரிசலனல், செல்சியா என பிரபல அணிகள் இந்த லீக் போட்டிகளில் விளையாடுவார்கள். இதற்கென்றே பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் உண்டு. சர்வதேச அணியில் விளையாடும் வீரர்களைப் பல கோடி ரூபாய் கொடுத்து இந்த க்ளப்கள் ஒப்பந்தம் செய்வார்கள்.

கிரிக்கெட்டில் இந்த வகை போட்டிகள் மிகக் குறைவு. முதன்முறையாக 2007ல் ஐ.சி.எல். (இந்தியன் கிரிக்கெட் லீக்) இந்த வகை போட்டியைத் துவங்கியது. டி20 என்றழைக்கப்படும் இருபது ஓவர்கள் மட்டுமே கொண்ட போட்டிகள் அவை. மொத்தம் ஆறு அணிகள். 'இந்தியன் கிரிக்கெட் போர்ட் சரியான வீரர்களை அடையாளம் காணத் தவறி விடுகிறது. இப்போட்டி மூலம் சிறந்த வீரர்களைக் கண்டெடுக்க முடியும்' என்றார் இதன் குழுச் செயலர்களில் ஒருவரான கபில் தேவ். எஸ்ஸல் குரூப் 100 கோடி ரூபாய் முதலீட்டில் இப்போட்டிகளைத் துவக்கியது. வெற்றி பெறும் அணிக்கு ஒரு



* சுபாஷ் சந்திரா:
ஐ.சி.எல். முதலீட்டாளர்



# ஐ.பி.எல்.

மில்லியன் அமெரிக்க டாலர்கள், அதாவது நான்கரை கோடி ரூபாய் பரிசுப் பணம் கொடுத்து உற்சாகப் படுத்தியது.

உள்ளூர்ப் போட்டிகளில் மிகச் சிறப்பாக விளை யாடியும், தேசிய அணியில் இடம்பெற முடியாமல் தவித்த இளம்வீரர்களுக்கு ஐ.சி.எல். ஒரு வரப்பிரசாத மாகத் தோன்றியதால், ஆர்வமுடன் பல வீரர்கள் இதில் சேர்ந்தனர். ஆனால் ஐ.சி.எல்லின் வளர்ச்சியைக் கண்டு பொறுக்காத இந்திய கிரிக்கெட் போர்ட், ஐ.சி.எல்லில் சேர்ந்த வீரர்களை எந்தவொரு உள்ளூர்ப் போட்டிகளிலும் விளையாட முடியாமல் தடைசெய்தது. தேசிய அணிக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள் என்றும் பகிரங்கமாக அறிவித்தது. மேலும், எந்தவொரு இந்திய மைதானத்திலும் போட் டியை நடத்தவிடாமல் தடுத்தது. இதையும் மீறிப் போட்டிகளை நடத்தினர் ஐ.சி.எல். குழுவினர். அமோக வரவேற்பு பெறாவிட்டாலும் ரசிகர்கள் பலர் போட்டிகளை ஆவலுடன் தொலைக்காட்சியில் கண்டுகளித்தனர். பல இளம் வீரர்கள் தங்களது முழுத் திறமையை வெளிப்படுத்தினர். இந்த நிலையில் 'இந்தியன் ப்ரீமியர் லீக்' ஐ அறிமுகப்படுத்தியது இந்தியக் கிரிக்கெட் வாரியம். உலகின் தலைசிறந்த வீரர்கள் அனைவரும் ஐ.பி.எல்லில் பங்கேற்றனர். மொத்தம் எட்டு அணிகள். நட்சத்திர வீரர்களைக் கொண்டும், மிகச் சிறந்த விளம்பர யுக்திகளைப் பயன்படுத்தியும் முதல் ஐ.பி.எல் 2008ல் பெரும் வெற்றியை எட்டியது. ஐ.பி.எல்லின் கவர்ச்சியில் மயங்கிய ரசிகர்கள் ஐ.சி.எல். என்ற ஒன்று இருப்பதையே மறந்தனர்.

**ஐ.**பி.எல்லுக்கும், ஐ.சி.எல்லுக்கும் நடந்த யுத்தத் தில் தன் பணபலத்தாலும் ஆளுமையாலும் ஐ.சி.எல்லை முடக்கியது ஐ.பி.எல். இருமுறை சமாதானப் பேச்சுகள் நடந்தபோதும் அவை தோல்வியில்தான் முடிந்தன. இந்நிலையில் ஐ.சி.எல். போட்டி களில் விளையாடிய 79 வீரர் களை மன்னித்து ஐ.பி.எல் லுக்கு இழுத்துக்கொண்டது இந்திய கிரிக்கெட் வாரியம்.



சரத்பவார்: ஐ.சி.சி. சேர்மன்

ஐ.சி.எல்லின் நட்சத்திர வீரர் லாரா இப்போது ஐ.பி.எல். போட்டிகள் நடக்கும் மைதானங் களில் தென்படுகிறார். அடுத்த வருடம் ஐ.பி.எல்லில் அவர் விளையாட இருப்பதாகச் செய்தி கள் வெளியாகின்றன.

இன்று உலகமே ரசிக்கும் ஐ.பி.எல். போட்டிகளுக்கு முன் னோடி ஐ.சி.எல். ஆனால் அதன் எதிர்காலம் இருண்டுதான் இருக் கிறது.

# மாட்டைத் தூக்கி ஆட்டைத் தூக்கி



"தேள் கொட்டினா எவ்வளவு நேரத்துக்குக் கடுக்கும்?"

"இப்ப எதுக்குக் கேட்கிறே?"

"இல்லே, இப்ப உங்க காலுக்குப் பக்கத்திலே தேள் ஒண்ணு நின்னுக்கிட்டு இருக்கு. அதான் கேட்டேன்!"

- ஜீ.வி.சுபாஷ், சேலம்-1.



"இது ஏட்டய்யா வீட்டுக் கல்யாணமா?"

"ஆமா! ஏன் கேட்கறே?"

"மொய் எழுதற நோட்டை கைல வெச்சுட்டு, ஒரு ஆளு மாமூல் எழுதவறங்க எல்லாம் இங்கே வாங்கன்னு கூப்பிடறாரே."

- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்



"கார்ல போன எம்.எல்.ஏ. ஏன் திரும்பி வர்றார்?"

"தன் தொகுதி எதுன்னு மறந்து போச்சாம்."

-தஞ்சை ஹேமலதா

# ஆட்டுல போட்டு... மாட்டுல போட்டு..!

“வாக்குப்பதிவு வீடியோவை தலைவர் பார்க்க ஆசைப்படுறாரே ஏன்?”

“காசு வாங்கின எல்லாரும் கரெக்டா வோட்டு போட்டாங்களான்னு கணக்கு எடுக்கணுமாம்!”

- அம்பை தேவா





“ஆட்டைத் தூக்கி மாட்டுல போட்டு, மாட்டைத் தூக்கி ஆட்டுல போடுவார், எங்க நாட்டாமை!”

“பரவாயில்லையே, எங்க நாட்டாமை ஆட்டையும், மாட்டையும் சேர்த்து ‘தேட்டை’ல போடுவார்!”

- வெ.சீதாராமன்



“மார்கழி மாதம் வந்துட்டாலே எனக்கும் என் மனைவிக்கும் ஒத்துவராது.”

“மற்ற மாதங்கள்ல ஒற்றுமையா இருப்பீங்களாக்கும்..?”

“அட, அதில்லீங்க! ரெண்டு பேருக்கும் ‘சைனஸ் ட்ரபிள்’ இருக்கிறதால மார்கழி மாதம் ஒத்துவராதுன்னு சொன்னேன்!”

-சீர்காழி வி.ரேவதி

**வராதே ஷாருக் கான்:** அப்போது ஷாருக் கான் 'ஓம் ஷாந்தி ஓம்' படத்தில் நடித்துக் கொண்டிருந்தார். ஓய்வு நேரங்களில் இந்திய அணி விளையாடும் ஒரு நாள் போட்டிகளைப் பார்க்க அடிக்கடி மைதானத்துக்கும் வருவார். கேமராக்கள் அவரை விடாமல் துரத்தின. மைதானத்தில் அவரைப் பேட்டி எடுத்தபோது அவருடைய அடுத்த படம் பற்றிய கேள்வி எழுந்தது. ஷாருக் கானும் அதுபற்றி சில வார்த்தைகள் பேசினார். அவ்வளவுதான். இந்திய கிரிக்கெட் வாரியம், 'கிரிக்கெட் மேட்ச் வழியாகத் தன் படங்களுக்கு விளம்பரம் தேடுகிறார் ஷாருக் கான்' என்கிற கடுமையான குற்றச்சாட்டை முன் வைத்தது. பதிலுக்கு ஷாருக் கான் 'என் படத்தை இன்னொரு தளத்தில் வைத்து ஊக்குவிக்கவேண்டிய அவசியம் இன்னும் எனக்கு ஏற்படவில்லை. என் குழந்தைகள் கிரிக்கெட் பார்க்க வரும்போது அவர்கள் மீது இனி கேமராவைத் திருப்ப வேண்டாம். அவர்கள் ஷாருக் கானின் குழந்தைகள் என்றும் அறி விக்க வேண்டாம்' என்றார். கொல்கத்தா அணியை வாங்கிய பிறகு தவறாமல் மைதானத்துக்கு வந்து கொண்டிருக்கிறார் ஷாருக் கான்.



* கவாஸ்கர்




**கவாஸ்கருடன் சண்டை:** ஒரு நடிகர், தலைசிறந்த கிரிக்கெட் வீரருடன் மோத முடியுமா? 2009 ஐ.பி.எல்.-லில் இந்த வேடிக்கையைக் காணமுடிந்தது. அணியில் ஒரு கேப்டனுக்குப் பதிலாக நான்கு கேப்டன்கள் என்கிற புதிய முறையைக் கொண்டு வந்தார் அப்போதைய கொல்கத்தா பயிற்சியாளர் ஜான் புச்சனன். இதற்கு சுனில் கவாஸ்கர் கடும் கண்டனம் தெரிவித்தார். 'புச்சனன் தோற்றுப்போன வீரர். அவர்தான் மற்றவர்களுக்கு இப்போது 'என்ன செய்ய வேண்டும்; என்ன செய்யக்கூடாது என்றெல்லாம் கூறுகிறார். கொல்கத்தா அணியில் தம் மகன் உள்பட தமக்குத் தெரிந்த பலரையும் உள்ளே நுழைத்துள்ளார். இதெல்லாம் கொல்கத்தா முதலாளிக்குத் தெரியுமோ என்னவோ' என்றார். இதற்குப் பதிலளித்த ஷாருக் கான் 'கவாஸ்கருக்குச் சமகால கிரிக்கெட் தெரியாது. அதில் அவர் ஈடுபடவும் இல்லை. நான்தான் அணியின் முதலாளி. எங்கள் ஆட்ட அணுகுமுறைகள் குறித்து அவருக்கு விமரிசனங்கள் இருந்தால் ஒன்று செய்யட்டும். அவர் புதிதாக ஐ.பி.எல். அணி ஒன்றை வாங்கி அதில் தம் யோசனைகளை செயல்படுத்தட்டும்' என்றார். இந்தப் பதிலுக்கு நாடு முழுக்கக் கண்டனங்கள் எழுந்தன!

**பொய்யான ஐ.பி.எல்.வீரர்:** ஐ.பி.எல்-லின் மிகப் பெரிய சர்ச்சைகளில் ஒன்று ஃபேக் ஐ.பி.எல். பிளேயரின் (fakeiplplayer.blogspot.com) வலைத்தளம். தாம், கொல்கத்தா அணியின் வீரர்களில் ஒருவன் என்றும், அணியின் போக்கு பிடிக்காமல் இப்படி திரைமறைவில் நின்றுகொண்டு பல உண்மைகளைச் சொல்வதாகவும், அந்த வலைத்தளம் கூறியபோது, ஷாருக் கான் கடுமையான அதிர்ச்சிக்

குள்ளானார். தினமும் ஒரு கட்டுரை வெளியிட்டு, கொல்கத்தா அணியில் நிலவும் பூசல்கள், குழப்பங்களை வெளிப்படுத்தியது அந்த வலைத்தளம். அதைச் செய்கிறவர் ஆகாஷ் சோப்ரா, சஞ்சய் பங்கர்... என்றெல்லாம் புரளிகள் கிளம்பின. ஆனால், அவை நிரூபிக்கப்படவில்லை. இப்போது 'ஃபேக் ஐபில் பிளேயர்' தனிப் புத்தகம் ஒன்றும் வெளியிட்டுள்ளார்! இறுதிவரை ஷாருக்கானால் யார் அந்தப் போலி வீரர் என்கிற உண்மையைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

**திரும்பமாட்டேன்:** 2008 ஐ.பி.எல்.லில் கொல்கத்தா ஆடிய எல்லா ஆட்டங்களிலும் கலந்துகொண்டார் ஷாருக் கான். ஆனால் 2009 ஐ.பி.எல்.லிலும் கொல்கத்தா அணி மோசமாக விளையாடியதில் அவர் மிகவும் துவண்டுபோனார். திடீரெனப் போட்டியின் பாதியிலேயே தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பினார். 'என்னுடைய அணி நன்றாக ஆடினால் மட்டுமே மீண்டும் தென் ஆப்பிரிக்காவுக்குச் செல்வேன்' என்று அவர் பேசியது அவர்மீது பரிதாபத்தையே ஏற்படுத்தியது.

**பாகிஸ்தானுக்கு ஆதரவாக:** பாகிஸ்தான் அணியினருக்கு இந்த வருட ஐ.பி.எல்-லில் இடம் இல்லை. இதை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தவர் ஷாருக் கான். 'நாம் மற்றவர்களை வரவேற்பதில் சந்தோஷம் கொள்கிறவர்கள். ஆனால், இப்போது நடப்பது என்ன? அப்துல் ரஸாக்கை நிச்சயம் எங்கள் பக்கம் இழுத்துவிட வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால், முடியவில்லை. பாகிஸ்தானியர்கள்தான் இன்றைக்கு 20-20 சாம்பியன்கள். பாகிஸ்தான் வீரர்கள் பங்குபெறாததில் ஏதோவொரு பிரச்னை இருக்கிறது. அதை யாரும் மறுப்பதற்கில்லை. இங்கு ஒரு க்ரூப் (சிவசேனா) அதைச் செய்யவேண்டும்; இதைச் செய்யக்கூடாது என்று சொல்வதற்கு இருக்கிறது' என்று பேசியது பெரிய பரபரப்பைக் கிளப்பியது. அதன்பின்பு சிவசேனாவுக்கும் ஷாருக்கானுக்கும் நடந்த வாய்ப்போரின் இறுதியில், பலன் அடைந்தது ஷாருக் கான்தான். 'மை நேம் ஈஸ் கான்' சூப்பர் டூப்பர் ஹிட் அல்லவா! ○




* ஷாருக் கான்

இந்தச் சூழலிலிருந்து, தான் எப்போது விடுதலையடையப் போகிறோம் என்கிற கேள்வியுடன், தன் அபார்ட்மென்டை விட்டு வெளியே வந்தாள் நிர்மலா. மழை வருவது போலிருந்தது. குடையை எடுத்துக்கொண்டு வந்து இருக்கலாம். குடையை எடுத்து டீப்பாயின் மீது வைத்த வள், ஹேண்ட்பாக்கில் வைக்க மறந்து போனாள்.

சில நாட்களாக, தான் தானாக இல்லை என்பதை நிர்மலாவால் உணரவே முடிந் தது. விளைவு, தேவையற்ற மறதிகள்; பணிகளில் சிரத்தையற்ற தன்மை, இதன் பின்விளைவுகளாக அலுவலகத்தில் வசவு கள். அவள் அவளாக இல்லாததற்குக் காரணம் கோபி.

அவன் பேசாமலே இருப்பது சின்ன வலியைத் தந்தாலும், ஏன் பேசாமல் இருக்கிறான் என்ற காரணம் தெரியாமல் இருப்பது, மேலும் வலியைக் கூட்டியது. குழந்தையை விட்டுப் பேசவைத்தாள். "ஏன் டாடி பேச மாட்டேங்கறீங்க?" என்று குழந்தை மழலையில் கேட்டபோதும், அவனிடம் எந்த மாறுதலும் இல்லை. பெரும்பாலும் எவ்வளவு கோபமாக இருந் தாலும், குழந்தையிடம் தன் கோபத்தைக் காட்டமாட்டான். குழந்தையிடம் மாத்திரம் எப்போதும் சிரித்த முகமாய்...

இப்போது குழந்தையிடமும் கடுகடு வென்று...

"டாடியைப் பார்க்கவே பயமா இருக்கு மம்மி" நான்கு வயதுக் குழந்தையும்,

# மௌனம் என்னும்

சில நாட்களாக அவனும், அவனாக இல்லை. அவனால் தொடங்கிய சிக்கல் கள், அலுவலகத்தில் வசவில் வந்து முடிந் தது. கோபி, ஒரு வாரமாய் சரியாகப் பேச வில்லை. ஓர் இயந்திரத்தனமான இயங்கு தல் மாத்திரமே, அவனிடம் வெளிப்பட் டது. காரணம் பிடிபடவில்லை.

கல்யாணமான புதிதிலிருந்தே, அவன் தன் ஆளுமையை குடும்பத்தில் நிறுவி யிருந்தான். அதனால் அவனிடம், பெரிதாய் மனம் விட்டுப் பேசிட முடியாது. அவ னுக்கு விருப்பம் இருந்தால், பேசுவான். இல்லாவிட்டால் மௌனச் சாமிதான். இந்த அவனது சுபாவம் பழகிவிட்டிருந்தா லும், அதற்கு முற்றிலும் வேறுவிதமாய் இந்த ஒரு வார நிகழ்வுகள் இருந்தன.

அவனது சுபாவத்தைப் பார்த்துப் பயந்து ஒதுங்கிக்கொண்டது.

'நாம் என்ன தப்பு செய்தோம். எதற்காக அவன் இப்படி இருக்க வேண்டும். அவன் ஏதாவது தப்பு செய்து அதை மறைக்க அல்லது நாம் அந்தத் தப்பு குறித்து எதுவும் கேட்டுவிடக்கூடாது என்பதற்காக இப்படி இருக்கிறானோ?! எது எப்படியிருந்தாலும், இந்த நிலை இனி கொஞ்ச நாளைக்கு நீடித் தால், நமக்கு மனநோய் பிடிப்பதற்கான வாய்ப்புகளே அதிகமுள்ளது.

வாழ்க்கையில் அதீத அமைதியும் பிடிக்காது. காரணம்... அது சூன்யம். அதீத சப்தமும் பிடிக்காது. காரணம்... அது எரிச்சல். இப்போது நம் வாழ்வை சூன்யம் பிடித்துக்கொண்டுள்ளது.'



# மாயவலை!

**யோகி**

**ப**ஸ்ஸில் இருந்து இறங்கி அலுவலகத்தை நோக்கி ஓடினாள் நிர்மலா. வழக்கமாய் கோபியின் வண்டியில்தான் வருவாள். போன வாரம், ''பஸ்ல போ'' என்று சொன்னான். அதுதான் கடைசியாக அவன் பேசிய வார்த்தை. அலுவலக வளாகத்தை அடைந்தாள். வளாகத்தில் - போலீஸ் ஜீப் மற்றும் சில காவல் துறையினர்...

இந்த ஒரு வாரமாய், அலுவலகத்துக்கு காவல் துறையினர் அடிக்கடி வருவதும், நிறுவனத்தின் மேல்மட்ட பிரமுகர்களை விசாரிப்பதுமாக உள்ளனர். இது கிளை அலுவலகம். மைய அலுவலகத்தில், அரசு அதிகாரிகளுக்குக் கையூட்டுக் கொடுத்து சில அரசாங்க ஆர்டர்களைப் பெற நிர்வாகம் முனைந்து இருக்கிறது. லஞ்ச ஒழிப்புத் துறையினர் - சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரையும் கையும் களவுமாகப் பிடித்திருந்தனர்.

சென்ற வாரம் நடந்த பிரச்னை

இத்தோடு முடிந்திருந்தால் எந்தப் பிரச்னையும் இல்லை. ஒரு புலனாய்வுப் பத்திரிகை, இந்த நிறுவனம் தனக்குத் தேவையான ஆர்டர்களைப் பெற, பெண்களைப் பயன்படுத்தியதாக, கிசுகிசு செய்தி வெளியிட்டு, பரபரப்பாக்க, நிறுவனத்தின் பெயர் பழுதானதுதான் மிச்சம்.

அவர்கள் வெளியிட்ட செய்தி உண்மையா... பொய்யா.. நூறு சதவிகிதம் பொய் என்றபோதிலும், பெரும்பாலான பத்திரிகைகள், வேறு விகாரச் செய்தி கிடைக்காததால், இந்தச் செய்தியைத் தங்கள் பசிக்குக் கிடைத்த தீனியாய் வெளியிடத் துவங்கின.

கமிஷன் என்று சொல்லப்படும் கையூட்டுப் பணம் எல்லா நிறுவனங்களாலும் தரப்படுபவையே. அதை நியாயப்படுத்தவும் முடியாது. தங்களுக்கு ஆர்டர் கிடைக்காத ஆத்திரத்தில், வேறு ஒரு நிறுவனம் செய்த வேலை இது. எது எப்படி இருந்தாலும் தவறு தவறுதான். அந்தச் சிக்கலை நிர்வாகம் பார்த்துக் கொள்ளும்.

நிர்வாகம், மாநில அமைச்சர் ஒருவரைப் பார்த்து நிலைமையைச் சரிபண்ணிக் கொண்டு இருப்பதாகச் செய்தி. தன் சிக்கலை யார் சரிபண்ணுவது என்பதுதான் இப்போது நிர்மலாவின் கேள்வி. ஏன் இப்படியானான் கோபி? எப்போதும் யாரும் பேசாமல் இருந்தாலோ அல்லது முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாலோ நிர்மலாவுக்குப் பிடிக்காது. அலுவலகத்தில் யாரேனும் அவ்விதமாக இருந்தாலும், வலுக்கட்டாயமாக தானே போய், ''நா ஏதாவது தப்பா பேசிட்டேனா'' என்று கேட்கும் ரகம்.



**ப**தினான்கு வயதுக்கு முன்புவரை கங்குலிக்குப் பிடித்த விளையாட்டு ஃபுட்பால். பிறகுதான், கிரிக்கெட் மீது அவரது பார்வை திரும்பியிருக்கிறது. சச்சின், கங்குலி, வினோத் காம்ளி மூவரும் ஒன்றாகத்தான் இந்திய அணிக்கு விளையாட வந்திருக்கின்றனர். அரச குடும்பத்தைச் சார்ந்த கங்குலி தற்போது வசிக்கும் வீட்டின் அறைகளின் எண்ணிக்கை மட்டுமல்ல, கார்களின் எண்ணிக்கையும் இருபதுதான்.

-நிலா ரசிகன்

அப்படிப்பட்ட தன்னிடம் விரோதியைப் போல் நடந்துகொள்கிறானே கோபி.

மதியம் சாப்பிட்டு முடித்தபோது, அலுவலகத்தில் ஏதோ பரபரப்பு. ''ஜோ டீ.வில இருந்து ஆட்கள் வந்து இருக்காங்களாம்'' என்ற உஷா தொடர்ந்தாள். ''உண்மை என்னங்கிற நிகழ்ச்சில, லஞ்ச விவகாரத்துல நம்ம எம்.டி. மாட்டினது... நம்ம லேடீஸ் ஸ்டாஃப்ஸைப் பத்தி வந்த நியூஸ்... இதைப் பத்தியெல்லாம் ஒரு ப்ரோகிராம் பண்றாங்களாம்'' என்று சொல்லி விட்டு ஓடினாள்.

இவர்களாக ஒரு பொய்ச் செய்தியை உருவாக்கி, அதை உண்மையாக்கப் பார்க்கிறார்கள். அதாவது ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லி உண்மையாக்க முயற்சிக்கிறார்கள் போலும். ஏன் இவர்களை நிர்வாகம் உள்ளே விட்டது. ஆளுங்கட்சியின் தொலைக்காட்சியாயிற்றே என்பதால், வேறு வழியின்றி விட்டு இருக்கலாம்.

யார் கெட்டுக் குட்டிச்சுவராகப்

போகிறார்கள் என்று நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அலையும் மீடியா! எத்தனை பேரின் குடியைக் கெடுக்கப் போகிறதோ இந்த ப்ரோக்கிராம்!

சட்டென்று மண்டையில் என்னவோ இறங்கியது போல் இருந்தது. 'எத்தனை பேரின் குடியைக் கெடுக்கப் போகிறதோ இந்த நிகழ்ச்சி.' எதுவோ புரிந்த மாதிரி தோன்றியது. போன புதன் கிழமை. இதே ஜோ தொலைக்காட்சியில், பணியிடங்களில் மகளிருக்கான சிக்கல்கள் என்கிற அலசல் நிகழ்ச்சியில். எங்கள் நிறுவனத்தைப் பற்றி மட்டும் நான்கு நிமிஷங்கள் பேசினார்கள்.

**“நான் வேலையை ரிஸைன் பண்ணலாம்னு இருக்கேன்” என்றாள் நிர்மலா.**



அந்த உண்மையற்ற பத்திரிகை செய்திகளைச் சொல்லி, 'பெண்கள் பாதிக்கப்படுவதாக நம்பப்படுகிறது.' 'உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன.' 'இப்படியெல்லாம் நடந்திருக்க வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது' என்று அழகாகப் பூசி மெழுகும் வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். மறுநாளில் இருந்துதான் கோபி பேசுவதை நிறுத்திக் கொண்டான். புரிந்துபோனது. சந்தேகமா... நம் மீது.

மொத்தக் குழப்பத்துக்கும் விடை தெரிந்த மாதிரி இருந்தது. எதுவுமே கேட்காதவனிடம் போய், ''என் மேல சந்தேகப் படுறீங்களா...'' என்று எப்படிக் கேட்பது. தன்னைக் குறித்து எதுவுமே உணராத ஒரு மனிதனின் மனநிலையில் அல்லவா அவன் இருந்திருக்கிறான். தன்னைப் பற்றி அவன் அறிந்தது அவ்வளவுதானா. கொஞ்சமும் நமக்குச் சம்பந்தமில்லாத நபர்களால், எப்படி எல்லாம் பிரச்னை முளைக்கிறது.

கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் - எல்லாமே அடுத்தவனின் நிம்மதியைப் பறிப்பதாகவே உள்ளது. என்ன சொன்னால் கோபி, சராசரியான மனநிலையை அடைவான். இரண்டு மூன்று பதில்கள், இந்தப் பிரச்னைக்குரிய கேள்விக்கு விடையாய் வந்தன. வந்தவற்றில் கோபிக்குப் பிடித்தமான ஒன்றைப் பொறுக்கி எடுத்துக் கொண்டாள்.

இப்போது தன் நிம்மதியை விட, அவனது மௌனத்தை உடைப்பதுதான் முக்கியமான ஒன்றாகப்பட்டது. வீட்டிலுள்ள மயான அமைதி வேண்டாம். மனம் சிக்கலிலிருந்து வெளியே வந்த மாதிரி இருந்தது. எப்படியும் இன்றைக்குள் எல்லாமே முடிவடைந்துவிடும் என்ற நம்பிக்கை வந்தது. டீ.வி.க்காரர்கள் அவள் பக்கமாய் வந்தபோது அவர்களைப் புறக்கணித்தாள்.

வீட்டுக்கு வந்தாள். அப்போதுதான், கோபியும் குழந்தையை அழைத்துக் கொண்டு வந்திருந்தான். ''மம்மி'' என்று ஓடி வந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டு கோபியின் பின்னால் நடந்தாள். பிறகு, எல்லோருக்குமாக டீ எடுத்துக் கொண்டு வந்தவள்,

அவன் பக்கத்தில் அமர்ந்தவாறு, சற்றே பயத்துடன், ''நான் வேலையை ரிஸைன் பண்ணலாம்னு இருக்கேன்'' என்றாள். அவன் அவளைப் பார்த்தான்.

ஒரு வாரமாய், எதற்குமே வாய் திறக்காமல் இருந்தவன், முதன்முதலாய் வாய் திறந்தான். ''உன்னைய யாரு வேலைக்குப் போகச் சொன்னது. நீயாதான் போறேன்னு சொன்னே. இப்ப நீயா போக மாட்டேங்கிற. உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலை'' என்றான்.

கோபி, இப்போது அவளுக்கு முழுமையாய்ப் புரிபடலானான். ●

# அறிவாலயத்துக்குப் ஐ.பி.எல்.

**வார்த்தைகளால் ஐ.பி.எல். ஆடுகிறார் சோ. இதோ அவரது ஆடுகளம்...**

**நீங்கள் கிரிக்கெட் ஆடியிருக்கிறீர்களா?**

"நாடகங்கள் போடுவதற்கு முன்னால் கிரிக்கெட் தான் எனக்குப் பிடிச்ச விஷயம். பல்வேறு டிவிஷன்களிலும், ஆடும் கிரிக்கெட் க்ளப்களுக்காக எம்.சி.சி.யில் சலுகை விலையில் டிக்கெட் கோட்டா உண்டு. அந்த டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு மேட்ச் பார்க்கப் போவோம். இளம்வயதில் 'ஃப்ரீலான்ஸர்ஸ் கிரிக்கெட் க்ளப்' என்ற ஒரு டீமில், மூன்றாவது டிவிஷனில் விளையாடியிருக்கேன். அதன் பிறகு 'மில்கி வே' கிளப்பில் ஆடினேன். பிறகு முதல் டிவிஷன். அப்போ என் கண்ணாடியின் பவர் 7.2 அதனால ரொம்பப் பிரமாதமா ஆட முடியலை. நான் எல்லோருக்கும் நல்ல ஃப்ரெண்டுங்கறதால என்னை டீமில் சேர்த்துக்கொள்வார்கள். வெங்கட்ராகவன், ஸ்ரீகாந்த்னு நிறைய கிரிக்கெட் பிளேயர்களையும் தெரிஞ்சுக்க முடிஞ்சது. சட்டக் கல்லூரியில படிக்கிறபோது, நெட் பிராக்டீசுக்குப் போவேன். ஆடுவதற்கு இல்லை; ஆடுகிறவர்களுக்கு இன்ஸ்டிரக்ஷன்ஸ் கொடுப்பதற்கு!"

**அஞ்சு நாள் மேட்ச், ஒரு நாளாகி, அதுவும் இப்போ 20 ஓவரா சுருங்கிப் போச்சே?**

"முதல்ல என்னால் மனத்தளவுலே இதை ஏத்துக்கவே முடியலை. ஆனா அதன் பிறகு ஆர்வம் வந்துடுச்சே! இப்போ அஞ்சு நாள் உட்கார்ந்து பார்க்கற பொறுமை யாருக்கும் இல்லை! மாற்றம்ங்கிறது எதுலயும் தவிர்க்கமுடியாதது; கிரிக்கெட் அதுக்கு விதிவிலக்கு இல்லை. டெஸ்ட் மேட்ச்ல நாளெல்லாம் ஆடி 200 ரன் அடிப்பாங்க. ஆனா இப்போ



டி 20யில ஒரு டீம் 300 ரன் அடிக்கிறது சகஜமா யிடுச்சே!"

**அன்றைய கிரிக்கெட்... இன்றைய கிரிக்கெட்?**

"ப்ளேயர்ஸ் கிரவுண்டுல நடந்துக்கற முறையில நிறைய வித்தியாசம் இருக்கும். அந்தக் காலத்துல ப்ளேயர்ஸ் எல்லாரும் ஜென்டில்மென். இப்போ சகிக்கலை. அதுவும் ஹர்பஜன் சிங் மாதிரியானவங்க அஷ்டகோணலாக முகம் காட்டும் செயல்கள் கண்டிக்கத்தக்கவை. அதுக்காவே அவங்களை டீம்ல சேர்த்துக்கக் கூடாது. முன்னால ஆஸ்திரேலியா டீம் ப்ளேயர்ஸ் இதுமாதிரி பண்ணுவாங்க; நம்ம ஆளுங்க அவங்களை மிஞ்சிட்டாங்க. கேட்டால், இது 'அதீத ஆர்வம்'னு சொல்லறாங்க; இது ஆர்வம் இல்லை; அநாகரிகம்!"

**இன்னைக்கு இந்தியர்கள் மிக அதிகநேரம் டீ.வி. முன்னால கிரிக்கெட்டுக்காக வீணாக்கறாங்களே?**

"இல்லைன்னா சினிமாவுக்குப் போவாங்க. அதுக்கு கிரிக்கெட்டைப் பார்ப்பது பெட்டர். நான் முன்னால நிறைய மேட்ச் பார்ப்பேன்; இப்போ வேலை அதிகமாக இருக்கு; நிறைய பார்க்க முடியலை. அது அவரவர் வேலையைப் பொறுத்தது."

# போயஸ்கார்டனுக்கும் நடந்தா?

**கிரிக்கெட் பண முதலைகளின் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறதே?**

"ஒரு பக்கம் அவர்கள் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தாலும், இன்னொரு பக்கம் இதுக்கு கிரிக்கெட்தானே அஸ்திவாரம்? அதை வளர்த்தாக வேண்டுமே! ஜீ டீ.வி.யின் சுபாஷ் சந்திரா ஐ.சி.எல். ஆரம்பித்தபோது, அதுக்குப் போட்டியா இவங்க ஆரம்பிச்சது தானே இந்த ஐ.பி.எல்!? ஐ.பி.எல்.லில் ஆட கிரிக்கெட்டர்களுக்கு நிறைய பணம் கொடுக்கணும். அதுக்காக ஜனங்களுக்கு கிரிக்கெட் மேல இருக்கிற ஆர்வத்தை




அவர்கள் பயன்படுத்திக்கறாங்க. இது ஒண்ணும் கெட்ட பழக்கம் இல்லையே!"

**கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசியல்வாதிகளின் ஆக்கிரமிப்பு...?**

"பணம், அதிகாரம் இரண்டும் எங்கே இருந்தாலும் அரசியல்வாதிகள் அதைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வது புதுசில்லையே?"

**கிரிக்கெட்டர்களுக்கு வழங்கப்படும் வரிச் சலுகை அவசியமா?**

"அதுக்கு அவசியமே இல்லை; அவர்கள் ஏராளமாகச் சம்பாதிக்கிறார்கள்; அதற்கு வரி கட்ட வேண்டியதுதான்."

**அறிவாலயம் அணிக்கும், போயஸ் கார்டன் அணிக்கும் டி20 மேட்ச் நடத்தினால்?**

"போயஸ் கார்டன அணியில் ஆட ஆள் இருக்க மாட்டாங்க. அறிவாலயம் அந்தப் பிளேயர்ஸை எல்லாம் விலைக்கு வாங்கிடும். அம்பயருக்கும் பணம் போயிடும். அப்புறம் அறிவாலயம் அணிதான் ஜெயிக்க வாய்ப்புகள் அதிகம்."

ஐ.பி.எல். தொடங்கப்பட்டதன் நோக்கங்களில் ஒன்று சிறந்த வீரர்களை இந்திய கிரிக்கெட் அணிக்குத் தேர்ந்தெடுப்பது. அது ஓரளவு நிறைவேறத் துவங்கியுள்ளது. "வந்துட்டாங்கய்யா!" என்று நாம் வரவேற்கக்கூடிய சிலர்:

மனீஷ் பாண்டே-19 வயதுக்குட்பட்ட உலகக்கோப்பை, முதல் ரஞ்சி சீஸன், முதல் ஐ.பி.எல். என மனீஷ் பாண்டேவுக்குத் தோல்விகள் புதிதல்ல. ஆனால், ஐ.பி.எல்.-லில் முதல் செஞ்சுரி அடித்த வீரர் என்கிற பெருமை அவருக்குத்தான்! அப்பா ஆர்மி வீரர். கிரிக்கெட்டில் உருப்படாமல் போனால் ஆர்மியில் சேர்த்துவிடுவேன் என்று அவர் மிரட்டியிருக்கிறார். ஆனால் மகன் ஐ.பி.எல்.-லில் சாதித்துக் காட்டிவிட்டார். இந்திய இளம் வீரர்களில் சிறந்த ஃபீல்டராகவும் பாண்டே அறியப்படுகிறார்:




ஆஷிஸ் நெஹ்ரா

யூசுஃப் பதான்







மனீஷ் பாண்டே

(உ-ம்) ரஞ்சி இறுதிப் போட்டியில் பாண்டே பிடித்த கேட்ச். இரண்டாவது ஐ.பி.எல்.-லில் அதிகக் கவனம்

பெற்ற மனீஷ் பாண்டே இந்திய அணியில் சேரும் நாள் வெகுதொலைவில் இல்லை.

**யூசுஃப் பதான்** - ஐ.பி.எல்.-ன் மிகப்பெரிய வெற்றி வீரர். இதற்கு முன்பு பதான் அவ்வளவு பிரபலம் கிடையாது. 20-20 உலகக்கோப்பை இறுதி ஆட்டத்தில் கொஞ்சநேரம் ஆடினார். ஆனால், முதல் ஐ.பி.எல்.-லில் வார்னேவின் ராஜஸ்தான் அணி விஸ்வரூபம் எடுப்பதற்கு முக்கியக் காரணம் பதான்தான். போட்டி தொடங்கும் முன்பே பதானின் வேலை என்ன என்பதை எழுதிக்கொடுத்துவிட்டார் வார்னே. அவரும் அப்படியே அதைச் செய்தார். முதல் ஐ.பி.எல். முடியும் முன்பே இந்திய அணிக்குத் தேர்வான யூசுஃப் பதான், இன்றைக்கு இந்திய அணியில் தவிர்க்கமுடியாத வீரர்.

**ப்ரக்யான் ஓஜா** : அனில் கும்ளேவுக்குப் பிறகு, இந்திய அணியில் ஹர்பஜன் சிங்குக்குத் தோள் கொடுக்க ஒரு ஸ்பின்னர் தேவைப்பட்டார். அந்த இடத்தை முரளி கார்த்திக் அல்லது பியூஸ் சாவ்லா நிரப்பலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தபோது புதிதாக உள்ளே நுழைந்தார் ஓஜா. முதல் ஐ.பி.எல்.-லில் டெக்கான் சார்ஜர்ஸ் 14

# வந்துட்டாங்கய்யா; வந்துட்டாங்க!

ஆட்டங்களில் 12ல் தோற்றுப்போனது. நம்பிக்கையாக ஆடிய ஒரே ஒருவர் ஓஜா மட்டுமே. இந்திய அணிக்கும் டெக்கான் அணிக்கும் இன்றைக்கும் தவிர்க்கமுடியாத வீரராகிவிட்டார் ஓஜா.

**ஆஷிஸ் நெஹ்ரா** - ஷாகீர்கான் இந்திய அணிக்குள் மீண்டும் நுழைந்தபோது, அவருடன் இணைந்து பந்து வீசிய நெஹ்ராவை யாராலும் மறக்க முடியாது. ஆனால் நான்கு வருடங்கள் நெஹ்ரா பற்றி ஒரு செய்தியும் இல்லை. ஒன்றரை வருடம் படுத்த படுக்கையாகக் கிடந்து, கிரிக்கெட்டிலிருந்து விலகி இருந்தார். 2009 ஐ.பி.எல்.-ல்



அமித் மிச்ரா

வந்து இறங்கினார் நெஹ்ரா. டெல்லி அணியின் ஒவ்வொரு வெற்றியிலும் நெஹ்ராவின் பங்களிப்பு இருந்தது. அந்த ஐ.பி.எல். முடிந்தபிறகு சிறந்த 11 வீரர்களின் பட்டியல் ஒன்றை வெளியிட்டார் இந்தியத் தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த். அதில் ஆச்சரியமாக நெஹ்ராவின் பெயரும் இருந்தது. கடந்த ஒருவருடமாக இந்தியாவின் ஒருநாள் அணியில் நெஹ்ராவுக்கு நிரந்தர இடம்.

**அமித் மிச்ரா** - ஹர்பஜன் சிங்குக்கு இணையாக ஓஜாவை மட்டும் தேர்வு செய்தால் எப்படி? போட்டிக்கு ஓர் ஆள் வேண்டாமா? முதல் ஐ.பி.எல்.-லில் ஹாட்ரிக் எடுத்தது முதல் மிஸ்ராவுக்கு ஏறுமுகம்தான். ஓஜாவைப் போலவே உடனடியாக இந்திய அணிக்குத் தேர்வானார். தொடர்ந்து ஓஜாவுடன் கடுமையாகப் போட்டியிட்டு அணியில் இடம் பிடித்துவருகிறார் மிஸ்ரா. பேட்டிங்கும் கொஞ்சம் வரும் என்பதால் ஓஜாவை விடவும் மிச்ராவுக்கு வாய்ப்புகள் அதிகம் வருகின்றன.

**சொருப் திவாரி** - தோனியின் தம்பிபோலத் தோற்றமளிக்கும் திவாரி, தோனியின் ஊரான ஜார்கண்டைச் சேர்ந்தவர். இந்த ஐ.பி.எல்.-லில் கிடைத்த நட்சத்திரம் இவர்தான். மும்பையின் இரண்டாவது ஆட்டத்தில் ப்ராவோ, பொலார்டுக்கு முன்னால் திவாரியை ஆட அனுப்பினார் சச்சின். அவருடைய நம்பிக்கையைக் காப்பாற்றி அரைசதம் அடித்தார் திவாரி. எளிதாக சிக்ஸர் அடிக்கிறார். நன்றாகவும் ஆடுகிறார் என்கிற அபிப்ராயங்கள் இவர்மீது விழுந்துள்ளதால் விரைவில் இந்திய அணியில் இடம்பிடிப்பார் இந்த இருபது வயதான இடது கை ஆட்டக்காரர். ●


சொருப் திவாரி


ப்ரக்யான் ஓஜா

# குமுறும் அமைச்சர்கள்!

● 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண் டிருக்கிறார்கள் தமிழக அமைச்சர்கள். கடந்த சில நாட்களாக அவர்களைப் பயமுறுத்தி வந்த அமைச்சரவை மாற்றம் என்ற செய்தி, மூன்று அமைச்சர்களுக்குள்ளான சின்ன மாற் றங்களோடு முடிந்துவிட்டது என்ற நிம்மதி அவர்களுக்கு! முதல்வரின் செயலாளர்கள், இதுதான் வாய்ப்பு என்று சில அமைச்சர்களைக் கழற்றி விட காய் நகர்த்தினார்கள். ஆனால், ஒவ்வோர் அமைச்சரும் முதல்வர் குடும்பத்தில் யாரையாவது 'நலன் விரும்பியாக'ப் பிடித்து வைத்திருப்பதால் அவர்கள் நினைத்தது நடக்கவில்லை.

● துரைமுருகனுக்கு ஏக வருத்தமாம். சட்டமன்ற வளாகக் கட்டுமானம் முடிந்தவுடன் பொதுப்பணித் துறை மீண்டும் தம்மிடம் கொடுக்கப்படும் என்று எதிர் பார்த்தார். ஆனால், ஏமாற்றம். சிறைத் துறையைக் கொடுத்து 'என் ஜாய்' என்று சொல்லிவிட்டார்கள். ''பத்து மாடி நூலகக் கட்டடம் முடியும்வரை பொதுப் பணித் துறையை முதல்வர் தம்மிடமே வைத்துக் கொள்வார். அதற்குள் தேர்தலும் வந்துவிடும்'' என்று சொன்னார் ஓர் அதிகாரி. 'பல ஜூனியர் அமைச்சர்கள் செயல்பட முடியாத வகையில் முதல்வர் அலுவலக அதிகாரிகள் தலையிட்டு இருக்கிறது' என்று பேச்சு அடி படுகிறது. ''முதல்வர் அலுவலகத்தில் ஓய்வு பெற்ற நான்கு பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்குப் பல வித ஆசைகள்; நோக்கங்கள். இதில் ஒருவர், ஓய்வு பெற்ற மற்றோர் அதிகாரியோடு சேர்ந்துகொண்டு ஒரிஸ்ஸாவில் 400 கோடி செலவில் தனியார் மின் நிலையம் அமைப்பதற்குக்கூட முயற்சி செய்கிறார் என் றால் அவர்கள் வசதிகளைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று ஒரு ஜூனியர் அமைச்சர் குமுறுகிறார்!

● கொடநாட்டிலிருந்து கிளம்புகையில் சட்ட மன்றத் தின் பட்ஜெட் தாக்கல் கூட்டத்தில் ஆஜராக வேண்டும் என்ற நோக்கத்தில்தான் கிளம்பினார் ஜெயலலிதா. ஆனால், முதல்வர் படத்தை சட்டமன்றத்தில் வைத்து விட்டதால் எரிச்சலடைந்து விசிட்டைக் கேன்சல் செய்துவிட்டாராம். தேர்தல் நெருங்கி வருகிறபடி யால், ஜெ., அன்று சட்ட மன்றத்துக்கு வந்து 1990ல் செய்ததுபோல ஏதா வது 'அலம்பல்' செய் வாரோ என்றுகூட பட படப்பில் இருந்ததாம் ஆளும் கட்சி. அவர் வராததால் ரிலாக்ஸ் ஆனார்களாம். 'இனி அம்மா புது சட்டமன்றத் துக்கு வருவது சந்தேகம் தான்'' என்கிறார் ஓர் அ.தி.மு.க. பிரமுகர்.

* எரிச்சல் பாலிடிக்ஸ்!





* ஏக வருத்தம்!

- சஞ்சயன்



# பொட்டல்வெளி போதுமே!

அரிதாக வெயிலடிக்கும் இங்கி லாந்தில்
ஆங்கிலேயர் நாள்முழுக்க வெயிலில் காய
தெரிந்தெடுத்த விளையாட்டு கிரிக்கெட்; இன்றோ
தெருவெங்கும், தேசமெங்கும் பரவிப் போச்சு!

கிட்டிப்புல் விளையாடித் திரிந்த நம்மின்
கிராமத்துச் சிறுவர்கூட அதைம றந்து
பொட்டல்வெளி கிடைத்துவிட்டால் போதும்; பந்தை
போட்டுவிளை யாடுகிறார் கிரிக்கெட் அங்கே!

விறுவிறுப்பாய் சுறுசுறுப்பாய் ஆடு கின்ற
விளையாட்டு பலவுண்டு; கிரிக்கெட் மட்டும்
பரபரப்பு இருந்தாலும் பதற்ற மின்றி
பக்குவமாய் ஆடவேண்டும்; அதன்சி றப்பு!

மண்ணாசை பொன்னாசை பெண்மீ தான
மனத்துக்குள் ஆசைதனை வைத்தி டாமல்
எண்ணத்தை போல்டாக்கும் விதமாய், பந்தை
எறிந்தெறிந்து வீழ்த்த வேண்டும் மூன்று ஸ்டெம்பை!



தமிழ்மணவாளன்



ஆறுபந்து ஓவருக்கு; அறுசு வைபோல்.
அடடாவோ, அடுத்தடுத்து ஒருசு வையாய்
வீறுகொண்டு வீசினால்தான் வெற்றி யாகும்
வெளிக்கோட்டில் வீசிவிட்டால் வெட்டி யாகும்!

குருவிக்குக் குறிவைத்தால் மரம்ம றைத்து
குருவிதலை மட்டும்தான் தெரியும் என்று
நிறுவியவன் அர்ச்சுனன்தான்; அதனை மீண்டும்
நிரூபிக்கும் வித்தைதான் பௌலிங் ஆகும்!

இசைக்குஒரு இரகுமான்போல் இந்தி யாவின்
ஏற்றத்தைக் காட்டுபவர் சச்சின்; யாரும்
அசைக்கவே முடியாத சாத னைதான்
அவர்படைத்தார்; ஆகாயம் எல்லை யாகும்!

இடைமறிக்கும் எதிரிகளைத் தவிர்த்துப் பாய்ந்து
இலக்குதனை அடைவதுவே பௌண்ட்ரி யாகும்
கடைவாயில் கைவைத்து உயரே பார்க்க
கலங்கவைத்து அடித்தாலே சிக்ஸர் போகும்!

தோல்விகளும் வெற்றிகளும் சகஜம்; ஆனால்
தொடர்ந்திங்கே ஆடுவதே வாழ்க்கை; ஆக
கேள்விக்கே யிடமில்லை; மனத்தில் இன்பக்
கிளர்ச்சிதரும் ஐபிஎல் கிரிக்கெட் மேளா!

பொற்கிழி 2



ஐ.பி.எல். ஸ்பெஷல்

**எட்டு டீம்கள் மோதினாலும், இருக்கறது ஒரு 'கப்'தான். யாருக்குக் கிடைக்கும் கோப்பை? ரசிகர்கள் சிலர் சொல்றாங்க...**

**வாகீஷ்:**

இந்த வருஷம் சரியான போட்டி டெல்லி டேர் டெவில்ஸுக்கும் மும்பை இந்தியன்ஸுக்கும் இடையே தான். நிச்சயம் இந்த இரு அணிகளில் ஒன்றுதான் கோப்பையைக் கைப்பற்றும். அபாரமாக ஆடும் வீரேந்திர ஷேவாக், அடிபட்டுக் கொள்ளாமல் இருந்தாலே போதும். டெல்லி டேர் டெவில்ஸை எப்படியும் கோப்பையை வெல்ல அவர் கொண்டு சென்றுவிடுவார். படுமட்டமாக கிரிக்கெட் விளையாடி, பார்ப்பவர்களைக் கடுப்பேத்தும் ஒரே டீம் ராஜஸ்தான் ராயல்ஸ் தான். கொஞ்சம்கூட டீம் ஸ்பிரிட்டே இல்லை. ஒட்டுமொத்த ஐ.பி.எல். மேட்சுலேயும் படுகேவலமான ஸ்கோர் எடுப்பதில் படுகில்லாடிகள் ராஜஸ்தான் ராயல்ஸ்.

**சுரேஷ்குமார்:**

ஒரு காலத்துல நான் அப்படி ஒரு கிரிக்கெட் வெறியனா இருந்தேன். இப்போ எல்லாம் கிரிக்கெட் மேலேயே பயங்கர வெறுப்பு வந்துடுச்சு. ஐ.பி.எல்.க்கு நான் கொடுக்கற விளக்கம் இதுதான் 'இந்தியன் பப்ளிக் லூட்டி'. இந்த மேட்சைப் பொறுத்த வரைக்கும் வெற்றி வர்த்தகர்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும்தானே தவிர விளையாட்டுக்கு அல்ல... நம் நாட்டில் ஏகப்பட்ட விவசாயிகள் பம்புசெட்டுக்கு பவர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், ஐ.பி.எல். கிரிக்கெட் மைதானங்களில் ஏகப்பட்ட பவர் வாட்ஸ் தேவையா?



✱ சுரேஷ்குமார்



✱ வாகீஷ்



✱ விக்ரம் சாய்ராம்

**அரவிந்த்:**

இருக்கும் எட்டு டீம்களில் நம்பர் ஒன் டெல்லி டேர் டெவில்ஸ்தான். இருபது ஓவர்களுக்குள் எப்படி விறுவிறுப்புக் குறையாமல் வேகமாகவும், விவேகமாகவும்






# வெற்றி, வர்த்தக நிறுவனங்களுக்கே!



* பாலாஜி



* அரவிந்த்



* செந்தில்ராஜ்

ரன்களைக் குவிக்க வேண்டும் என்பது இவர்களுக்கு அத்துப்படி. காம்பீர், ஷேவாக்ன்னு சூப்பரான விளையாட்டு வீரர்கள் கொண்ட டீம் அது.

**பாலாஜி:**

சந்தேகமே வேண்டாம். ஐ.பி.எல் லில் வெற்றிபெறப்போவது டெல்லி டேர் டெவில்ஸ்தான். அதற்கு ஈடு கொடுக்கும் ஒரு டீம் மும்பை இந்தியன்ஸ் டீம். ஒவ்வோர் அணியிலும் குறிப்பிட்ட ப்ளேயர் மிகப் பிரமாதமாக ஆடுகிறார்கள். Kolkata Knight Ridersல முரளி கார்த்திக்கின் அபார மான பந்து வீச்சு, அதே போல Chennai Super Kings டீமில் ஹேடன், 43 பால்களில் 93 ரன் எடுத்தது இன்னும் நரம்புல அதிருது! ரெய்னாவும் ரன் குவிப்ப தில் படுவேகமாகச் செயல்படுகிறார். ஐ.பி.எல்.லில் நெருடலான விஷயம் இந்த சியர் கேர்ள்ஸ்தான்.

**விக்ரம் சாய்ராம்:**

இந்த வருஷம் முதல் மூணு இடங்களைப் பிடிக்கப்போற டீம்ஸ்: மும்பை இந்தியன்ஸ், டெல்லி டேர் டெவில்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ். போன வருஷம் முதல் இடத்துல இருந்த டெக்கான் சார்ஜர்ஸ், இந்த வருஷம் மூணாவது இடத் துக்குப் போயிடும். நான்காம் இடத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் வரும். சென் னைல நடந்த கிரிக்கெட் மேட்சை என் தாத்தாவோடு நேர்ல போய்ப் பார்த்துட்டு வந் தேன். நேர்ல போய் மேட்ச் பாக்கற த்ரில்லே தனிதான்.

**செந்தில் ராஜ்:**

கிரிக்கெட், லக்கின் அடிப் படையில் நடக்குற விளை யாட்டு. இந்த ஐ.பி.எல். ஆரம் பிச்ச ஒரு வாரத்துல பார்த் தீங்கன்னா, டெல்லி டேர் டெவில்ஸ் லீடிங்ல இருந் தாங்க. அதுக்கு அப்புறம் சென்னை சூப்பர் கிங்ஸ் மற் றும் மும்பை இந்தியன்ஸ் டாப் கியர்ல போய்க்கிட்டு இருக் காங்க. ராயல் சேலஞ்சர்ஸ் கூட சமயத்துல நல்லா ஆடறாங்க. போன மேட்சுல பிரவீன்குமார் எடுத்த ஹாட்ரிக் இன்னும் கண்ணுக்குள்ளேயே இருக்கு. கங்குலி, முரளி கார்த்திக் இப் படி பேர் சொல்ற ப்ளேயர்ஸ் இருந்தாலும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ரொம்ப சுமாராத்தான் ஆடிக்கிட்டு இருக்காங்க. ●



ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்

# தாடங்க மகிமை!

**கா**னலோலுபா - கர்விதாவாக - பெருமித நிலையில் இருந்தாலும் கானத்துக்கு மயங்கக்கூடியவள்; கானத்தினால் ப்ரீதி அடைகிறவள் அம்பிகை.

**கல்பனா ரஹிதா** - 'அம்பாளுக்குக் கற்பனைகளே இல்லை' என்று அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம்!

அம்பாளுக்குக் கற்பனைகள் கிடையாது என்றால் என்ன அர்த்தம்...? கற்பனை என்பது எப்போது வரும்..? ஒரு விஷயத்தைப் பற்றித் தெரியாதபோதுதான் அது இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ என்று கற்பனை வரும். அம்பாளோ ஸர்வக்ஞாவாக - அனைத்தும் அறிந்தவளாக அல்லவா இருக்கிறாள்! அவளுக்குக் கற்பனையில் எதையும் நோக்க வேண்டிய அவசியம் ஏது!

**காஷ்டா** - காஷ்டா என்றால் சிவனுடைய தர்மபத்னி. சிவனுடைய அஷ்ட மூர்த்தங்களில் ஆகாச மூர்த்தத்துக்கு பீமன் என்று பெயர். அந்த பீமனுடைய தர்ம பத்னியாக இருக்கக்கூடிய ஸ்வரூபத்துக்கு காஷ்டா என்று பெயர். ஆகாசத்தை ஸ்ருஷ்டி செய்யக்கூடியவள். அதனைத் தன் இருப்பிடமாகக் கொண்டவள் என்பதாலும் காஷ்டா என்கிற பெயர். வேதாந்த ரூபமாக இருக்கிறவள் என்றும் இதற்கு ஓர் அர்த்தம் உண்டு.

24

**கல்பனா ரஹிதா** என்பதையும் இரண்டாவதாக ஓர் அர்த்தத்தில் பார்க்கலாம்:

கல்ப-னார-ஹிதா-என்று பிரித்துப் பொருள்கொண்டால், கல்ப காலத்தில் தண்ணீரில் தவிக்கக்கூடிய ஜீவன்களுக்கு ஹிதத்தைத் தரக்கூடியவள் என்று அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம்.


## காணாமல் போன சிவன்!

**கா**ந்தா 'அ'காந்தா என்று இந்தத் இரு நாமத்தைப் பிரித்துச் (முந்தைய நாமத்திலிருந்து 'அ' சேர்த்து) சொல்வதுண்டு. காந்தம் என்றால் பாவம். நமது பாவத்தைப் போக்கக்கூடியவள் அகாந்தா.

**காந்தார்த்த விக்ரஹா** - காந்தா என்றால், கணவர் அல்லது மனைவி என்று அர்த்தம். அம்பாளுடைய காந்தா என்று சொன்னால் அது காமேசுவரர்தான். காமேசுவரரின் அர்த்த (பாதி) விக்ரஹாவாக - அவருடைய பாதி ஸ்வரூபமாக வாம பாகத்தில் இருக்கக்கூடியவள். அர்த்தநாரீசுவர தன்மை. இதை இரண்டு விதமாகப் பார்க்கலாம் - சிவனைப் பிரதானமாக வைத்தால், சிவனுடைய ரூபத்தில் பாதியைக் கொண்டிருப்பவள் என்று அர்த்தம். அம்பாளைப் பிரதானமாக வைத்தால், அவளுடைய ரூபத்தில் பாதியை சிவன் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம் - இதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.

ஆசார்யர் ஆதி சங்கரர் பாடுகிறபோது,

சுதா சேஷய்யன்


சௌந்தர்யநாயகி,
நெரூர்

'அபரிதிருப்தேன மனஸா' என்பார். 'நீ அவருடைய பாதி ஸ்வரூபத்தை எடுத்துக் கொண்டுவிட்டாய். ஆனால், உனக்குத் திருப்தியே வரவில்லையே அம்மா!' என்கிறார் ஆசார்யார்.

ஏனென்றால், அர்த்தநாரீசுவர் ஸ்வரூபத்தை அவர் பார்க்கிறபோது என்ன ஆகிறது, முழுசாக அம்பாள்தான் கண்ணுக்குத் தெரிகிறாள்! ஈசன் காணாமல் போய்விட்டான். 'அவள் முழுதாக அவனை ஆக்கிரமித்துவிட்டாள்' என்கிறார்!



## ஆனைக்கா அன்னை

**காரியகாரண நிர்முக்தா**- காரிய காரணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு இருக்கக்கூடியவள்.

**காமகேளிதரங்கிதா** - சிருங்கார ரஸத்தில் லயிக்கக் கூடியவள்.

**கனத்கனகதாடங்கா** - ஜொலி ஜொலிக்கிற தாடங்கங்களை அணிந்தவள். தாடங்க ஸ்வரூபிணி. அம்பாளுடைய சக்தியெல்லாம் அந்தத் தாடங்கத்தில் இருப்பதாகக் கணக்கு. அதனால்தான் 'தவஜனனி தாடங்க மஹிமா' என்ற வர்ணனை எழுந்தது. அம்பாளுடைய தாடங்கம் அற்புதமானது. அகிலாண்டேசுவரியாக இருக்கக்கூடிய திருவானைக்கா அம்பாளுக்கு, ஆசார்யர் பகவத்பாதர் தாடங்கங்களை அணிவித்தார். அவற்றில் இருப்பதேகூட ஸ்ரீ சக்கர வடிவம்தான். ஸ்ரீ சக்கரத்தைத்தான் அகிலாண்டேசுவரி தாடங்கங்களாக அணிந்துகொண்டிருக்கிறாள். அந்த ஊரின் மிக விசேஷமான அம்சமே அதுதான்.

காதில் ஏன் தாடங்கங்களைப் போட்டார் - அவற்றுக்கு ஸ்ரீ சக்கர வடிவத்தை ஏன் கொடுத்தார்...? இதற்கு மஹா ஸ்வாமி ஒரு விளக்கம் சொல்லுவார்: 'எதையுமே அம்பாள் காதிலே போட்டுவிட வேண்டும்!'' என்பார் அவர்!

ஒருத்தரது காதில் போடுவது என்றால் என்ன...? ஒரு பிரார்த்தனை அல்லது கோரிக்கை இருக்கிறது. அதைச் சம்பந்தப்பட்டவரிடம் சொல்லிவிட

வேண்டும் என்கிறபோது, 'காதில் போட்டு வைப்போம்' என்று கூறுவதுண்டு. இதைத்தான் மஹாஸ்வாமி கூறுகிறார்.

இன்னொரு தாத்பர்யமும் உண்டு. திருவானைக்கா அப்பு ஸ்தலம் (நீருக்கு உரிய ஸ்தலம்). காஞ்சிபுரம் பிருத்வி ஸ்தலம் (நிலத்துக்கு உரியது) என்பதால் அங்கே ஸ்ரீ சக்கரத்தை பூமியில் பிரதிஷ்டை பண்ணமுடிந்தது. ஆனால் திருவானைக்காவில் அவ்வாறு செய்தால் தண்ணீர் அடித்துக்கொண்டு போய் விடும் அல்லவா? பின் எங்கே பிரதிஷ்டை பண்ணுவது...? எங்கே போட்டால் தங்கும் என்று பார்த்தார். அம்பாளுடைய காதுகளில் பூட்டினால், நிச்சயம் ஸ்ரீ சக்கரம் நிலைத்துவிடும்;

பிறப்பு என்பது இல்லாதவள்.

**க்ஷயவினிர்முக்தா** - க்ஷயம் என்றால் இறப்பு. இறப்பைக் கடந்தவள். பிறப்பும் இலி; இறப்பும் இலி! அஜா என்ற சொல் வேறொரு இடத்தில் அஞ்ஞானம் என்கிற பொருளில் வருகிறது. ஆனால் இங்கே பிறப்பில்லாதவள் என்கிற பொருளில் வருகிறது. ஒரே சொல் எந்த இடத்தில் வருகிறது என்பதைக் கொண்டு பொருள் மாறுபாட்டை நாம் உணரவேண்டும். இங்கே **அஜாவுக்கு** அடுத்து **க்ஷயவிநிர்முக்தா** வருவதால் அஜாவுக்குப் பிறப்பு என்று பொருள் கொள்ள வேண்டும். இரு நாமங்களும் சேர்ந்து, ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள் அம்பிகை என்பதை உணர்த்தும். முக்தா என்றால் முக்தி

**அர்த்தநாரிக்கு தங்க பீடம்**
**நவரத்தின சிம்மாசனம் வேண்டாம்.**
**நம் மனசுக்குள் சின்ன இடம் போதும்!**

அம்பாள் அதையே தன்னுடைய நிலையமாகக் கொண்டு விடுவாள் என்பதற்காக, அகிலாண்டேசுவரிக்குத் தாடங்கங்களை செய்யவைத்து அணிவித்தார்.

அத்தகைய தாடங்கங்கள்தான் கனகத்தால் (தங்கத்தால்) ஆனவை - ஜொலி ஜொலிக்கின்றன என்பதைக் குறிக்கும் நாமம் **கனத்கனகதாடங்கா.**

## விளையாட்டும் வியத்தகு மேன்மையும்

**லீலாவிக்ரஹதாரிணி** - எல்லாவற்றையும் விளையாட்டாகவே செய்யக் கூடியவள். விளையாட்டாக ஸ்வரூபமும் எடுக்கக்கூடியவள்.

**அஜா** - ஜன்மம் இல்லாதவள். ஸ்வரூபிணியாக இருப்பவள்.

## ஹ்ருதய கமல வாஸினி

**க்ஷிப்ரபிரஸாதினி** - ரொம்ப சீக்கிரமாக, கேட்டவுடனே பிரசாதத்தை - விரும்பியதைக் - கொடுத்து விடுவாள்.

**அந்தர்முகஸமாராத்யா** - நம் உள்ளுக்குள்ளேயே அந்தரியாக இருந்து வருபவள்; உள்ளேயே ஆராதிக்கப்படக் கூடியவள். தகராகாசத்தில் வைத்து, அவரவர் ஹ்ருதய கமலத்தில் வைத்து வழிபட்டாலே போதும். அவளுக்குத் தங்க பீடம் நவரத்தின சிம்மாசனமெல்லாம் வேண்டாம். நம் மனசுக்குள் இருக்கிற சின்ன இடத்தையே தன் இடமாக ஏற்று வீற்றுவிடக்கூடியவள்!

(வளரும்)

# அவர் எனக்குத் தம்பி... இவர் எனக்குத் தோழி..!

வெற்றி பெறவேண்டிய ஓர் ஆட்டத்தில் பஞ்சாப் அணி மோசமாகத் தோற்றுப்போன அந்த இரவு. யுவராஜ் ஐ.பி.எல். பார்ட்டி ஒன்றில் கலந்துகொண்டு தோல்வியை மறந்துகொண்டிருந்தார். இசை ஒரு பக்கம் காட்டு இரைச்சலோடு கத்த, பஞ்சாப் மாடலான அஞ்சல்குமாரை ஒரு கையால் அணைத்தபடி ஆடிக் கொண்டிருந்தார். 'மும்பை மிரர்' பத்திரிகை புகைப்படக்காரர் இருவரையும் பார்த்து விட்டுப் புகைப்படம் எடுக்கத் தயாரானார். 'பாஸ், படமெடுக்க வேண்டாம். இவர் என் கேர்ள் பிரெண்ட்' என்று தடுத்திருக்கிறார் யுவராஜ். கையில் கேமரா வைத்திருந்தவர் ஒரு பத்திரிகைப் புகைப்படக்காரர் என்பது யுவராஜுக்குத் தெரியாமல் போய்விட்டது.

ஆனால், அடுத்தநாள் மும்பை மிரர் பத்திரிகையில் அஞ்சல் குமாரை யுவராஜ் சிங் அணைத்தபடி இருந்த புகைப்படம் வெளிவந்தது. உடனே இந்தச் செய்தி எல்லா பத்திரிகைகளிலும் பிரசுரமானது. யுவராஜ் கடுப்பாகிவிட்டார். தன்னுடைய டுவிட்டரில், 'அஞ்சல் குமாருடனான புகைப்படம் கண்டு நான் மிகவும் வருத்தமடைந்தேன். காதலெல்லாம் ஒன்றுமில்லை. அவரை ஆறாவதிலிருந்து எனக்குத் தெரியும்' என்று பதில் கொடுத்திருந்தார் யுவராஜ். ஆனாலும் இன்றுவரை பத்திரிகைகள் இதை விடுவதாயில்லை.

**"அஞ்சல்குமார், எனக்கு பள்ளியிலிருந்தே தோழி. அவரோடு என்னை இணைத்து எழுதியது வருத்தமளிக்கிறது" என்றார் யுவராஜ்!**

அதே நாளன்று இன்னொரு ஜோடியும் மாட்டியது. மல்லய்யாவின் மகனான ஆதித்யா மல்லய்யாவும் புகழ்பெற்ற பாலிவுட் நடிகையான தீபிகா படுகோனேவும் ஒன்றாக அமர்ந்து பெங்களூரு-பஞ்சாப் அணிகளுக்கிடையே நடந்த ஆட்டத்தைப் பார்த்தார்கள். தீபிகா படுகோனே, 'எங்களுக்கு லக்கியான நடிகை' என்று ஆட்டத்தில் வெற்றி

* ஆதித்யா - தீபிகா





## ஐ.பி.எல். ஜோடிகள்

முடியும். கிசுகிசுக்கள் என்னைப் பாதிப்ப தில்லை. நான் எப்போ தும்போல இருப்பேன்' என்று கிசுகிசுவுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார் தீபிகா.





* யுவராஜ் - ப்ரீத்திஜிந்தா



* அஞ்சல் குமார்- யுவராஜ்

பெற்ற பிறகு பேட்டி கொடுத்தார் மல் லய்யாவின் மகன். பிறகு பேசிய தீபிகா வும், இனிமேல் பெங்களூரில் நடை பெறும் எல்லா ஐ.பி.எல். ஆட்டங் களிலும் தாம் கலந்துகொண்டு பெங் களூர் ராயல் சேலஞ்சர் அணியை உற் சாகப்படுத்தப் போவதாகக் கூறினார். அவ்வளவுதான். இவர்களை இணைத்து செய்திகள் கிளம்ப ஆரம்பித்தன. 'அடடா... கஷ்டப்பட்டு ஆடியது பெங்களூரு அணி. நான் எப்படி லக்கியாக இருக்க

பஞ்சாப் அணியை வாங்கியிருக்கும் ப்ரீத்தி ஜிந்தாவும், யுவராஜும் காதலர்கள் என்பது முதல் ஐ.பி.எல்-லிருந்தே வருகிற செய்திகள். மைதானத்தில் யுவராஜும் ப்ரீத்தியும் ஆரத்தழுவிக்கொள்வதில் பல ருக்கும் காதில் புகை வந்தது. ஆனால், ப்ரீத்தி ஜிந்தா இதைத் திட்டவட்டமாகவே மறுக்கிறார். 'அட, யுவராஜ் எனக்குத் தம்பி மாதிரி. அணியில் உள்ள அனைவரும் ஒற்றுமையாக ஒரு குடும்பம்போல இருக் கிறோம்' என்கிறார். ○



# இந்திரா பார்த்தசாரதி

# நீயுமா ப்ரூட்டஸ்?

'எனக்கு முன்னால் போகாதே
நான் உன்னைப் பின்
தொடர்ந்து வருவதாக இல்லை
எனக்குப் பின்னால் வராதே
நான் உன் தலைவன் அல்லேன்
நாமிருவரும் நண்பர்களாகவே இருப்போம்
என்னுடன் சேர்ந்து வா'

- ஆல்பர்ட் காமு

**கா**தலுக்குப் பிறகு நட்பைப் பற்றிப் பேசுவதுதான் விவேகமானது. காதலர்களும் அடிப்படையிலே சம உரிமைகளுடன் நண்பர்களாக இருத்தல்தான் உண்மையான காதலின் இலக்கணம். கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனுந்தான் முதல் நண்பர்களாக இருக்கமுடியும்.

திருவள்ளுவரும், 'நட்பை'ப் பற்றி ஐந்து அதிகாரங்கள் 'பொருட்பாலி'ல் கூறுகிறார். 'பொருட்பாலில்' சொல்லக் காரணம் இந்த நட்பு அரசியலைச் சார்ந்த நட்பு. 'அமாத்தியா' என்ற சமஸ்கிருதச் சொல்லினின்றும் வந்தது, 'அமைச்சர்' என்ற தமிழ்ச் சொல். 'அமாத்தியா' என்றால் 'நெருங்கி இருப்பவர்' என்று பொருள். வள்ளுவரும், 'உழையிருந்தார்' (பக்கத்திலிருப்பவர்கள்) என்று குறிப்பிடுகிறார். அமைச்சர்கள் நண்பர்களாக இருந்து, அரசனுக்கு இடித்துச் சொல்லவேண்டிய சமயங்களில், அவ்வாறு சொல்லத் தயங்கக்கூடாது.

நட்புக்கு அடிப்படை, நண்பர்கள் ஒத்த அலைவரிசையில் சிந்திப்பவர்களாக இருக்கவேண்டும். ஒத்த அலைவரிசையில் சிந்திப்பவர்களுக்கு ஒரே விதமான கருத்துக்கள் தாம் இருக்கவேண்டுமென்ற அவசியமுமில்லை. மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், நண்பர்கள் இருவரும் ஒருவருடைய கருத்துக்களை மற்றவர் மதிக்கத் தெரிந்தவராக இருப்பதுதான் உண்மையான நட்பு. விவாதிக்கலாம். வேறுபடலாம். ஆனால் தன்முனைப்பு (egoism) இந்த நட்பில் குறுக்கிடக்கூடாது.

'புணர்ச்சிப் பழகுதல் வேண்டா
உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்'

என்பது குறள். நண்பர்கள் என்றால் ஒரே நாட்டினராகவோ, அடிக்கடிச் சந்தித்துப் பழகுகின்றவராக இருக்க வேண்டுமென்றோ அவசியமில்லை. ஒரே அலைவரிசையில் சிந்திப்பவராக இருந்தால் போதும். இதுவே நட்பு என்ற உரிமையைத் தரும்.

**இ**தற்கு உதாரணமாக, சோழ நாட்டைச் சேர்ந்த கோப்பெருஞ் சோழனுக்கும், பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலவர் பிசிராந்தையாருக்கும் இடையே நிலவி வந்த, நட்பைக் குறிப்பிடுகிறார் பரிமேலழகர் தம் உரையில். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்ததேயில்லை.

கோப்பெருஞ்சோழனுடைய மகன்கள் பதவி ஆசையினால் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டு, ஆட்சியைக் கைப்பற்றப் போர் தொடுக்கிறார்கள். அன்றும் இன்றும்

அரசியல் என்றால் ஒரே மாதிரிதான் இருக்கும் போலிருக்கிறது. கோப்பெருஞ்சோழன் புண்ணிய திசையாகிய வடக்கு நோக்கி உட்கார்ந்து, பட்டினி விரதமிருந்து உயிர் துறக்கத் தீர்மானிக்கின்றான். அப்பொழுது அவன் அமைச்சர்களிடம், அவனுடன் தாமும் உயிர்த் தியாகம் செய்யப் பிசிராந்தையார் வருவார் என்று சொன்னது போலவே, புலவரும் அங்கு வருகின்றார். அரசனுக்கும் புலவருக்குமிடையே இருந்த ஒத்த உணர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட இம் 'மனவழிப் புரிதலையே' (telepathic understanding) நட்பு என்று கொள்ளல் வேண்டுமென்கிறார் பரிமேலழகர்.

பிசிராந்தையாருக்கோ குடும்பப் பிரச்னை ஏதுமில்லை. 'நீங்கள் வயது முதிர்ந்தவர் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். இருந்தாலும், உங்கள் தலைமுடி ஒன்றுகூட நரைக்கவில்லையே, என்ன காரணம்?' என்று சோழன் அவையிலிருந்தவர்கள் வினவினார்கள். இந்தக் காலத்துக் கவிஞராக இருந்தால், தொலைக்காட்சிச் சானல்களில்



* ப்ருட்டஸ்



தாம் இன்ன கம்பெனி முடிச் சாயத்தைப் பயன்படுத்துவதாகக் கூறி, கவிதைச் சம்மானத்தைக் காட்டிலும் விளம்பரத்துக்கான அதிகச் சம்மானத்தைப் பெறக்கூடும். ஆனால், பிசிராந்தையார் கூறுகிறார். 'என் மனைவியும் குழந்தைகளும், குணங்களிலும் கல்வி கேள்விகளிலும் சிறந்தவர்கள்' என்று. இதற்கு என்ன அர்த்தம்? குடும்பத்தால் அவருக்கு எந்த விதமான மன உளைச்சலுமில்லை (no stress.) அதனால் முடியும் நரைக்கவில்லை. ஆனால், அவர் நண்பனாகிய கோப்பெருஞ் சோழனுக்கோ மன உளைச்சலைத் தவிர வேறு எதுவுமில்லை. ஆகவே, அவன் உயிர்த் தியாகம் செய்யப் போதுமான காரணங்கள் இருந்தன. நண்பனின் பிரச்னைக்காக வருந்தி, தாமும் அவனுடன் வடக்கிருக்கத் தீர்மானிக்கும் பிசிராந்தையாரின் முடிவு நட்புக்கோர் இலக்கணம். அவர் அவ்வாறு வருவாரென்று எதிர்பார்த்து அவருக்காகத் தன் அருகில் இடம் ஒதுக்கச் சொன்ன கோப்பெருஞ்சோழன், நட்பின் கொடுமுடி.

'மன வழிப் புரிதல்' சாத்தியமா, விஞ்ஞான பூர்வமாகச் சரியா என்ற கேள்வி நியாயமானதுதான்.

இந்தியாவில் துறவிகளிடமிருந்து இதைக் கற்றுக்கொண்டு வந்திருந்த யான் (Yan) என்ற போலிஷ்காரர், ஸிங்க்ளர் தம்பதிகளுடன் சில ஆண்டுகள் இருந்ததாகக் கூறப்படுகிறது.



## உலகத்தின் மகத்தான இன்பம், முட்டாள்களி

இருபதாம் நூற்றாண்டில் மிகப் பிரபல அமெரிக்க எழுத்தாளராக இருந்த அப்டன் ஸிங்க்ளர் என்பவர் இதைப் பற்றி ஆய்வுகள் நிகழ்த்தி, 'Mental Radio, does it work and how?' என்ற நூல் எழுதியுள்ளார். இந்நூலின் ஜெர்மன் பதிப்புக்கு மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் முன்னுரை எழுதியுள்ளார். இருவரிடையே ஒத்த உணர்வுகள், ஒரே அலை வரிசையில் இருந்தால், அவர்கள் எத்தனை தூரத்தில் இருந்தாலும், ஒருவர் மனத்தில் நிகழ்வதை இன்னொருவரால் அறிய முடியும் என்கிறார் ஸிங்க்ளர். அவர் மனைவி மேரி ஸிங்க்ளர் இத்துறையில் வல்லுநர்.

அப்டன் ஸிங்க்ளர் இடதுசாரிச் சிந்தனையாளர் (Socialist). ஆகவே, அவர் கூறுவதை அடியோடு நிராகரித்துவிடமுடியுமா என்றும் யோசிக்க வேண்டியிருக்கிறது.

'தத்துவத்துக்கும் அப்பாற்பட்ட பல விஷயங்கள், பூமியிலும் சொர்க்கத்திலும் உள்ளன' ('There are more things in heaven and earth, than are dreamt of in your philosophy') என்று ஷேக்ஸ்பியர் கூறியிருப்பது நினைவுக்கு

வருகிறது.

நம் காவியங்களில், நட்புக்குப் பல உதாரணங்கள் மண்டிக் கிடக்கின்றன. கர்ணன் - துரியோதனன் நட்புக்கு ஈடாக வேறு எதைச் சொல்லமுடியும்?



## கவாசத்தை ஒழித்துவிடுவதுதான்!

கம்பனின் சக்கரவர்த்தித் திருமகன், ஏழை வேட்டுவன் குகனைத் தன் தோழன் என்றும், சீதையை அவன் கொழுந்தி என்றும், இலக்குவனை அவனுடைய தம்பி என்றும் சொல்லி, நட்புப் பாராட்டுகிறான். குகனை இது உவகைக் கடலில் ஆழ்த்துகிறது. பின்னர், பரதன் இராமனைத் தேடிக் காட்டுக்கு வரும்போது, அவனைத் தவறாகப் புரிந்து கொண்ட குகன் கோபத்தில் பொங்கி எழுகின்றான்.

'ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர்
போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும்
வில்லாளோ?
தோழமை என்று அவர் சொல்லிய
சொல் ஒரு சொல்லன்றோ?
ஏழமை வேடன் இறந்திலன் என்று
எனை ஏசாரோ?'

நட்பின் ஆவேசம் குகனை எப்படிப் பேச வைக்கிறது பாருங்கள். 'இந்த ஆற்றைக் கடந்து இந்தப் பரதனால் போய்விடமுடியுமா? இவர்களைக் கண்டு நான் அஞ்சி ஒதுங்கினால், என்னை வீரன் என்றா சொல்வார்கள்? ஒப்பற்ற இராமன் என்னைத் 'தோழன்' என்று ஓர் ஒப்பற்ற சொல் சொன்னாரே. அந்தச் சொல்லுக்கு நிகராகச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? இவர்கள் ஆற்றைக் கடந்து போய்விட்டால், இராமனின் தோழனாகிய குகன் இதைப் பார்த்தும் இன்னுமா இறக்கவில்லை என்று கேட்க மாட்டார்களா?'

'ஆள்கின்றவர்கள் பதவியின் உச்சத்தில் தனிமையாக இருப்பதால், அவர்கள் தங்களருகே அவர்களுடைய நம்பிக்கைக்கு உரிய ஒருவரையோ அல்லது இருவரையோ சம நிலையில் நண்பர்களாக வைத்திருக்க வேண்டும்' என்று கூறும் ஃபிரான்ஸிஸ் பேகன் இதைத் தொடர்ந்து, 'இதனால் ஆள்பவர்களுக்கும் ஆபத்து ஏற்படலாம். அந்த நண்பர்களுக்கும் ஆபத்தாக முடியலாம்' என்கிறார். ஆள்பவனுக்கு ஏற்பட்ட ஆபத்துக்குச் சான்று, ஜூலியஸ் சீஸர், ப்ரூட்டஸ் நட்பு. இதனால்தான் ப்ரூடஸ்ஸால் வெட்டுண்டபோது, ஸீஸர் கேட்கின்றான். 'நீயுமா ப்ரூட்டஸ்?' ஆள்பவனின் நண்பனுக்கு ஏற்பட்ட ஆபத்துக்குச் சான்று, எட்டாம் ஹென்ரிக்கும், தாமஸ் உல்ஸிக்கும் இடையே இருந்த நட்பு. மேரி என்ற முதல் மனைவியிடமிருந்து விவாகரத்துப் பெற, உல்ஸியிடம் நட்புப் பாராட்டி விவாகரத்து ஆனவுடன் உல்ஸியைக் கொன்று விடுகிறான் எட்டாம் ஹென்ரி. உலகத்தில் மகத்தான இன்பம் எது தெரியுமா? 'முட்டாள்களின் சகவாசத்தை ஒழித்து விடுதல்' என்று வள்ளுவர் கூறுகிறார்.

(அடுத்த வாரம்:**மெக்காலேயின் குழந்தைகள்**)

# மனங்கவர் மேங்கூஸ்!

ஹேடன், பயன்படுத்திய பிறகு, மேங்கூஸ் பேட்டுக்கு மவுசு அதிகரித்துவிட்டது! அதென்ன மேங்கூஸ் பேட்?

வழக்கமாகப் பயன்படுத்தப்படும் பேட்டை விடவும் முப்பத்து மூன்று சதவிகிதம் சிறியது. ஆனால், அதன் ஹேண்டில் பெரிதாக இருப்பதால் நன்றாகச் சுழற்றி அடித்து ஆடமுடியும். ஸ்வீட் ஸ்பாட் எனப்படுகிற முக்கியமான பகுதி இந்தப் பேட்டில் அதிகமாக இருப்பதால், பந்து பட்டவுடன் சிக்ஸருக்குப் பறக்கிறது. சிறிய பேட் என்பதால், யார்க்கர் பந்துவீசி எளிதில் அவுட் பண்ண முடியும் என்று நினைத்து விடமுடியாது. இந்தப் பேட்டின் அடிப்பகுதி மிகவும் பலமாக இருப்பதால் யார்க்கர் பந்துகளிலும் சுலபமாக ரன்கள் எடுக்கமுடியும்.

இது 20-20 ஸ்பெஷலிஸ்ட். அதாவது ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் இதைப் பயன்படுத்தமுடியாது. பவுன்சர் பந்துகளை இதில் எதிர்கொள்வது கடினம். மேங்கூஸ் பேட்டை ஹேடனுக்கு முன்பு தில்ஷன், ரைனா, தினேஷ் கார்த்திக் ஆகியோர் பயன்படுத்த நினைத்திருக்கிறார்கள். ஆனால், பயிற்சி ஆட்டத்தின் போது சாதகமான முடிவுகளைத் தராததால், யாருக்கும் ஆட்டத்தில் பயன்படுத்த தைரியம் வரவில்லை. ஹேடனுக்கு அந்தத் தைரியம் வந்ததால் டெல்லியுடனான ஆட்டத்தில் சென்னை சுலபமாக ஜெயித்தது. அதிரடி ஆட்டக்காரர் யூசுஃப் பதானும் மேங்கூஸ் பேட்டுக்கு எதிராகப் பேசுகிறார். 'பந்து பேட்டில் படாவிட்டால் நிறைய சிக்கல்கள் ஏற்படும்' என்கிறார் அவர். 'உண்மைதான். பஞ்சாபுடனான சூப்பர் ஓவரில், ஹேடன் மேங்கூஸ் பேட்டைப் பயன்படுத்தியதால்தான் அவரால் ரன் எதுவும் எடுக்கமுடியவில்லை' என்று சென்னை சூப்பர் கிங்ஸ் ரசிகர்கள் ஆதங்கம் கொள்கிறார்கள்.




* ஹேடன்

அலுமினியம் பேட், இருபக்கமுள்ள பேட், எடை அதிகமுள்ள பேட் என்று கிரிக்கெட்டில் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. மேங்கூஸ் பேட் வலுவாகத்தான் இருக்கிறது. ஆனால், அதைப் பயன்படுத்தத்தான் வலுவான ஆட்டக்காரர்கள் இல்லை. ○

## கல்வெட்டுகள்

# என்ன பிரயோஜனம்?

காலாடிகளும் கயவர்களும், கொள்ளைக்காரர்களாகவும் கொலைகாரர்களாவும் மாறித் தங்கள் திடீர்த் திருவிளையாடல்களை நடத்த முடியாமல் தடுப்பது அரசாங்கத்தின் முக்கியமான கடமையாகும். எந்தக் கட்சி அரசாங்கம் நடத்தினாலும் அந்தக் கடமையை ஏற்று நடத்த வேண்டும். யார் மந்திரியாயிருந்தாலும் அந்தப் பொறுப்பை வகித்தே தீரவேண்டும்.


ஜனநாயக ஆட்சியின் கீழ் ஜனநாயகத்தை நிலை நிறுத்தும் கடமை போலீஸ் இலாகாவினுடையது.

தனிப்பட்ட போலீஸ்காரர் எவரும் லஞ்சம் வாங்குதல் முதலிய குற்றத்தைச் செய்தால், அதற்குரிய தண்டனையை அநுபவிக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டியது மக்களின் கடமை. திறமைக் குறைவினால் தங்கள் கடமையை நன்கு நிறைவேற்றாத போலீஸ்காரர்களைக் குறை கூறுவதற்கும் மக்களுக்கு உரிமை உண்டு.

ஆனால் தேசத்தில் குழப்பத்தைத் தடுத்து அமைதியை நிலை நாட்டும் விஷயத்தில் போலீஸார் தங்கள் மனச்சாட்சிக்கு உகந்த முறையில் காரியம் செய்தால், அவர்களைத் தாங்கி நிற்பது மக்களின் கடமையாகும்.

ஆனால் போலீஸின் தலையிலே மட்டும் பொறுப்பைச் சுமத்திவிட்டு மற்றவர்கள் எல்லாரும் சும்மா இருப்பது மடமையாக முடியும்.

முக்கியமாக, இளைஞர் ஒவ்வொருவரும் 'வஸ்தாத்' ஆகப் பயிலவேண்டும்.



மூளையை வறட்டிக்கொண்டு படித்துப் பரீட்சையில் முதன்மையாகத் தேறுவதினால் மட்டும் என்ன பயன்? பெண்டாட்டி பிள்ளைகளைக் கயவரிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியாதவர்கள் எத்தனை படித்து எத்தனை கெட்டிக்காரர்களாயிருந்துதான் என்ன பிரயோஜனம்?

கடைசியாக, தமிழ்நாட்டுச் சகோதரிகளுக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொள்கிறோம்.

"நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்!" என்றார் கவியரசர் பாரதியார்.

நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு என்னும் பழைய காலத்துப் பெண்மைக்குரிய குணங்களை இக்காலத்தில் அளவறிந்துதான் வைத்துக் கொள்ளவேண்டும்.

- 'திருப்பித் தாக்குங்கள்' கட்டுரையிலிருந்து...
(கல்கி ஆகஸ்ட் 2, 1953)


## அமரர் கல்கி



ப்ரேக்ஃபாஸ்ட் என்பது மிகமிக முக்கியமான காலை உணவு! 'எனக்குப் பயமேயில்லை. டயட்ல இருக்கேன். டைரக்ட் லஞ்ச் சாப்பிடறேன், வெயிட் லூஸ் பண்ணணும்...' என்ற சால் ஜாப்பே வேண்டாம்.

ப்ரேக்ஃபாஸ்ட்டை ஸ்கிப் பண்ணுவது ஒருவித அறியாமை. காலை உணவைத் தவிர்த்தால் நாள் முழுக்க டல்லாக இருக்கும். சோம்பேறித்தனம், டிப்ரஷன் எல்லாமே சேரும் என்கின்றனர் மருத்துவர்

# பழங்களால் ஒரு ப்ரேக்



கள். மூளைக்கு க்ளுக்கோஸ் கொடுப்பதே இந்தக் காலை உணவு தானாம். பட்டினியாகப் பல மணி நேரம் வேலை செய்தால் களைப்பு, கோபம், எரிச்சல் எல்லாமே வரும். தேவையா?

டல் ஹஸ்பெண்டை தூள் ஹஸ்பெண்டாக மாற்றவேண்டும் என்றால் ஹெல்தியான ப்ரேக்ஃபாஸ்ட் கொடுங்கள். டாக்டர்தான் நல்ல ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிடணும்னு சொல்லியிருக்காரே என்று பூரி, உருளை மசால், வடை-போண்டா வித் மூணு சட்னி+சாம்பார், இட்லி - மிளகாய்ப் பொடியுடன் நாலு, சாம்பாரில் முக்கி மூணு, சட்னி வகைகளுடன் ரெண்டு... என்ற ரீதியில் ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிட்டால் ஆஃபிஸுக்குப் போய் வேலை எவ்வாறு பார்ப்பது?

ஸ்கூல் போகும் குழந்தைகள் கண்டிப்பாக ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிட்டுப் பழகவேண்டும். எனர்ஜி கிடைப்பது காலை உணவினால்தான்!

ஹெல்தி ப்ரேக்ஃபாஸ்ட் என்பது ரிச்சான தானியங்கள் + (சிரியல்ஸ் - டீ.வியில் வருவதல்ல). மிதமான புரோட்டீன், + கொழுப்புச் சத்து குறைவு + நார்மல் சிறிதளவு என்ற வகையில் இருக்க வேண்டும்.

**க்விக் ஹெல்தி ப்ரேக்ஃபாஸ்ட்**

**ஈஸி ஃப்ரூட் ஸ்மூதி**

பைனாப்பிள் ஜூஸ் - 1 கப்
வாழைப்பழம் - 3 கட் பண்ணியது
தேன் - 1 டேபிள் ஸ்பூன்
ஐஸ் - 1 கப்

மிக்ஸியில் எல்லாவற்றையும் போட்டு நன்றாக ஸ்மூத்தாகும்வரை ஓட்டவும். பிறகு க்ளாஸில் ஊற்றிக் கடகடவென்று குடித்தீர்களானால் நாள் முழுக்க சியர்ஃபுல்தான்!

வெறும் வயிற்றில் இரண்டு மூன்று முறை காப்பி, டீ, அரை டஜன் க்ரீம் பிஸ்கட்டுகள் என்று லஞ்ச் டயம்வரை இழுக்கடித்தீர்களானால் உங்கள் சிஸ்டம் வீக்காகிவிடும். ரத்தத்தில் சர்க்கரையின் அளவு பயங்கர லோவாகிவிடும்.

கேக், பேஸ்ட்ரீஸ், மூபின்ஸ், பிஸ்ஸா, பர்கர், சிப்ஸ், குர்குரே, சாக்லேட்...

# ஃபாஸ்ட்!

என்று காலைவேளையில் சாப்பிடாதீர்கள். இதிலெல்லாம் கொழுப்பும் சர்க்கரையும் ஏராளம். ஏகப்பட்ட வெண்ணெய், சர்க்கரை, அபரிமிதமான உப்பு (சிப்ஸ் வகைகள்) இதைச் சாப்பிட்டால் பிரச்னைகள்தான் வரும்.

சரி, என்ன சாப்பிடலாம்? பால், பழங்கள், தானியங்கள்தான்! முளைகட்டிய பயறு வகைகள், பழ ஜூஸ், காய்கறி சாலட், கஞ்சி... என வெரைட்டியாக வெட்டலாம்.

ஒரு கப் பழங்கள், ஒரு கப் முளை கட்டிய பயறு சிறிது, உப்பு மிளகு தூவியது. ஒரு க்ளாஸ் பழ ஜூஸ் அல்லது லோ ஃபேட் மில்க் ஒரு க்ளாஸ் என சாப்பிடலாம். டேஸ்ட், சத்து எல்லாமே இருக்கும். செய்யும் நேரமும் சாப்பிடும் நேரமும் மிகக் குறைவு!

**டேஸ்டி ரே**

வொயிட் மைதா பிரெட்டைவிட 'ஹோல் வீட் பிரெட்' மிக நல்லது. இதில் சாண்ட்விச் செய்து வெள்ளரி, தக்காளி, சீஸ் என வைத்துச் சாப்பிட்டால் ஹெலோன்னா ஹெலோன்னா' என்று ரகளையாக நாள் முழுக்கப் பாடலாம்.

வெரைட்டியாகச் சாப்பிடலாம். விதவிதமாக கலர் கலராகப் பழம், காய்கறிகளை நன்றாகக் கழுவி, இஷ்டப்பட்ட டிசைனில் நறுக்கிச் சாப்பிடலாம். மிக்ஸியில் ஜூஸாக அடித்தும் குடிக்கலாம்.

டயமேயில்லை. பறக்கறோம் என்பதெல்லாம் ச்சும்மா... ஒரு பழத்தைக் கடிச்சு, ஒரு டம்ளர் மோர், கஞ்சி குடிக்க எவ்வளவு நேரமாகும்?

ஃப்ரெஷ்ஷான பழங்களான ஆப்பிள், க்ரேப்ஸ், வாழைப் பழம், ஆரஞ்சு, தர்பூஸ்... என எடுத்து கட் பண்ணி ஒரு பெரிய பவுலில் போட்டு மேலே எலுமிச்சை ஜூஸை விட்டுக் கலக்கி ஃபோர்க்கால் எடுத்துச் சாப்பிட்டு பார்த்தீர்களானால், 'எப்படி இவ நாள் முழுக்க குளு குளுன்னு இருக்கா'ன்னு ஆபீஸில் பக்கத்து சீட்டிலிருந்து எதிர்வீட்டுக்கு எஸ்.எம்.எஸ். பறக்கும்.

ஓட்மீல் என்ற ஓட்ஸுக்கு தாராளமாக வோட்டைப் போட்டு முன்னணியிலிருக்கிறது தற்சமயம். இதை எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம். பயங்கரக் கூட்டணி பார்ட்டி! பால், மோர், காய்கறி என எதனுடனும் சேர்ந்துவிடும் ஒரு கம்ப்ளீட் மீல் இந்த ஓட்மீல்!

வேகவைத்த ஓட்ஸ் ஒரு கப்பில் சிறிதளவு ஆப்பிள், வாழைப்பழம் மேலாகக் கொஞ்சம் பாதாம் தூவிவிட்டுச் சாப்பிட்டால் பவர்ஃபுட் இதுதாங்க! தேவையானால் சிறிது தேன் + இலவங்கப் பட்டைப் பொடி (சின்னாமன்) கொஞ்சம் கலக்கலாம்.

டோஃபு(Tofu) என்று சொல்லப்படும் சோயா பனீரையும் காலை உணவில் சேர்க்கலாம். சாண்ட்விச்சில் வைக்கலாம்.

காலை உணவை வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் சேர்ந்து சாப்பிட வேண்டிய உணவு! ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிட்டால் நம் செயல்திறன், பேச்சுத்திறன், நினைவாற்றல், உழைப்பு என எல்லாமே கூடும். ●

லதா சேகர்

முப்பது வருடங்களுக்கு மேல் கடவுள் மறுப்புக் கொள்கையைப் பிரசாரம் செய்து வந்த பேராசிரியர் பெரியார்தாசன், பத்து வருடங்களுக்கு முன் 'நான் நாத்திகன் அல்ல' என்று 'கல்கி'யில் தொடர் எழுதியதன் மூலம் பரபரப்பை ஏற்படுத்தினார். இப்போது இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு அப்துல்லாவாக மாறியிருக்கிறார். அவருக்கு 'சலாம்' சொல்லி சில கேள்விகளை முன் வைத்தோம்.

**ஏன் இந்தத் திடீர் மாற்றம்?**

கடந்த பத்து வருடங்களாக நடந்த என் தேடலின் முடிவுதான் இது. முப்பது வருட காலம் 'கடவுள் இல்லை' என்ற பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்த எனக்குள், 2000ம் வருடத்தில் ஒரு மாறுதல். இரண்டு கேள்விகள் என்னைப் புரட்டிப் போட்டன. ஒன்று, கடவுள் இருக்கின்றானா; இல்லையா என்பது. இல்லை என்றால் எனக்கு எந்தப் பாதகமும் இல்லை. அதைத்தானே நான் பிரசாரம் செய்து வந்தேன். 'இருந்து விட்டால்...?' என்று நினைத்தவுடனேயே மனம் கலங்கிவிட்டது. 'நான் நாத்திகன் அல்ல' தொடரின் இறுதி அத்தியாயத்தில் 'உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பே ஆலயம்' என்ற திருமூலரின் வரிகளைக் குறிப்பிட்டிருப்பேன். கடவுள் மறுப்பு அப்போதே முடிந்துவிட்டது. நாத்திகப் பிரசாரத்தையும் நிறுத்திவிட்டேன். எனக்குள் எழுந்த இரண்டாவது கேள்வி ஒவ்வொரு மனிதனும் இவ்வுலக வாழ்க்கையை முடித்தபின் இறைவனிடம் விசாரணைக்கு உட்பட வேண்டுமா; இல்லையா என்பது. இதை இறுதித் தீர்ப்பு நாள் (இஸ்லாத்தில் கியாமத் நாள்) என்று சொல்வார்கள். அப்படியொரு நாள் இல்லையென்றால் கவலையில்லை. இருந்துவிட்டால் அதற்கு நான் ஆயத்தமாக வேண்டுமே என்ற கவலை தொற்றிக் கொண்டது. எனவே இறைவனைத் தேடி என் ஆய்வுகளைத் துவக்கினேன். நான் இந்து மதத்தில் பிறந்து சேஷாச்சலமாக வாழ்ந்தது இந்துப் பெற்றோருக்குப் பிறந்ததால்தான்.

அடுத்து அறிந்து தெரிந்துகொண்ட,



# “இறையச்சம்

## பெரியார்தாசன் பல்டி

அண்ணல் அம்பேத்கர் ஏற்றுக்கொண்ட புத்த மதத்தைத் தழுவியது என் விருப்பம். ஆனால், இப்போது இஸ்லாத்தில் நான் இணைந்திருப்பது இறைவனின் விருப்பம். எதையுமே ஆய்வு நோக்கத்தில் பார்த்து, படித்துத் தெளிவு பெறுபவன் நான்.

இந்து, கிறித்துவ, புத்த மத நூல்களை முழுக்கக் கற்றிருக்கிறேன். இந்து மதங்கள் கூறும் இலக்கணங்கள் இறைவனுக்கு இருக்கமுடியாது என்பதை உணர்ந்தேன். ஆகையால் இஸ்லாம் கூறும் இறைவனைத் தேடத் துவங்கினேன். திருக்குர் ஆனையும், நபிகள் நாயகத்தின் வாழ்க்கையையும் கலந்த போதனைகளையும் நான்கு ஆண்டுகள் ஆய்வுசெய்தேன். குர்ஆனில் சொல்லப்பட்டவை நேரடியான இறைவனின் வார்த்தைகள் என்பதை உணர்ந்தேன். இது உலக மக்கள் அனைவரையும் வழி நடத்தவே அருளப்பட்டிருக்கிறது.

**பெண்களை அடிமையாகவும் பிற்போக்குத்தனமாகவும் இஸ்லாம் நடத்துகிறது என்ற விமர்சனம் பற்றி...**

''இது போன்ற கருத்துதான் எனக்கும் இருந்தது. இஸ்லாமிய வாழ்க்கை முறை என்பது ஷரியத் சட்டத்தை அடிப்படையாகக்கொண்டது. இது இஸ்லாமிய நாடுகளில் நேரடியான சட்டமாகவும், மற்ற நாடுகளில் இஸ்லாமியர்கள் தங்களுக்குள்ளேயே கடைப்பிடிக்கும் சட்டமாகவும் இருக்கிறது. உண்மையில் சொல்லப்போனால் பெண்களுக்குச் சொத்துரிமையை முதலில் வலியுறுத்தியது இஸ்லாம்தான். குடும்பத்தில் தாயையும், மனைவியையும் கேட்காமல் ஆண்கள் ஒரு சின்ன விஷயத்தில்கூட முடிவெடுக்கக் கூடாது. கணவனைப் பிடிக்காவிட்டால் மனைவி, விவாகரத்துச் செய்ய முடியும். விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்ணுக்கு வாழ்க்கை நடத்த முழுப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இந்த ஷரியத் என்பது திருக்குர் ஆன், நபிகள் நாயகம் வாழ்க்கை, போதனைகள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டது. முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதால் மதமே பிற்போக்கு என்று முத்திரை குத்திவிடுகிறார்கள்.

**இஸ்லாம் மதத்தின் பெருமைகளை, பயங்கரவாதம் சிதைக்கிறதே!**

''உலக அளவில் பார்க்கப் போனால் இஸ்லாமிய கிறித்துவ மோதல் என்பது வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. அந்த வகையில் கிறித்துவ பயங்கரவாதத்துக்கு எதிராக எழுந்ததே இஸ்லாமிய தீவிரவாதம். ஆனால், இந்தியாவில் குறுகிய அரசியல் லாபத்துக்காக இரு மதத்தாரிடையே துவேஷமும், வெறுப்பும் வளர்க்கப்படுகின்றன. இதனால் சில இளைஞர்கள் திசை மாறுகிறார்கள். ஒரு சிலரின் செய்கைகளுக்காக ஒரு மதத்தையே கண்டிப்பது அநியாயம். ஒரு இஸ்லாமிய சகோதரருக்கு மத அடிப்படையில் ஐந்து கடமைகளை நிறைவேற்றவேண்டும். அதில் வன்முறைக்குச் சிறிதும் இடம் கிடையாது. வழி தவறுபவர்களைத் திருத்தும் பொறுப்பு இஸ்லாமிய மதப் பெரியவர்களுக்கு இருக்கிறது.

**இனி உங்கள் பயணம்?**

''இறையச்சம் வந்த பிறகு யாரைக் கண்டும் எதற்கும் அஞ்சமாட்டேன். இனி என் பிரசாரம் அல்லாவின் புகழ் பாடுவதாகவே இருக்கும். மற்றபடி பெரியார் கொள்கைளான பெண் சுதந்திரம், சுயமரியாதை, மூடநம்பிக்கைகளை எதிர்த்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து வலியுறுத்திப் பேசுவேன்.''

– ப்ரியன்

# வந்துவிட்டது!”


# பாதசாரி

"இது வெறும் லெக்சர் இல்லை; உயர்ந்த லிட்ரேச்சர்!'' என்று கோபாலகிருஷ்ண காந்தியின் சிறப்புரையைச் சிலாகித்தனர் பார்வையாளர்கள். மேற்கு வங்க முன்னாள் கவர்னர் தமது கையில் வைத்திருந்த உரையின் வரி வடிவத்தைச் சூட்டோடு சூடாக வாங்கிச் சென்று நகலும் எடுத்துக்கொண்டனர் பலர்! காந்திஜி-ராஜாஜியின் பேரன்; தேவதாஸ்-லக்ஷ்மியின் மகன் என்கிற பின்னணியுடன் அமைதியும், உள்ளத்தின் மாண்பும், தனித்தன்மை மிக்க சிந்தனையும் இணைய, பாதசாரி *(The Pedestrian)* என்ற தலைப்பில் கோபாலகிருஷ்ண காந்தி ஆற்றிய உரை, மென்மையான குரலில் வலிமையான கருத்துகளைப் பதிவு செய்தது.

ஆண்டுதோறும் கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளையினர் ஏற்பாடு செய்யும் சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு இவ்வாண்டு பேச்சாளரே தலைப்பைத் தேர்வு செய்திருந்தார். கடந்த 20.3.10 அன்று, சென்னை பாரதிய வித்யா பவனில் நடந்த விழாவில் அவர் நிகழ்த்திய சிறப்புரையின் சாரம்:

**து**ளஸிதாஸர் பாடலில் ராம-லக்ஷ்மணர்கள் கால்நடையாகச் செல்ல, ராவணன் ரதத்தில் பயணம் செய்ததாக ஒரு வரி இடம் பெற்றிருக்கிறது. நம் நாடு, பாரம்பரியமாகவே, கால்நடைப் பயணத்துக்கும், பாதசாரிகளுக்கும் அதிமுக்கியத்துவம் அளித்து வந்திருக்கிறது. உ.வே.சாமிநாதய்யர் கிராமம் கிராமமாக நடந்து தமிழ்ச் சுவடிகளைத் தேடிச் சேகரித்தார். காந்திஜி தண்டிக்கும் ராஜாஜி வேதாரண்யத்துக்கும் (உப்பு சத்யாகிரஹம்) பாத யாத்திரை மேற்கொண்டனர். ஜெய பிரகாஷ் நாராயண், வினோபா பாவே போன்றோர் கால்நடையாகவே தங்கள் இயக்க வேள்வி

* கோபாலகிருஷ்ண காந்தி சிறப்புரை



* இறை வணக்கம்...
எம்.பிரமோத், எம்.பிரபாத்



● அகிலா ஸ்ரீனிவாசன் ● கே.வி.ராமநாதன்





தமது சிறப்புரையின் ஆரம்பத்தில் கோபால கிருஷ்ண காந்தி, விழா நாயகர் கல்கி சதாசிவத்தின் ஆளுமையை ஒரு சொற்சித்திரமாகத் தீட்டினார். சதாசிவத்தின் குண இயல்புகளை நன்கு அறிந்த அன்றைய பார்வையாளர்கள் அச் சித்திரத்தை ரசித்து, தங்கள் மனச் சித்திரத்தோடு ஒப்பு நோக்கி மகிழ்ந்தனர்.

## விழா.நாயகர்

களை நடத்தினர்.

ஆனால், இன்று நம் நாடு பாதசாரி இந்தியா என்கிற நிலையிலிருந்து வாகன தேசமாக மாறிப்போயிருக்கிறது. பாதசாரிகளின் எண்ணிக்கைதான் இங்கு அதிகம் என்றாலும் வாகன இந்தியாவே ஆதிக்கம் செலுத்துகிறது.

ஸ்காண்டிநேவியா என்ற மூன்று நாடுகளாலான ஐரோப்பிய பகுதியில் முடியாட்சி சூழலிலும் பாதசாரிகளே மன்னர்களாக இருக்கிறார்கள். மன்னர் பொறுப்பில் இருப்போரும்கூட அங்கே சாலைகளில் நடந்து செல்வதுண்டு. ஒரே ஒரு சராசரிக் குடிமகன் சாலையைக் கடக்க விரும்பினால் கூட, அந்த நாடுகளில் அத்தனை வாகனங்களும் நின்று வழிவிடும்.

இந்தியாவோ ஜனநாயக நாடு. இங்கே பெரும்பான்மைப் பிரிவினரின் கையல்லவா ஓங்கவேண்டும். ஆனால், பாதசாரி இந்தியாதான் வாகன இந்தியாவுக்கு வணக்கத்துடன் வழிவிட்டு நிற்கிறது! 'பெடஸ்ட்ரியன் கிராஸிங்' என்று பாதசாரிகளுக்காகவே ஏற்பட்டுள்ள பாதைகளில் கூட, வாகனங்களின் அச்சுறுத்தல் இன்றி நிம்மதியாக ஓர் இந்தியப் பாதசாரி நடக்கமுடியாது. கிராஸிங் குறியீடு இல்லாத சாலைகளில் ''என்ன கண்ணாடி! வண்டி வர்றது தெரியல?'' என்று வசவு கேட்க நேரும்!

முன்னேறிய நாடுகளில் பாதசாரிகளுக்கு உரிமைகள் இருக்கின்றன. இந்திய பாதசாரிக்கோ அதிர்ஷ்டமிருந்தால் வழி கிடைக்கும். ஏன் இந்த வேறுபாடு?

இந்திய சமுதாயம் ஏழைமையிலிருந்து மெல்ல தன்னை விடுவிக்க முயன்று கொண்டிருப்பதால், ஒரு வாகனம் என்பது அதை ஓட்டுபவரின் ஆதிக்க அடையாளமாகக் கருதப்படுகிறது. அவருடைய பொருளாதார வளர்ச்சி, தன்னம்பிக்கை, தன்னுணர்வு ஆகியவற்றின் வெளிப்பாடு! சைக்கிளிலிருந்து டூ வீலருக்கும், அதன் பிறகு கார் அல்லது லாரிக்கும் முன்னேறுவது (லைசன்ஸ் பெறாவிட்டாலும்கூட!) இந்திய இளைஞனுக்கு

# காட்டும் பாதை!



* கல்கி - சதாசிவம் அன்பர்கள்...

வளர்ச்சியின் அடையாளம். இந்தப் பந்தயத்தில் ஓடிக்கொண்டேயிருக்கிறது வாகன இந்தியா. யார் ஜெயிப்பார்கள், இறுதியில்?

பல விஷயங்களில் முதன்மையாக இருக்கும் இந்தியா, சாலை விபத்துகளிலும் உலகின் நம்பர் ஒன்னாக இருக்கிறது. மிக அதிக மரணங்கள் இந்தியாவில்தான். (உலக அளவில் பத்து சதவிகிதம்.) உயிரிழப்போர் பெரும்பாலும் பாதசாரிகள்தான்; வாகனம் ஓட்டுவோர் அல்ல. இதற்குப் பல சமயங்களில் பாதசாரியேதான் காரணமாகிறான். அவன் சாலை விதிகளைக் காட்டிலும் தன் அதிர்ஷ்டத்தை நம்பித்தான் சாலையில் நடக்கிறான்!

சைதாப்பேட்டையில் மாநகராட்சி அமைக்கவிருந்த பாதசாரிகளுக்கான நடைபாலப் பணி தொடங்கப்படவேயில்லை. காண்டிராக்ட் வழங்கப்பட்டுப் பல மாதங்கள் ஆகிவிட்ட நிலையிலும் பாதசாரிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து, ஓயாத வாகனப் போக்குவரத்துக்கு இடையே சாலையைக் கடக்கிறார்கள் - என்று ஒரு செய்தி. அதே நாளிதழில், டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் லாபம் புதிய சிகரத்தைத் தொட்டுள்ளதாக இன்னொரு செய்தி!

சென்னை விரைவில் இந்தியாவின் டெட்ராய்ட் ஆகிவிடும் என்று படிக்கிறோம். பல்வேறு சர்வதேச நிறுவனங்கள், இங்கே கார் தொழிற்சாலைகள் தொடங்கும் போது பெருமையாகத்தான் இருக்கிறது.

ஆனால், பெருமையினூடே கவலையும் எழுகிறது. உற்பத்தியைப் பெருக்கி, மேலும் மேலும் வாகனங்களை விற்று விற்றுத் தள்ளினால் சாலைகளின் கதி என்ன? சுற்றுச்சூழலின் கதி என்ன? ஏற்கெனவே

## விருது பெற்ற விளம்பரம்!





'சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு சொன்னார்' என ஒன்றுக்கும் உதவாத பேச்சுக்கு உதாரணம் சொல்வது வழக்கம். ஆனால், கையில் சுரைக்காயை வைத்திருக்கும் ஒரு பெண்ணை வைத்தே 'மூவ்' வலி நிவாரணிக்காக 'இக்னைட் முத்ரா' விளம்பர நிறுவனம் உருவாக்கிய அற்புதமான விளம்பரம் 2009ஆம் ஆண்டின் மிகச் சிறந்த விளம்பரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளையின் பத்தாயிரம் ரூபாய் பரிசும், விருது பத்திரமும் பெற்றது. அவற்றை, விளம்பரத்தை உருவாக்கிய 'இக்னைட் முத்ரா' (அகமதாபாத்) நிறுவனத்தின் சார்பாக, சென்னை முத்ரா கம்யூனிகேஷன்ஸ் எக்ஸிகியூடிவ் ஹரிணி பெற்றுக்கொண்டார். வலி நிவாரணியைத் தயாரிக்கும் பரஸ் ஃபார்மா நிறுவனத்தின் ஏரியா மேனேஜர் தட்சிணாமூர்த்திக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. விருதையும் நினைவுப் பரிசுகளையும் கோபாலகிருஷ்ண காந்தி வழங்கினார். விருதுக்குரிய விளம்பரத்தைத் தேர்ந்தெடுத்த நடுவர்கள், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி கே.வி.ராமநாதன், ஸ்ரீராம் குழுமத்தில் உயர் பொறுப்பு வகிக்கும் அகிலா ஸ்ரீனிவாசன்.

முதலிடம் வகிக்கும் வாகன விபத்து மரணங்களின் போக்கு என்னதான் ஆகும்?

பாதசாரிகளும், சைக்கிள் - டிரைசைக்கிள் போன்ற மாசுபடுத்தாத வாகனங்களை வைத்துக்கொண்டு வீதிகளில் வியாபாரம் செய்வோரும் இந்த வாகனப் பெருக்கத்தால் எப்படியெல்லாம் பாதிக்கப்படப் போகிறார்கள்? அமைப்பு ரீதியான ஒருங்கிணைப்பு இல்லாததால் இந்தப் பாதசாரி இந்தியர்கள், தங்கள் பலத்தையும் உணரவில்லை; அச்சுறுத்தல்களையும் உணரவில்லை. அவர்களுக்காகக் குரல் கொடுக்கவும் நாதியில்லை!

* வரவேற்புரை: ராம்நாராயண்



தொழில் முன்னேற்றம் அவசியம்தான். ஆனால், வாகன உற்பத்தியாளர்களுக்கு, சூழல் மாசுபடுதலைக் குறைக்கும் பொறுப்பும், புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தும் அர்ப்பணிப்புணர்வும் அவசியமில்லையா? இயற்கை வளங்களைச் சூறையாடாத மாற்று எரிபொருள் ஆராய்ச்சியில் ஈடுபடும் பொறுப்பு வேண்டாமா?

ஒரு பக்கம் புவி வெப்பமயமாதலைக் குறைக்க, சர்வதேச அரங்கில் நம் அமைச்சர் உரத்துக் குரல் கொடுக்கிறார். ஆனால், நம் நாட்டுக்குள்ளேயே பாதசாரிகள் புறக்கணிக்கப்பட, வாகன உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் ஒருமுறை குறிப்பிட்டார்: **புதிய தலைமுறைப் பணக்காரர்களின் ஆடம்பரமும், அடக்கமற்ற காட்சிப்படுத்துதலும் நம் நாட்டு ஏழைகளின் இயலாமையையும், கையாலாகாத உணர்வையும் தூண்டிக்கொண்டிருக்கின்றன. நம் சமுதாயத்தில் ஒரு பாதியினர் குளிர்பான கலாசாரத்தில் மூழ்கியிருக்க, மறுபாதியினர் கலங்கிய குட்டைகளிலிருந்து ஒரு கை தண்ணீர் பெற்று திருப்திகொள்ள வேண்டியிருக்கிறது. தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற முப்பிரிவு மெகா சாலையில் பாதசாரிகள் நடக்கவும், கடக்கவும் பாதுகாப்பான வழித்தடங்கள் அவசியம். அதிகாரம் பெறாத பிரிவினரின் வாய்ப்புகள் தொடர்ந்து மறுக்கப்பட்டால் அபாயமே விளையும். சாது மிரண்டால்... என்ற பழமொழியை நாம் மறக்கலாகாது. ஒடுக்கப் படுபவன் ஒருநாள் சீறி எழுவது நிச்சயம்.”**

* கல்கி ராஜேந்திரன், கோபாலகிருஷ்ணா காந்தி, ஹரிணி, தட்சிணாமூர்த்தி



* பத்தாயிரம் ரூபாய் பரிசும் விருது பத்திரமும்

கே.ஆர்.நாராயணன் சுட்டிக் காட்டிய இந்தப் பாகுபாடு நிரந்தரமாகி நம் தேசத்தைப் பிளந்துவிடக் கூடாது. இன்று அதிகாரம் படைத்தவர்களாக இருக்கும் பலர், சமீபகாலம்வரை ஒடுக்கப்பட்ட பிரிவின் அங்கத்தினர்களாக இருந்தவர்கள்தான். சைக்கிள் ஓட்டியவன் லாரி வாங்கும்போது ஏற்படும் 'தோரணை'தான் இவர்களுக்கு ஏற்படுகிறது!

அரசியல் ஆதிக்க வர்க்கத்துக்கு வெளியே, இந்தியா ஆண்-பெண் என்ற

பாகுபாடால் பிளவுபட்டிருக்கிறது. இரண்டாவது பெரிய பாகுபாடு பாதசாரிக்கும், வாகன இந்தியாவுக்கும் இடையேயானது. பெண்களுக்கான தொகுதி ஒதுக்கீடு மசோதா, முதல் பாகுபாட்டை நேர் செய்யக்கூடிய முயற்சி. ஆனால், பாதசாரிக்கு ஒதுக்கீடு பயன்தராது. அவனைப் புறக்கணித்து, ஒதுக்கி வைப்பதை நம் அரசும், நீதித்துறையும், சட்டம் ஒழுங்கு பிரிவும் முதலில் நிறுத்த வேண்டும்.

நாடு நகரத்தில் இருப்பவர் மட்டுமே பாதசாரிகள் அல்ல. காடு, கிராமங்களிலும் அவர்கள் அடர்ந்திருக்கிறார்கள். அவர்களது வருத்தம் வன்முறையாக மாற வழிவகுத்துவிடக் கூடாது.

சமீபத்தில் மேற்கு வங்கத்தில் மாவோ இயக்கத்தினர் தாக்கியபோது முன்னணி வகித்தவர் ஒரு பெண்! அவர் வழி நடத்திய கூட்டத்தினர் மோட்டார் சைக்கிளில் வந்தனர்; கால்நடையாக அல்ல!

அனைத்து இந்தியர்களுக்கும் சம வாய்ப்பும் உரிமையும் வழங்க சிலரேனும் தங்கள் தேவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். தண்ணீர், மின்சாரம், எரிபொருள் பயன்பாட்டில் ஆதிக்கம் செலுத்தும் நிறுவனங்கள் சில தியாகங்களைச் செய்யவேண்டும். வாகன இந்தியா ஓரளவுக்குப் பாதசாரி இந்தியாவாக மாற வேண்டும். அப்போதுதான் வசதிகளும், வளமும், வாய்ப்புகளும் பரவலாகும்.

பாதசாரி இந்தியன் தன் வாழ்க்கை முறை மூலம் இயற்கைச் சமநிலைக்கு உதவ, வாகன இந்தியன் புவி வெப்பத்தை விரைவுபடுத்திக்கொண்டிருக்கிறான். இயற்கைச் சீற்றங்கள் நிகழும்போது, பாதசாரியே முதலில் பாதிக்கப்பட்டாலும் வாகன இந்தியன் தப்பமுடியாது!

'நமது கடைசி நூற்றாண்டு' என்ற நூலில் லார்ட் மார்டின் ரீஸ் சொல்கிறார்: **"சமுதாயம் என்று நாம் இன்று அறியும் அமைப்பு, பயங்கரவாதம், தொழில்நுட்பப் பிழைகள், புவிவெப்பப் பாதிப்பு... ஆகியனவற்றிலிருந்து தப்பி, தழைக்கும் வாய்ப்பு ஐம்பது சதவிகிதமே இருக்கிறது!"**

வாழ்க்கை முறை மாற்றங்களுக்கும், சிந்தனை மாற்றங்களுக்கும் வழி வகுப்போம் - மனமாற்றம் மூலமாக. பாதசாரி இந்தியன் நமக்கு வழிகாட்ட அனுமதிப்போம்.

**- எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **ஸ்ரீஹரி**



## ஊக்கம் தரும் உதவித்தொகை!

**வி**ஸ்காம் பட்டப் படிப்பு மாணவ, மாணவியர் ஐந்து பேர்களுக்கு 'கல்கி சதாசிவம் அறக்கட்டளை'யிலிருந்து தலா ஐந்தாயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியின் வித்யா, சென்னை எத்திராஜ் கல்லூரியின் சித்தாரா, சென்னை லயோலா கல்லூரியைச் சேர்ந்த மெர்வின், சுவ்ரங்கர் சக்ரபர்த்தி, கோவை பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரியின் வாசுகி பிரியா... ஆகியோர் உதவித்தொகை பெற்றனர்.

# கச்சேரி ஆரம்பம்



எதைக் கேட்டாலும், கேட்காமலும் அள்ளிக் கொடுக்கும் பாரி ஒரு கட்டத்தில் அப்பா கோபப்படுவதால் சென்னைக்கு வருகிறார். பிரபல ரவுடி ராயபுரம் சிவமணி மதியை மூன்று வருடமாக சின்சியரா லவ் பண்றார். ஆனால் மதிக்கு ராயபுரம் சிவமணியை கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. இப்பிரச்னையிலிருந்து மதியை மீட்டெடுத்து கைப்பிடிக்கிறார் பாரி.

- பாரியாக ஜீவா. காதல், காமெடி, சண்டை என ட்வொன்டி ட்வொன்டி மேட்சுக்கு நடுவே செஞ்சுரி அடித்திருக்கிறார். நீபாவலியாக வடிவேலு தியேட்டரில் தவுசண்ட்வாலா சத்தமுங்க தலைவா.
- தகிக்கும் கத்திரி வெயிலுக்கு மதியாக பூனம்பஜ்வா பாடல் காட்சிகளில் வெள்ளரிப் பிஞ்சு. ஒரு கவர்ச்சிப் பாடலுக்கு நிஷா கோத்தாரி அவங்க வெள்ளரிப் பழம் தலைவா. ஜே.டி. சக்கரவர்த்தி வில்லன் என்றாலும் நல்லவர் போலவே தெரிகிறார்.
- கச்சேரி எனப்பெயர் வைத்துவிட்டு நாளில்லாமலா என்பதுபோல் டி.இமான் பாடல்களிலும், பின்னணி இசையிலும் வெளுத்து வாங்கியிருக்கிறார். வாழ்த்துகள் இமான்.
- பாடல் காட்சிகளில் சோலக்காடு முதல், தண்ணி தொட்டிக்குள் நடக்கும் கடைசி சண்டை வரை வைத்தியின் கேமரா நேர்த்தியாய்ப் பதிவுசெய்திருக்கிறது.
- பூனம்பஜ்வா தோன்றும் ஆரம்பக் காட்சிகளில் பலூன், பூ, சோப்புநுரை, ரப்பர் பந்தெல்லாம் காட்டுறீங்க. இதெல்லாம் எந்தக் காலத்து ஸ்டைலுங்க திரைவண்ணன்?
- சீரியஸ் வில்லன் காதல் தண்டபாணியை காமெடியனாக்கியிருப்பது மருந்துக்குக்கூட எடுபடவில்லை.
- ஈ.சி.ஆர் ரோட்டில் இனோவா கார் போல் புறப்படும் திரைக்கதை ஆங்காங்கே பழைய பல்லவன் பஸ் போல் தடதடக்கிறது.
- கடைசியில் இயக்குனர் ஏதோ சொல்வார்னு நெனைச்சா, 'கடம் எந்திருக்க போங்க' என்கிறார்.

**'கச்சேரி' கமர்ஷியல் கேசரி!**

**- பொள்ளாச்சி ராஜ்குமார்**



# கிரேஸியைக் கேளுங்கள்!

● ஜனனி, டெல்லி.

*ஐ.பி.எல். மேட்சில் யார் ஜெயிப்பார்கள்..?*

என்னைக் கேட்டால், "சென்IPL"

● விஜயலக்ஷ்மி வெங்கடேசன், கொட்டிவாக்கம்

*ELAC வாட்டர் ஹீட்டர் விசில் விளம்பரம் வெகு அருமை... சொந்த ஐடியாவா?*

ஹீட்டர் விளம்பரம் என்பதால் 'சுட்ட- ஐடியா' என்று நினைத்து விட்டீர்களா? ஜிலு ஜிலுவென இயக்கிய நண்பன் காந்தனின் சொந்த ICEடியா!

● சிவகாமி, பெங்களூர்

*சாமியார்களுக்குச் சபலம் வரலாமா...?*

கானகத்தில் கண்மூடி
மோனத் தவமிருந்தோன்
மேனகையால் மோட்சம்
இழந்தான்காண் - ஞானப்
பழம்நழுவிக் காமத்துப்
பாலில்மெய் சோர்ந்து
விழவைக்கும் மன்மதன்
வில்

● ஆ.கேசவன், இனாம்மணியாச்சி

*ஆங்கிலத்தில் சின்ன a,b,c,d... பெரிய A,B,C,D.... இருப்பது போல தமிழில் சின்ன அ ஆ... ஏன் இல்லாது போனது...?*

வெள்ளைக்காரர்களுக்கு மற்றவர்கள் CAPITALஐ கைப்பற்றும் மோகம் ஜாஸ்தி; நமக்கு அந்தச் சின்ன புத்தி கிடையாது.

● பா.அசோக், விருதுநகர்

*உங்கள் வீட்டில் துணி துவைப்பது நீர்தானே?*

சந்தேகம் வேண்டாம்; 'நீர்'தான்!

● வி.ஜி.சத்தியநாராயணன், நங்கநல்லூர்

*வில்லி யார்? மாமியாரா..? மருமகளா?*

சண்டை போட்டுக்கொள்ளும் இருவருமே வில்லிகள்; மாமியார் வில்... மருமகள் நாண்... எய்தவர்கள் இருக்க மாட்டிக்கொண்டு முழிக்கும் கணவன் கணையவன்!

● மதுரை முருகேசன், தஞ்சாவூர்

*சபரிமலை செல்வோரும், கடவுளை மறுப்*





பேரும் அணியும் கருப்பு உடை குறித்து...?

ஒன்று கடவுள் விரதம்; மற்றொன்று கடவுள் விரோதம்!

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

அடிக்கடி எரிந்து விழுகிறார்களே சிலர்...?

எரிந்து விழுந்தால் அணைத்துப் பிடியுங்கள்; குளிர்ந்து எழுவார்கள்!

● எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

ஊனக்கண்... ஞானக் கண் என்கிறார்களே, கொஞ்சம் விளக்குங்களேன் கிரேஸி?

ஊனக்கண்ணுக்கு Spectacle போட்டுக்கணும்; ஞானக்கண் Spectacular கண்!

● பி.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி

உங்களுக்குப் பிடித்த தத்துவம்...?

பாதி பிலாஸஃபி வாய்ச்சொல் வீரர்களின் 'பிலா'ஸஃபி!

● ஜி.முருகன், சேதுநாராயணபுரம்

தீராத விளையாட்டுப் பிள்ளை யார்?

BATMAN சச்சின் டெண்டுல்கர்!

● அ.அப்துல் காதர், மேற்கு தாம்பரம்.

மிஸ்டர் க்ளீன் என்று யாரைச் சொல்லலாம்?

சோறு போடுபவர்களை; சுத்தம் சோறு போடும்!

● ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

கடலளவு பெரிது காமம் என்கிறார்களே இந்தக் கிழடுகள், அந்தக் காமத்தின் மீது அவர்களுக்கு ஏனிந்த கரிசனம்?

இது கரிசனம் அல்ல. ''ச்சீ இந்தக் கடல் கரிக்கும்'' என்ற கரிச்சனம்!

● பாலசுப்ரமணியன், திருவில்லிப்புத்தூர்

அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதை மாதிரி என்கிறார்களே... இதில் 'அரசன்' யார்?

ஆளை வுடுங்க ஸார். கேள்வியே ரொம்ப 'அரசபுருஷலா' இருக்கு!

# வில்லி யார்? மாமியாரா... மருமகளா...




"'மேஜிக் பனியன்' அதிகமில்லை ஜென்டில்மென்! இருபத்தெட்டுதான்" என்கிறார் காயத்ரி வேணுகோபாலன். "அது என்ன இருபத்தெட்டு?"

"ஆண்களுக்கானது; பெண்களுக்கானது; இருபாலருக்கும் பொதுவானது என்று பல சைஸ்களில் காலர் இல்லாத பனியன், காலர் வைத்த டீஷர்ட் ரகங்கள், குல்லாய், கொடிகள், வாட்டர் பாட்டில், சாவிக் கொத்து, மக், ஃப்ரிட்ஜில் பயன்படுத்தும் காந்தம், ஊதுகுழல், கிரிக்கெட்டர்கள் ஆட்டோகிராஃப் செய்த பேட், பைனாகுலர்... என்று சென்னை சூப்பர் கிங் எம்பளம் பொறித்த பல்வேறுவிதமான பொருட்கள் இப்போது மார்க்கெட்டில் விற்பனைக்கு வந்துள்ளன. தயாரித்து விற்பனை செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது டெல்லியைச் சேர்ந்த ஓஷன் பெட் நிறுவனம்.

* காயத்ரி வேணுகோபாலன்



"எல்லா ஐ.பி.எல். அணிகளும் இப்படி டீஷர்ட்களும், கேப்களும், கூலிங் க்ளாஸ்களும் தயாரித்து விற்பது வழக்கம்தான்; ஆனால், சென்னை சூப்பர் கிங் சார்பில்தான் இத்தனை வெரைட்டியான பொருட்கள் விற்கப்படுகின்றன. வழக்கமாக இளைஞர்கள், குழந்தைகளை மனத்தில் வைத்துக் கொண்டுதான் இத்தகைய ஐட்டங்கள் விற்பனை செய்யப்படும். ஆனால், இந்த முறை ஒட்டுமொத்த குடும்பத்தையும் இலக்காக வைத்து, பொருட்கள் உருவாக்கப்படுகின்றன" என்கிறார்.

"மைலாப்பூரில் ஒரு வயதான பெண்மணி பத்திரிகைகள் மூலமாக விஷயத்தை அறிந்து கொண்டு காயத்ரிக்கு ஃபோன் செய்து, "என் அப்பா அதிதீவிரமான கிரிக்கெட் ரசிகர். மேட்ச் என்றால் டீ.வி.யை விட்டு ஒரு நிமிடம் கூட நகர மாட்டார். அவருக்கு இப்போது உடல்நலமில்லை. இந்த ஐ.பி.எல் சீஸனில் சென்னை சூப்பர் கிங் டீஷர்ட் ஒன்றை அன்பின் அடையாளமாக அவருக்குப் பரிசளிக்க

# சூப்பர்









ஐ.பி.எல். ஸ்பெஷல்

விரும்புகிறேன். ஆனால், என்னால் வீட்டை விட்டு வெளியில் சென்று வாங்க முடியாது. என் வீட்டுக்கு ஒரு டீஷர்ட் அனுப்பி வைக்க முடியுமா?'' என்று கேட்டார். மறுநாள் வீடு தேடிச் சென்று டெலிவரி செய்யப்பட்டது. அந்த முதியவர் சென்னை சூப்பர் கிங் டீஷர்ட் அணிந்துகொண்டு, வீட்டில் மேட்ச் பார்த்த சந்தோஷத்தை சில நாட்கள் கழித்து அந்தப் பெண்மணி நெகிழ்ச்சியோடு சொன்னார்'' என்கிறார் காயத்ரி.

கடைசியாக சூப்பர் கிங் அணிக்காக பிரத்யேகமாகத் தயாரிக்கப் பட்ட ஒரு மேஜிக் பனியனைக் காட்டினார் காயத்ரி. உள்ளங்கைக்குள் அடங்கக்கூடிய சைசில் ஒரு பேக்! ''இதுதான் மேஜிக் பனியன்! சைஸ் எக்ஸ்எல்'' என்ற போது நம்ப முடியவில்லை. பிரத்யேக முறையில் இப்படி அழுத்தி பேக் செய்யப்பட்ட இந்த பனியனைப் பிரித்துத் தண்ணீரில் நனைத்து, சில நிமிடங்கள் ஊறிய பின் பிரித்தால் பெரியவர்கள் அணியக்கூடிய பனியனாக இருக்கும்'' என்று செயல்முறை விளக்கமே அளித்தார் காயத்ரி. சூப்பர்(கிங்) மேஜிக்தான்!

# மேஜிக்!



சென்னை சூப்பர் கிங்ஸ் சின்னம் பொறித்த பொருட்கள், சென்னை, கோவை, மதுரை, ஈரோடு, சேலம், திருச்சி, வேலூர், பெங்களூர், குர்காவும் ஆகிய நகரங்களில் சில பிரத்யேகக் கடைகளில் கிடைக்கின்றன. மேலும் விவரங்கள் www.chennaisuperkings.com மற்றும் www.oceanbed.net பார்க்கவும். உங்கள் ஊரில் சி.எஸ்.கே. பொருட்கள் விற்கும் கடைகள் இல்லாவிடில், இணையதளம் மூலம் ஆர்டர் செய்து வீட்டில் பெறும் வசதியும் உண்டு.




# வாசகர் போட்டி!

- அடிச்சு ஆடறவங்கதான் ஐ.பி.எல். ஸ்டார்ஸ்...
- வேகமும் வேணும்... விவேகமும் வேணும்...
- கணக்குப் போட்டு ஆடினா கப் நிச்சயம்...

இப்படி ஏகப்பட்ட கணிப்புகள் உங்ககிட்ட இருக்கா?
அப்ப நீங்கதான் கரெக்ட் சாய்ஸ்... சொல்லுங்க...

## 2010 ஐ.பி.எல் -லின்

## ஸ்டார் ஆஃப் தி சீரிஸ் யார்?

உங்கள் தேர்வை, உரிய காரணத்துடன், போஸ்ட் கார்டில் எழுதுங்கள். சிறந்த பத்து காரணங்களுக்கு ஓஷன் பெட வழங்கும் சி.எஸ்.கே. டீ-ஷர்ட் பரிசு!

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

**ஸ்டார் ஆஃப் தி சீரிஸ்**
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை-32.

**கடைசித் தேதி: 01.05.2010**

**ஆசிரியர் தீர்ப்பே இறுதி!**

ஐ.பி.எல். செய்திகள்: எஸ்.சந்திரமௌலி, ச.ந.கண்ணன், நளினி சம்பத்குமார், நிலாரசிகன்

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11*. Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.

சித்திரை வருட பிறப்பை முன்னிட்டு
சம்பாவில் தள்ளுபடி விற்பனை
நீட்டிக்கப் பட்டுள்ளது

CHAMPA

# சம்பாவின்
# புதிய வரவுகள்



13.04.2010 வரை மட்டுமே!

30% தள்ளுபடி
குறிப்பிட்ட ரகங்களுக்கு

20% தள்ளுபடி
சல்வார் செட்களுக்கு

10% தள்ளுபடி
மற்ற ரகங்களுக்கு



'கிராண்ட் லுக்'
ஜரிகை வேலைப்பாடுடன்,
வண்ணமயமான
புடவைகளின் ஆலயம்
சம்பா!



திருமணம் போன்ற எல்லா சுபகாரியங்களுக்கும்
நாள் முழுவதும் சம்பாவின் பட்டோ என்று
எல்லோருக்கும் வியக்கும் காட்டன்
புடவைகளை அணிந்து கொண்டாடுங்கள்,
**Grand look Salwar Kameez**-களும் உள்ளன.
சம்பாவிற்கு வாருங்கள்.

**Timings : 11 a.m to 1 p.m. and 3 p.m. to 8 p.m | Sunday Holiday | Visa, Master & BOB Cards Accepted**

**# 5, 3rd Street, Abiramapuram, Chennai - 600 018. Tel : 2499 6907**